சுதேசமித்திரன்



ஒரு புராதன வைத்தியம்

இவ்விதமாகவே நல்ல செய்தி
கள் பரவுகின்றன. உட்வார்ட்ஸ்
கிரைப் வாட்டர் குழந்தைகளை
நன்கு பாதுகாக்கிறது

WOODWARD'S
GRIPE WATER

keeps baby well

1-WW 111-111

W. WOODWARD LTD. LONDON, ENGLAND

பாண்டியன் இன்ஷ்யூரன்ஸ்
கம்பெனி, லிமிடெட்.

(இந்தியாவில் ஸ்தாபிதம் 1933)

தலைமை ஆபீஸ் : மதுரை.

சிறந்த சேவை செய்து வருகிறது.
நெருப்பு, மோட்டார், விபத்து

முதலிய

சகலவித இன்ஷ்யூரன்ஸ் திட்டங்கள்.

மொத்த ஆஸ்திகள் ரூ. 65,00,000.

கிளைகள் : பம்பாய், அகமதாபாத்,
கல்கத்தா.

★

பிரதம ஏஜெண்டுகள் :

ஏ. & எப். ஹார்வி லிமிடெட்,

மதுரை Etc.

கலியாண வெகுமதிகளுக்கு
பல ஊர்
பட்டு & நூல்
ரவுளி ரகங்கள் சாசமாய்
கிடைக்கும் இடம்
ராம விலாஸ்
S.N. ராமஸ்வாமி செட்டி & பிரதர்ஸ், கடை வீதி, சேலம்.

குகன் சோப்புகள்
சுதேசி தயாரிப்பு
சலவைக்கு மிகவும் சிறந்தது.



குகன் இண்டஸ்ட்ரீஸ்... திருப்பூர். S.I.

வைத்தியரத்ன யு. ராமநாத சாஸ்திரிகளின்

ஸித்தமகரத்வஜம்
(தங்கம் சேர்ந்தது.)

அங்கங்களையும் நரம்புகளையும் பலப்படுத்தும். திடசாலியாயும் யௌவனமாயும் இருக்கலாம். 30 மாத்திரை சீசா 1-க்கு ரூ. 7.

மஹாபில்வாதி லேகியம்

பித்தம் அஜீரணம், மலபந்தம் முதலிய வயிற்று கோளாறுகளை உடனே கண்டித்துவிடும். ஒரு சேர் டப்பி 1-க்கு ரூ. 4.

ஸ்ரீ தன்வந்திரி கவசம்

வியாதி, மனோவிசாரம், தரித்திரம், இவைகளை விலக்கி உத்தியோக வியாபார லாபங்கள், காரிய ஸித்தி, ஜனவசியம் இவைகளை அளிப்பதில் அபாரமான சக்தி உள்ளது. இதில் வசீகரண மூலிகை, பிரதி ஸரஸ்வதி ரம், ஸ்ரீதன்வந்தரீ யந்திரம், இவைகளை மந்திர பூர்வமாய் ஸ்தாபிக்கப்பட்டு இருக்கிறது கவசம 1-க்கு ரூ. 3.

ஆனந்த படை நிவாரணி

எல்லாவிதமான் படைகளையும் திரும்பி வராமல் இருக்கும்படி ஒரே வேளையில் போக்கிவிடும். டப்பி 1-க்கு ரூ. 1.

ஆனந்த பற்பொடி

(40 வருஷங்களாக புகழ்பெற்றது.)

சென்னை ஹைக்கோர்ட்டில் உரிமை பெறறது. இந்தியாவில் இது ஒன்றுதான் சிறந்தது. எங்கும் கிடைக்கும். கேட்லாக் இனம்.

ஸகலத்துக்கும் வி. பி. பிரத்யேகம்.

வைத்திய ஸித்தாச்ரமம்
பஜார் ரோட், மைலாப்பூர், மதராஸ்

சக்தி ஆருடம்!

சென்னை சர்க்கார் மீன் இலாகா, கெஜட்பதவி உத்தியோகத்திலிருக்கும் Sri S. V. கணபதி (Hydrologist) 7-6-'48ல் எழுதுகிறார்:— "தங்கள் பலன்கள் ஆச்சரியமானவை. பலன்களில் மிகவும் திருப்தி."

1 முதல் 3 எதிர்கால கேள்விகளுக்கு ரூ. 1. மேல் கேள்வி 1-க்கு அணா 8. 1 வருட பலன் ரூ. 5. ஜாதகம் கணிக்க ரூ. 2. சக்தி கவசம் ரூ. 7-8-0. வி.பி.பி. தனி. ஜாதகம் or கடிதம் எழுதும் நேரம் தேவை. N. B. வெளிநாட்டிற்கு முன் பணம் தேவை.

சக்தி ஹோம், விருத்தாசலம், P. O. (S. I.)

"பீம-வீர்"
"Bheema-Veer"



JAMADAGNI OUSHADALAYA — MYLAPORE

"பீம-வீர்" பூர்வகால ஆயுர்வேத முறைப்படி மூலிகை சத்துக்களாலும், பஸ்பங்களாலும் தயாரிக்கப்பட்டது. ரத்தத்தை சுத்திசெய்து, சாஸ்வதமான யௌவனத்தையும், ஞாபக சக்தியையும் உண்டாக்கி, தேக புஷ்டியையும், வலுவையும் கொடுப்பதில் நிகரற்ற அவுஷதம் 40-நாள் மருந்து ரூ. 3-12-0.

பாக்கிங்கு, தபால்சார்ஜ் கிடையாது

ஜமதக்னி ஔஷதாலயா,
26, வடக்குமாடவீதி, மயிலாப்பூர், சென்னை

Quality always tells!
hence BUY L.G
ASAFOETIDA

எல். ஜி
பெருங்காயமே உயர்ந்தது

பாத்ருடுவின் "பால சஞ்சீவினி"

(Regd)

குழந்தைகளின் ஈரல், குலே, ஜுரக்கட்டி வியாதிகளை சொற்ப காலத்தில் நிச்சயம் குணமளிக்கும் சிறந்த மருந்து இது ஒன்றுதான். அசல் விஜயநகரம் மருந்து. போலிகளைக்கண்டு ஏமாறுதீர்கள்.

Dr. பிள்ளா பாப்பய்யா பாத்ருடு & பிரதர்,

11, தெற்கு மாட வீதி, மயிலாப்பூர்.

கும்பகோணம் கிளை:— 7, சாரங்கபாணி கோவில் கீழவீதி

திருச்சி கிளை:— 15, புகழிய பிள்ளை தெரு, தெப்பக்குளம் போஸ்டு.



1 பவுனில் 4 ஜதை கவரிங் வளையல்கள் கிடைக்கும்

காஸிம் பிரதர்ஸ், 192, சைனு பஜார், சென்னை.

ஸ்ரீ சாயிநாதய நம :

அனுபவத்துடனும், ஆராய்ச்சியுடனும் பலன்கள் சொல்லப்படும்.

ஒரு வருஷ பலன்	ரூ. 5.
விவரமான ஒரு கேள்விக்கு பலன் எழுத	,, 1.
விவாக பொருத்தம்பார்க்க	,, 3.
ஆயுள் பலன் எழுத	ரூ. 100.

THE SOUTH INDIAN ASTROLOGICAL BUREAU,

229, Walltax Road, Madras 3.

மெண்டெக்ஸ்

மாத்திரைகள்

ஸ்திரீகளுக்கு அடிக்கடி ஏற்படும் உபாதைகளுக்கு இன்றியமையாத ஔஷதம். தவருமல் உடனே குணமளிப்பது. ஒரு புட்டி விலை ரூ. 7/8. வி. பி. செலவு தனி. விவரங்களுக்கு எழுதவும்.

என்மார்

மாத்திரைகள்

இளமையூட்டவல்ல இம்மாத்திரைகள் ரத்தசோகை, ஞாபக சக்திக் குறைவு, நரம்புத்தளர்ச்சி முதலியவற்றை நீக்கி, ஜீரண சக்தியை விருத்தி செய்யும். டாக்டர்களால் சிபார்சுசெய்யப்படுவது. ஒரு புட்டி விலை ரூ. 7/8. விவரங்களுக்கு எழுதவும்.

ஸ்டெர்ன் & கம்பெனி,

187, மவுண்ட்ரோட், மதராஸ்.

ஜுரத்தில்

உஷ்ணம் 102 டிக்ரிக்கு மேலே போனுல். கூந்தல் உதிர்வது நிச்சயம். அம்மையானுலும் சரி, 'டைபாயிட்' 'மலேரியா' 'இன்புளுயன்ஸா' முதலிய விஷ ஜுரங்களானுலும் சரி, சூடு காரணமாகவே மயிர் அபரிமிதமாகக் கொட்டுகிறது. ஜுரஸமயங்களில் உஷ்ணம் அதிகமாக ஏருவிடினும், மயிர் உதிர்வது மட்டும் தவறுவதேயில்லை. அப்படி உதிரும்போது தக்க சிகிச்சை செய்து தடுக்காமலிருந்துவிட்டால் மயிர் விடாமல் உதிர்ந்து தலையும் வழுக்கையாய்விடும்.

வெள்ளம் வந்த பிறகு அணையிடுவதேன்? மயிர் உதிர ஆரம்பிக்குமுன்னரே. கூந்தலைக் காப்பாற்றிக்கொள்ளுங்கள். ஜுரத்துக்குப்பிறகு கேசம் அரைப்பங்கு கால்பங்காகிக்குறைந்துவிட்டால், கேசவர்த்தினியைக் கொண்டு கேசத்தை விருத்திசெய்து பூரணமாக்கிக்கொள்ளுங்கள். கடைசியாக எல்லாப் பரீக்ஷைகளும் செய்தானபிறகு கேசவர்த்தினியே கூந்தலுக்குச் சிறந்தது என்று தெரியவந்தால், கேசவர்த்தினியை முதலிலேயே கைக்கொள்ளலாமே ?

கேசவர்த்தினி

கூந்தலைக் காப்பது; விருத்தி செய்வது; அழகுபடுத்துவது விலை அணு 14. தபால் செலவு தனி. எல்லா கடைகளிலும் கிடைக்கும்.

தயாரிப்பவர் :

தென் இந்திய ரஸாயன சாலை,

"ஆச்ரமம்", க்ராஸ்கட் ரோட், பவர் ஹவுஸிற்கு அடுத்தது கோயமுத்தூர்.



எல்லாவிதமான எலக்டிரிக் சாமான்கள் கண்டிரோல்விலைக்கு மொத்தமாகவும், சில்லரையாகவும் கிடைக்கும்.

M. R. பார்த்தசாரதி ஐயங்கார்,

28, துளசிங்கப் பெருமாள்
கோவில் தெரு,
திருவல்லிக்கேணி, மதராஸ்.



காங்கிரஸ் மகாசபை சரித்திரம்

முதல் பாகம் கைவசமில்லை
இரண்டாம் பாகம் ,, ரூ. 2.
மூன்றும் பாகம் ,, ரூ. 2.
(தபாற் செலவு அணா 10.)
V. P. அனுப்புவது கிடையாது.
சுதேசமித்திரன் புத்தகசாலை சென்னை.



501 ஸோப்பால்

வெளுக்கப்பட்டது.

தி டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி, லிமிடெட்.

ஸ்ரீமத் பகவத்கீதை

★

சென்னை ஸம்ஸ்கிருத காலேஜ் உபாத்தியாயராய் இருந்த கீர்த்தனாசார்ய ஸி. ஆர். ஸ்ரீனிவாஸய்யங்கார் பீ. ஏ. எழுதியது.

மூலத்துடனும், அத்வைத வசிஷ்டாத்வைத பாஷ்யச் சுருக்கத்துடனும், இதுவரையில் வெளியிடாத பல ரகஸ்யங்கள் அடங்கிய முன்னுரையுடனும், கண்ணனுடைய கருத்திற்கிணங்க எழுதப்பட்டது.

★

முழுகாலிகோ பயிண்டு செய்தது.

விலை ரூ. 3-8-0

(தபால் செலவு 0-8-0)

இன்னும் இதர புத்தகங்களும் கிடைக்கும்.

★

எமது எல்லா புத்தகசாலைகளிலும் கிடைக்கும். நேரில் விஜயஞ்செய்து தேவைக்கு ஆர்டர் செய்யவும். எல்லா 'மித்திரன்' ஏஜண்டுகள் மூலமும் பெற்றுக்கொள்ளலாம்.

புத்தக ஜாபிதாவுக்கு எழுதவும்.

★

மானேஜர்.
சுதேசமித்திரன் ஆபீஸ்
மவுண்ட்ரோடு, மதராஸ்.

பிரசித்தி பெற்ற

'காஸினோ ஸ்னோ'



உங்கள் முகப்பருவைப் போக்கி சருமத்தை மிருதுவாக்கி முகத்தைப் பொலிவுடன் பிரகாசிக்கச் செய்வது காஸினோ ஸ்னோவே வாங்கும்பொழுது "காஸினோ மார்க்கைப் பார்த்து வாங்குங்கள்

CHANDRA TRADING CO.,
93, ACHARAPPAN ST., G.T. MADRAS.

குஷ்டத்திற்கு மருந்து இல்லையா?

இதோ லக்ஷ்மி பிரசாதம்

(லெப்பர் கியூர்)

18 குஷ்டங்களையும் வெண் குஷ்டம், செவ்வாய் மேகம், வெள்ளை, வெட்டை நிவாரணத்திற்கு எல்லாம் சாப்பிடக்கூடிய அமுர்தம்.

40 நாட்களில் குணம்

தலைமை ஆபீஸ்: வால்டேர், ஆர். எஸ்.	லக்ஷிமி & கோ., 2/135, பிராட்வே, மதராஸ்.



சகல விதமான பட்டு & நூல் ஜவுளிகளுக்கு கைராசியும் நம்பிக்கையுமுள்ள

புதிய ஜவுளிக்கடை

ராம்ராஜ்யா ஹால்

N.R.ராமசந்திர செட்டி & கோ, கடைவீதி...சேலம்

கதா மோகன ரஞ்சிதம்

3-பாகங்கள் விலை ரூ. 2-8-0

தபால் செலவு பிரத்யேகம்.

மானேஜர்: "சுதேசமித்திரன்" புத்தகசாலை, மவுண்ட்ரோட், சென்னை.

45 வருஷமாகப் புகழும் நற்சாட்சிகளும் பெற்றுவரும் மருந்துகள்:

தாளக பஸ்பம்

காசம், ஈளை, இருமல், கஷ்ட சுவாசம், கோழை, கபக்கட்டு 7 விதமும் அஸ்திசுரம், எலும்புருக்கி (T. B.) க்ஷயரோகமும் தீருகிறது. ½ மண்டல பஸ்பம், தாளிசபத்திரி சூரணமும் ரூ. 10.

அப்ரேக் செந்தூரம்

அடிக்கடி போகும் நீர், தாகம், வரட்சி, எலும்புருக்கி, பவுத்திரம், நீரில்உள்ள சர்க்கரைசத்து பூரண சுகமாகிறது. ½ மண்டலம் அனுபானத்துடன் ரூ. 15.

எவ்வித மருந்துகள் சாப்பிட்டும் தீராத கொடிய வியாதிகளுக்கு வியாதி விவரம் தெளிவாக எழுதினால் தகுந்த உயர்ந்த மருந்துகள் கொடுத்து குணப்படுத்துகிறோம்.

வைத்தியபதி

R.M. நாராயணசாமி பிள்ளை

தன்வந்திரி வைத்தியசாலை,

பழனி. (S. I.)

டெலிபோன்: 2246. தந்தி: கிளாவர் பீடி

லேட் கான்சாகிப் எம். முஹமது உமர்சாகிபுவின்குமாரரான முஹமத் நூருல்லா என்று பெயர்கொண்ட நான் இவ்வியாபாரத்தை மிகவும் அபிவிருத்தி செய்துள்ளேன். மிகச் சிறந்த புகையிலையையும், உயர்தரமான சரக்குகளையும் உபயோகித்தே

ஸ்பேட் கிளாவர் பீடிகள்

தயாரிக்கப்படுகின்றன. இந்த பீடிகளின் ரகமும், மணமும் குணமும் என் தகப்பனார்காலத்திலிருந்ததைப் போன்றேசிறப்பாகவிளங்குகின்றது.

முகம்மது நூருல்லா

ஸோல் புரொப்ரைட்டர்,

ஸ்பேட் கிளாவர் & ஆர்டீன் பீடிகள்

37, மண்ணடி, மதராஸ்.

மறக்க முடியாத உண்மை!
நாகரீக வாழ்விற்கு அடிப்படையானது
அழகு மிகுந்த ஆடைகளே!!

தொழில் முறையில் அனுபவம் வாய்ந்தவர்களைக் கொண்டு கண்களைக் கவரும் கலர்களில் வனப்பு மிகுந்த ஜரிகை வேலைப்பாடுகளோடு தயாரிக்கப்பட்ட

பட்டு

புடவைகள் வேஷ்டிகள்

எங்கள் வசம் ஏராளமாயிருக்கின்றன.

C. R. பாலுசாமி அய்யர்

115, நைனியப்ப நாய்க்கன் தெரு, மதராஸ்.
போன் நெ. 3432.

9, ஜடாமுனி கோவில் தெரு, மதுரை.

ஸ்தாபிதம் 1924.

பிரபல ஜோதிஷர்

மஹா ராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசு பெற்றவர். மாதவாரி ஒரு வருஷ பலன் எழுத ரூ. 5. டி பலனை வாரா வாரம் விவரமாக எழுத ரூ. 10. ஆரூடம் 3 கேள்விகளுக்கு ரூ. 2. மேல் கேள்வி 1-க்கு அணா 8. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை. ஜ்யோதிஷ ஞான போதினி. ஜாதக யோகங்கள் என்னும் புத்தகம் விலை ரூ. 2—8—0. வி. பி. சார்ஜ் ப்ரத்யேகம்.

பண்டித காழியூர் ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார், "தபோநிதி" தியாகராயநகர், மதராஸ் 17.

S.A.H.
TRADE MARK

Rgd. No. 2221.

28 வருஷமாய் தென்னாடு
முழுவதும் பிரசித்தி
பெற்று வரும்

சேலம் மூன்று தாமரை பீடிகளை

உபயோகித்து சந்தோஷமடையுங்கள்.

Prop: S. அஹமத் உசேன், கோட்டை, சேலம் - *S.I.R.*

வாரியர்

பிருங்காமலகாதி
தைலம்

குளிர்ச்சிமிக்க ஸ்நான தைலம். கறுப்பான காந்தி மிக்க கூந்தல் தாராளமாக வளரச் செய்யும். அரிப்பு, பொடுகு, தலைவலி, அதி உஷ்ணம், நித்திரையின்மை, தண்ணெரிச்சல், அதிகப்படிப்பினாலோ வேலையினாலோ ஏற்படும் மந்தம், ஞாபக மறதி, மூளைக்கொதிப்பு முதலியவைகளில் மிகவும் உபயோகமானது.

16 அவுன்ஸ் புட்டி ரூ. 4.
(பாக்கிங், தபால் செலவு வேறு.)

ஆர்ய வைத்தியர்
கே. எஸ். வாரியரின்

அஷ்டாங்க
ஆயுர்வேதசாலா

தெப்பக்குளம், திருச்சி.
(ஸ்தாபிதம் : 1936.)

உயர்தர
கைக்கடியாரங்கள்



ஜுவல் பதித்து அழகாயும் வலுவாயும உழைத்து சரியான மணி காட்டும். தபால் செலவு அணா 14 இரண்டு வாங்கினால் தபாற்செலவில்லை.

நெ. 1. கரோமியம	ரூ 18
சிறந்தது (ரவுண்டு)	ரூ 20
நீண்ட சதுரம்	ரூ 24
,, 4 ஜ்வல்	ரூ 30
லெண்டர் ஸகிண்ட்	ரூ 28
அலாரம் டைமபீஸ்	ரூ 18
,, சிறந்தது	ரூ 20
நெ. 2. க்ரோமியம	ரூ 25
நீண்ட சதுரம(6 ஜுவல்)	ரூ 35
ரோல்ட்கோல்ட்(10ஜ்வல்)	ரூ 45
சிறந்தது	ரூ 48
15 ஜ்வல்	ரூ 65
சிறந்தது	ரூ 70

ஹோம் பிரிண்டிங் பாக்கட் பிரெஸ்

பெயர், விலாசம், கடிதம, லேபிள், நோட்டீஸ் முதலியவை வீட்டிலேயே அழகாக அச்சிடலாம்

நெ. 1 - ரூ. 2/- நெ. 2 - ரூ. 3/. ஸ்பெஷல் ரூ. 3-8. சிறந்தது ரூ. 4/8.

FRENCH COMMERCIAL STORE. (A.A.)
Post Box No. 12216, CALCUTTA. (M.A.)

வாழிய செந்தமிழ்! சுதேசமித்திரன் வாழ்க நற்றமிழர்!
வாரப்பதிப்பு

Vol. XIX] ஸர்வதாரி௵ புரட்டாசிமீ 4௨ ★ 1948-௵ செப்டம்பர்மீ 19௨ No. 34

ஹைதராபாதில் பிரவேசம்

ஹைதராபாத் நிஜாமிடம் இந்திய டொமினியன் சர்க்கார் கையாண்டுபார்த்த சகலவிதமான சௌஜன்ய நடவடிக்கைகளும் வியர்த்தமாயின. எனவே நேரு சர்க்கார், தவிர்க்க முடியாத தங்கள் கடமையைக் கடைசியாக நிறைவேற்ற முற்பட்டுவிட்டனர். சென்ற வாரம் திங்களன்று விடியற் காலை 4—மணிக்கு சிகந்தராபாத்தை நோக்கி இந்தியப்படையினர் முன்னேற ஆரம்பித்து விட்டார்கள்.

இத்தகைய நடவடிக்கையின் உட்கருத்தை பிரதம மந்திரி ஜவாஹர் முன்னதாகவே தெளிவுபடுத்தியிருக்கிறார். ரஸாக்கர்கள் அங்கு புரிந்துவரும் அட்டூழியங்களுக்கு கணக்கு வழக்கில்லை. இது அச்சமஸ்தானத்துடன் மட்டும் நிற்கவில்லை; இந்திய யூனியனின் பிரதேசங்களின் அமைதிக்கே ஹானி. எனவே சமஸ்தானத்தில் அமைதி, ஒழுங்கு இவற்றை ஏற்படுத்தி எல்லா வகுப்பாரும் பயமின்றி நிம்மதியாக வாழ வகைசெய்வதே இந்திய சர்க்காரின் நோக்கம். இந்த நியாயமான மனோபாவத்தை வேறு தினுசாக்கி வகுப்புவாத வர்ணம் தீட்டிப் பிரசாரம்செய்யப் பாகிஸ்தான் அந்நிய மந்திரி காட்டிய அக்கரை அனைவரும் அறிந்த விஷயம்.

ஆரம்பத்தில் குறிப்பிட்டபடி சாவதான நடவடிக்கைகள் பயனற்றுவிடவே ஹைதராபாத் பகுதியில் தளபதி ராஜேந்திரஸிங்ஜி தலைமையில் இந்தியப்படைப் பிரவேசம் துவங்கிற்று. விஜயவாடாவிலிருந்தும், மேற்கு வடக்கு, வடமேற்குப் பகுதிகளிலிருந்தும் முன்னேறி சிகந்தராபாத்தைக் கைப்பற்றுவதென்பது திட்டம். இது இனிது நிறைவேறுவதற்கடையாளமாக நமது படையினர் அநேகம் பகுதிகளில் வெற்றி கண்டிருக்கின்றனர். போராட்டம் துவங்கிய முதல் இரண்டொரு தினங்களில் எதிர்ப்பு தீவிரமாக இல்லாமலிருப்பினும் நமது படையினர் உள்ளே ஊடுருவிச்செல்லுகையில் ரஸாக்கர்களும், நிஜாம் படையும் தீவிரமாக எதிர்ப்பில் ஈடுபட இடமுண்டு. இந்தியப் படைகளைச் சீக்கிரமாக விமானங்களில் ஏற்றியனுப்புவதற்கு வாரங்கல்போன்ற இடங்களிலுள்ளவிமானநிலையங்கள்மிக்க உதவிகரம். ஆகவே வாரங்கல் பகுதியில் நமது விமானங்கள்குண்டுகள் வீசியிருக்கின்றன. ஆயுதங்களின்பலமும், படையினர்பலமும், விமானங்களின் எண்ணிக்கையும் பெருவாரியாகயிருப்பது ஒருபுறமிருக்க, இவற்றிற்கெல்லாம் மேல்பட்டதாக நம் படையினருக்கு, கைப்பற்றப்பட்ட பிரதேச மக்களின் ஆதரவென்ற மகத்தான பலமும் கூடச் சேர்ந்திருக்கிறது. வழியில் கைப்பற்றப்பட்ட பகுதிகளிலுள்ளவர்கள் தங்கள் துயர் துடைக்க வந்த தேவ தூதர்கள் என நினைத்து இந்தியப் படையினருக்கு அமோக ஆதரவளித்து வந்திருக்கின்றனர்.

ராஜேந்திர ஸிங்ஜி

பண்டிதநேரு குறிப்பிட்ட கருத்துக்களை மேற்கொண்டும் தெளிவுபடுத்தும் வகையில் இந்தியப் படையினரின் தளபதி ராஜேந்திரஸிங் துருப்புகளுக்கு பிரகடனம் செய்தார். நிஜாமுக்கு மனமுண்டானால் இன்றும் விபரீதங்களை விலக்கிக்கொள்ள இடமுண்டு. மக்களுக்கு நேரக்கூடிய துன்பங்களைத் தவிர்த்து, பாப மூட்டையைச் சுமக்காமலிருக்கலாம். ஆனால் அவர் தன் வழியிலேயே போய்க்கொண்டிருப்பாரானால், அதன் விளைவென்ன வென்பது வெட்ட வெளிச்சம். ——

ஜனாப் ஜின்னா

பாகிஸ்தானை உருவாக்கிய ஜனாப்-ஜின்னா இறந்துவிட்டார். வெட்டுண்டு துண்டாக்கப்பட்ட அப்பகுதிக்கு இதைவிடக் கொடிய அதிர்ச்சி வேறொன்றுமிருக்க முடியாது.

ஜனாப் ஜின்னா சிறந்த ராஜ தந்திரி; நாவன்மையில் இணையற்றவர் எனக் கூறப்படுவோரில் அவருக்கு முக்கிய ஸ்தானமுண்டு. இத்துடன் சிறந்த அறிவாளி. இவ்வளவு குணவிசேஷங்கள் பொருந்திய ஜனாப் ஜின்னாவுக்குச் சரித்திரத்தில் மகோன்னதமான ஸ்தானம் கிடைத்திருக்கக்கூடும். ஆனால் இன்று சரித்திரத்தில் அவருக்குக் கிட்டக்கூடிய இடமெல்லாம் பாகிஸ்தானை ஏற்படுத்தித்தந்தவர் என்பது தான்.

ஜனாப் ஜின்னாவின் அறிவும் ஆற்றலும் ஆரம்பகாலத்தில் அற்புதமான அரசியல் சுவட்டில் தான் போய்க்கொண்டிருந்தது. அதே துறையில் அவர் தொடர்ந்து ஈடுபட்டிருப்பாரானால் அதனால் ஏற்பட்டிருக்கக்கூடிய பயன் எவ்வளவோ உன்னதமானதாக விளங்கியிருக்கும்.

தம்முள் சண்டை செய்தாலும் சகோதரர் போல வாழ வேண்டியவர்கள் ஹிந்துக்களும் முஸ்லிம்களும் என்ற தளராத நம்பிக்கையைக்கொண்டிருந்த ஜனாப் ஜின்னா முஸ்லிம்களும் ஹிந்துக்களும் தனித் தனி ஜாதியார் என்றும், இவர்கள்சேர்ந்து வாழ்வதென்பது ஒருகாலும் சாத்தியமில்லை என்றும் ஒரு குருட்டு அபிப்ராயம் கொள்ள நேர்ந்தது தான் துரதிருஷ்டம்.

நாடு துண்டாடப்பட்டு இரு கூறுகளாகப் பிரிந்துவிட்ட இன்றைய நிலையில் சென்றதைப்பற்றிக் கொட்டியளப்பதில் எவ்விதப் பயனுமில்லை. ஜனாப் ஜின்னாவுக்கு மறைமுகமாகத் தூபம்போட்டு, முஸ்லிம்களைத் தங்கள் சார்பாகச் சேர்த்துக்கொண்டு பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம்புரிந்த தொண்டும் பிரசித்தம்!

பிரிவினைப் பிரச்னை உதிப்பதற்கு முன்னதாக ஜனாப் ஜின்னா தேச ஐக்கிய பத்தியத்தில் காட்டிய சிரத்தை பிரமிக்கத்தக்கதாகும். அவர் சமஷ்டி அரசியலை எதிர்த்து நின்றதை யாரும் மறந்திருக்கமுடியாது. நாட்டுக்கு ஒரே சர்க்கார் ஏற்படாவிட்டால் நாட்டைச் சிதற அடிக்கும்படியான விபரீத நிலைகள் ஏற்பட்டுப் போகும் என்ற திட சித்தம் கொண்டிருந்தார்.

இத்தகைய நேர்மையான பாதையில் சென்றுகொண்டிருந்த அவரது மனப்போக்கில் பிரிவினை உணர்ச்சி புகவே, தெள்ளிய தேனில் நஞ்சு விழுந்தாற்போலாயிற்று. இந்த விஷம் விரைவில் வேலை செய்யவும் துவங்கிவிட்டது. ஹிந்துக்களும் முஸ்லிம்களும் தனித் தனி ஜாதியார் என்பதோடு நில்லாமல் பரஸ்பரம் விரோதிகள் என்றுகூட அவர் எண்ணத் தலைப்பட்டுவிட்டார். அவருடைய நுண்ணறிவு, ஆற்றல், ராஜதந்திரம் இவை அனைத்தும் பிளவைப் பெரிதாக்கத்தான் உதவின. கூடச் சேர்ந்தது பிரிட்டிஷ் கைங்கர்யம்! இறுதியாகத் தேசப் பிரிவினை ஏற்பட்டது. அதன் விபரீதங்கள் அனைவரும் அறிந்ததே. இவ்வாறு சிருஷ்டி பெற்ற பாகிஸ்தானின் எதிர்காலமென்ன? ஜனாப் ஜின்னாவுக்குப்பின் அவரது ஸ்தானத்தை ஏற்பதற்கு வேண்டிய அளவு பாகிஸ்தானியர்களின் ஆதரவையும், நன்மதிப்பையும் பெற்ற தலைவர் வேறு யாரேனும் இருக்க முடியுமா? சந்தேகம்.

எனினும் பாகிஸ்தான் மக்களுக்கு உண்மையில் எது நலமென அறிந்து, அதற்காக முழு மூச்சுடன் உழைக்கக்கூடிய சேவா உணர்ச்சியும் தியாக புத்தியும் வாய்ந்தவர்கள் அங்கு அடியோடு இல்லாமல் போகவில்லை. அத்தகையோர் பொது வாழ்வில தங்களுக்குரிய ஸ்தானத்தைப் பெற இப்போதேனும் அனுமதிக்கப்பட வேண்டும். அதையே பாகிஸ்தானின் எதிர்கால வாழ்வு பொறுத்திருக்கிறது.



புதிய டில்லியில் சென்றவாரம் பாரதி தினம் நடந்தது. கவர்னர் ஜெனரல் ராஜாஜி தலைமை வகித்தார். பாரதியார் கீதப் போட்டியில் வெற்றி பெற்ற சிறுமிக்கு அவர் பரிசளிக்கையில் எடுத்தபடம்.

சமீபத்தில் டில்லியில் நடந்த அகில இந்திய பத்திரிகாசிரியர் மகாநாட்டில் ஸர்தார் படேல் பிரசங்கம் புரிகிறார். அவருக்கு அருகில் மகாநாட்டின் தலைவர் ஸ்ரீ தேவதாஸ் காந்தி.



(மேல்)

சென்னையில் சென்ற வாரம் வந்திருந்த பாஷா வாரி மாகாண கமிஷன் அங்கத்தினர்கள் இப்படத்தில் இருக்கின்றனர் நடுவில் நிற்பவர் தான் கமிஷன் தலைவர் ஸ்ரீ தார்.

(கீழ்)

புதுக்கோட்டையைச் சேர்ந்த கொப்பனாப்பட்டியில் "கலைமகள் கல்லூரி" கட்டிடத்தைச் சென்னை சர்க்கார் கல்விமந்திரி ஸ்ரீ அவினாசிலிங்கம் செட்டியார் இம்மாதம் 5-ந்தேதி திறந்து வைத்தார்.



கிடைத்தது மாற்று!

விந்தியா

“சௌக்கியமா அம்மா?” என்று வினவினார் அந்த மனிதர். வினாக் குறியைப் போல வளைந்திருந்த என் பார்வையை ஆச்சரியக் குறிபோல நிமிர்த்தி, நான் அந்த மனிதரை ஏறிட்டுப் பார்த்தேன். “உம்—சௌக்கியந்தான்!” என்றேன்.

“அவர்தான் அகத்துக்காரராக்கும்! இங்கேயாம்மா நீங்கள் இருக்கிறீர்கள்?” என்று மேலும் கேட்டார் அவர்.

“நாங்கள் லீவிலே வந்திருக்கோம் இங்கே. பட்டணத்துலே இருக்கோம்...இப்போ...”

நான் ஒருமாதிரி இழுத்தாற் போலத்தான் பேசினேன். அவர் திடுக்கென்று “ஏம்மா...என்னைத் தெரியறதோ இல்லையோ?” என்று கேட்டுவிட்டார்.

அந்த மனுஷரை எங்கோ பார்த்திருந்ததாக எனக்குத் தோன்றி இருந்தது. ஆனால் அவர் இன்னார் என்று தெரியவில்லை குறிப்பாக. ஆனால் அவர் வெகு அக்கரையாக குசலம் விசாரிக்கத் தொடங்கியதும், அவருடைய திருப்திக்காக பதில்களைக் கூறி அப்போதைய நிலைமையைச் சமாளித்துவிட முயன்றுகொண்டிருந்தேன். ஆனால் என் முகபாவமும் பேச்சு முறையும் அவருக்கு உண்மையைச் சொல்லிவிட்டன. கேட்டுவிட்டார் அந்தக் கேள்வி. நான் கொஞ்சம் திடுக்கிட்டுத்தான் போனேன். “முகம் உண்மை சொல்லிவிட்டது! நாவு பொய் பேசுவானேன்?” என்று தோன்றியது எனக்கு.

சிறிது சங்கோசத்துடனேயே, “பார்த்த ஞாபகமாத்தான் இருக்கு! ஆனால் சரியாக—இன்னாருன்னு தெரியல்லையே!” என்று சொல்லிவிட்டேன்.

ஒரு துணுக்கத்துடன் அவர், “தெரியல்லையாம்மா?...சரி, நான் போய் வரட்டுமாம்மா?” என்று கூறி, விடை பெற்றுக்கொண்டு அங்கிருந்து எங்களைத் தாண்டிக் கொண்டு சரசரவென்று விரைந்தார். என்னை அவர் மனத்தாங்கல் தொனிக்கக் கேட்கும்போது, அவருடைய க்ண்கள் என் கணவரை ஒரு கீழ் நோக்கு நோக்கியதை நான் கவனித்தேன். தம்மை நான் அடையாளங் கண்டுகொள்ளாததைப்பற்றி என் கணவரிடம் அவை வருத்தத்தோடு பேசுவது போலவும், இப்படி நேர்ந்ததற்கு வெட்கப்படுவதுபோலவும் பட்டது எனக்கு.

நேர் எதிர்ாக வந்துகொண்டிருந்த எங்களுடைய இந்தச் சிறு சந்திப்பு நிகழ்ந்தபிறகு, எங்கள் இருதிறத்தாருக்கும் இடையே பெருகிப் பெருகிச் சென்ற பாதை இடைவெளியின் ஓட்டத்தைப் போலவே என் மன ஓட்டமும் மாறியது. கடகடவென்று ஓடும் ரயிலிலே உட்கார்ந்து கொண்டு, எதிரேயிருந்து ஓடி வந்து பக்கவாட்டிலே போகும் மற்றொரு ரயிலைப் பார்க்கும்போது ஏற்படுமே ஒரு அழற்சி, அதைப்போலத்தான் எனக்கும் ஒரு அழற்சி ஏற்பட்டது.

ஒரு கணம் பிரமை பிடித்தாற் போல இருந்தது—ஆனால் நடந்து கொண்டேயிருந்தேன். கைவீசி நடந்துவரும் என் கணவரின் கை தற்செயலாக என்மீது பட்டதும் அவர் இருப்பது தெரிந்தது. அவரைப்பார்த்தேன். அவரும் லேசாகச் சிரித்தவண்ணம் என்னைப் பார்த்தார்.

“பாவம், அந்த மனுஷர் என்ன நினைத்தாரோ? ‘தெரியவில்லையே’ என்று சொல்லிவிட்டேனே!—அவரை எங்கோ நிச்சயம் பார்த்

திருக்கிறேனே! பாவம், எவ்வளவு அக்கரையாக குசலம் விசாரிக்க வந்தாரே! 'தெரியல்லே' என்றதும் முகம் சுண்டிப்போயிற்றே! "தெரியாமலென்ன!" என்று சொல்லியிருந்தால்........."

இப்படியாக என் மனதிலே எழுந்த சிந்தனைக் குன்று என் முகத்தினூடும் தெரிந்தது போலும்.

"என்ன, உச்சிப்பிள்ளையாரை—கல்லுப்பிள்ளையாரைப் பார்த்த போது இருந்த உத்ஸாகம் எல்லாம்—உசிரோடு இருக்கிற நிஜப் பிள்ளையாரைப் பார்த்துப் பறந்துடுத்தே!" என்று வேடிக்கை பண்ணினர் என் கணவர்.

"அவர் யாருன்னு குறிப்பா தெரியல்லே—ஆனுல் எங்கோ பார்த்தும் இருக்கேன்!—தெரியல்லேயேன்னு ஏன் சொன்னேம் என்று இருக்கு," என்றேன் நான். கொஞ்சம் கட்டை குட்டையாக மாநிறமாக இருந்த அந்த மனிதரை என் கணவர் 'பிள்ளையார்' என்று வர்ணித்ததுகூட எனக்குக் கோபந்தான். ஏற்கெனவே அந்த மனிதரைப்பற்றி நான் அங்கலாய்ப்புப் பட்டுக்கொண்டிருக்கையிலே, அவரும் குறும்பு பேசினுல்?

"தெரியறதே" என்று சொல்லிவிடலாம்! ஆனுல் சிலசமயம் சில பேர் நம் முகத்தைக் கண்டே உண்மை அறிந்துவிடுவார்கள்.

'யார், சொல்லு பார்க்கலாம்!' என்று கேட்டுவிட்டால், அப்போ நாம் முழித்தால், அதுதான் அவமானமாயிருக்கும்! "ஏன் பொய் சொல்லணும்!" என்று அப்போது தான் நிஷ்டூரம் தோன்றும் நம் மேலே!......... இதுபோல சந்தர்ப்பங்கள் சிக்கலானவைதான்! ஆனுல் உண்மையாயிருப்பதே நல்லது!" என்று நிதானமாகச் சொல்லிக்கொண்டே வந்தார் என் கணவர்.

என் மனக் குழப்பத்தை நீக்குவதாகவேயிருந்தது அவர் பேச்சு. நான் அளித்த பதில் தவறுனதல்ல என்ற ஆறுதல் எனக்கு ஏற்படத் தான் செய்தது.

"ஆமாம்!" என்று மட்டும் சொன்னேன். உலகத்திலே இது போல் சிறு சிறு இக்கட்டான சம்பவங்கள் எத்தனேயோ! எல்லோருக்கும் இதுபோல அனுபவமிருக்கும். அந்த மனிதர் தவருக ஒன்றும் எண்ணமாட்டார் என்று சமாதானம் சொல்லிக்கொண்டேன்.

மலைக் கோட்டையை ஏறிச்சுற்றிப்பார்த்துவிட்டு சித்தியின் அகத்திற்குப் போய்க்கொண்டிருக்கையிலே நடந்த இந்தச்சிறு சம்பவம் சித்திவீடு வந்தபின்னும் என்னுள்ளத்திலே மலைபோல உட்கார்ந்திருந்தது. சித்தியிடம் "யாரோ அந்த மனிதர்!" என்ற என் வேதனைக் கேள்வியைக்காட்டிக்கொடுக்க இஷ்டமாக இருந்தது, கஷ்டமாகவும் இருந்தது.

சித்தியின் இல்லம் வந்து ஒரு மணி நேரம் கழிந்தது. சந்திப்பினுல்ஏற்பட்ட உவகையுணர்ச்சி சிறிது அடங்கியிருந்த சமயம்.

"அம்மா! பாலாவுக்கும் நேக்கும் பட்சணம் தாம்மா! எனக்குப் பசிக்கிறது வயத்தை!" என்று சொல்லிக்கொண்டு ஓடோடி வந்தாள் என் சித்தியின் பெண்.

"ஏன் உமா! அக்கா வந்திருக்கேனே பார்த்தியா?—எங்கே போயிருந்தே—பள்ளிக்கூடம் இன்னிக்கு இராதே!" என்று அவளை ஆவலுடன் விசாரித்தவாறே, அவளுடன் வந்திருந்த சிறுமியைப் பார்த்தேன்.

துருதுருவென்று நாலாபுறமும் நோக்கிக் கொண்டிருந்த அந்தப் பெண், என் கவனிப்பை உணர்ந்

ததும், வெகு சங்கோசத்துடன் தலையைத் திருப்பிக்கொண்டாள்.

"பசிக்கிறதுன்னு சொல்லேன்! வயத்தைப் பசிக்கிறதுன்னு என்ன பேச்சு! முதுகையா பசிக்கும்?" என்று சித்தி பெண்ணைச் செல்லமாகக் கடிந்துகொண்டே, என்னைப் பார்த்துச் சிரித்தாள்.

"சித்தி! பசிக்கிறது என்றால், "முதுகைப் பசிக்கிறதா...வா, தோசை போடுகிறேன்!" என்று சொல்லுபவர்களும் உண்டு! சில கண்டிப்பான பாட்டிமார்கள், மாற்றாந் தாய்மார்கள் இப்படித் தான்..." என்று நானும் சிரித்துக் கொண்டே ஆரம்பித்தேன்பேச்சு.

என்னை மேலே பேச வேண்டாமென்று சமிக்ஞை செய்தது சித்தியின் கண். நிறுத்திவிட்டேன்.

சித்தி எழுந்து அலமாரியைத் திறந்து பட்சணம் எடுத்துக் கொடுத்தாள் சிறுமிகள் இருவருக்கும். வாசலுக்கு அவர்களை அனுப்பினாள்.

"அந்தப் பொண்ணு..." என்று பேச்சுத் துவக்கினாள்.

"ஏன் சித்தி...நானும் அந்தப் பெண்ணைப்பற்றி கேட்கணும்னு நினைச்சேன்! எங்கேயோ பார்த்த முகமாயிருக்கே சித்தி!" என்று சொன்னேன்.

"அதுதான் சொல்றேன்... அந்தப் பெண் லால்குடியிலிருந்து அப்பாகூட வந்திருக்கு!...அவர் யார் தெரியுமா...நீகூட பார்த்திருப்பயே...மூன்று வருஷத்துக்கு முந்தி அங்கே என் மைத்துனன் கல்யாணம் நடந்தபோது..."

சித்தி பேச்சை முடிக்கவில்லை. நான் ஒரு துள்ளுத்துள்ளினேன். "ஐயையோ சித்தி...பார்த்தாயா...இப்போதான் நினைவு வந்தது! அங்கே நமக்கு ஜாகை தந்திருந்த பக்கத்தகத்துலே ஒரு மாமா இருநதாரே...அவர் தானே ...ஐயையோ...பாவம் அவரைத் தான், சித்தி; நான் வருகிற வழியிலே பார்த்தேன்! அடையாளம் தெரிஞ்சுக்கலை!" என்று என் மனக்கிளர்ச்சி தீர சித்தியிடம் மேலே விவரம் கூறிக்கொண்டு போனேன்.

"அப்போது கல்யாணச் சந்தடியிலே கிணற்றங் கரையிலே வழுக்கி விழுந்து, நெற்றியிலே புடைத்துக்கொண்டபோது அந்த மாமா தான் இரண்டுவேளை மருந்துபோட்டு என்னை ரொம்ப அக்கரையாய்க் கவனிச்சுண்டார்! அவரை நான் மறந்துட்டேனே! பாவம், அதான் அவர் அப்படி மனத் தாங்கலாய்க் கேட்டார், சித்தி!" என்று பொருமினேன் வெளிப்படையாகவே. என் மனசு ரொம்பக் கஷ்டப்பட்டது.

"சித்தி! இந்தப்பெண் அப்போ ரொம்பச் சின்னப்பெண்! அம்மா சீக்காய்க் கிடந்திருந்தாளே! இவளை 'அந்த மாமாதான் சதா கவனிச்சுண்டு இருந்தாரே! இப்போ அந்த மாமி உடம்பு எப்படியிருக்கு! என்று கேட்டேன்.

"அதான் சொல்ல வந்தேன். இந்தப் பெண்ணுக்கு அம்மா போய் ஒரு வருஷமச்சு! அவருக்குப் புதுப் பெண்டாட்டி வந்து இரண்டு மாசமாகிறது!" என்றாள் சித்தி திடுமென்று. நான் திடுக்கிட்டேன். "ஐயோ பாவம்!" என்றேன். என் மனதிலே கொந்தளிப்பு விவரிக்க இயலாததாக இருந்தது.

"ஆஹா! என்ன மனுஷன்! ஒரு பெண்ணின் வாழ்வைப் பலி வாங்கிவிட்டார், பலரைப்போல. என் காயத்தை ஆற்ற பிரமாதமாக முன் வந்தாரே—இப்போது ஆற்ற முடியாத ரணத்தை உண்டாக்கிவிட்டாரே ஒரு இளம் பெண்ணின் உள்ளத்திலே! அவருடைய மனதை நோகவைத்து விட்டதாக வருந்தினேனே! இந்த மனுஷருக்கு இந்த வருத்தமும் ஒரு வருத்தம் ஆகுமா? அவருடைய இளம் மனையாள் மனம் என்ன பாடு படுகிறதோ?" என்று உள்ளங் கொதித்தேன்.

பிறகு, சித்தி "இப்போதானே வந்திருக்காள் புதியவள்? கொட்டம் ஆரம்பிக்கவில்லை! இந்தச் சின்னவளை — பாலாவை—நன்றாகத்தான் இதுவரைக்கும் பார்த்துண்டு வந்திண்டு இருக்காளாம்! மெள்ள ஆரம்பிக்கும் இதோட கஷ்டம்!" என்று சொன்னபோது நான் அதையும் ஆமோதித்தேன்!

"ஆமாம்—பின்னே என்ன! குழந்தைகளுக்கு சௌரியமாயிருப்பதாகப்பண்ணிக்கிறது, அதுகளுக்குக் கஷ்டத்துக்குத்தானே ஆகிறது!" என்று சொன்னேன், சிறுமி மேலே அனுதாபத்தால்.

உண்மைக்கோபம் அந்த மனிதர்மேல்தான்!

சித்தியின்வீட்டில் வந்து இறங்கியிருக்கும் அந்த மனுஷன் அன்று 'இரவு சாப்பாட்டிற்கு அங்கு வருவதாகச் சொல்லிப் போயிருந்ததை அறிந்தேன். அவர் வந்தால், "மன்னிப்புக்கேட்கணும்" என்று எண்ணியிருக்கவேண்டிய என்மனம், "போடு போடு என்று போட்டு முழிக்க வைக்கணும் ஆசாமியை!" என்று எண்ணத்தொடங்கியது!

நல்லவேளை, அந்த மனிதரைப்பார்த்துப் பேசவும் வேண்டி இராமல், பேசாமலும் திண்டாட வகையில்லாமல், அவர் இரவு வீடு திரும்புமுன், நாங்களே அங்கிருந்து கிளம்ப வழி பிறந்தது. நாங்கள் என் மைத்துனர் வீட்டிலே இறங்கியிருந்தோம். அன்றிரவே அங்கிருந்து மதுரை புறப்பட எண்ணியிருந்தோம். "சித்தியைப் பார்த்துவிட்டுப்போகும் படலம்" முடிந்தது எங்கள் திட்டப்படி.

லீவு முடிந்து சென்னை மீண்ட பிறகு எனக்குத் திருச்சியில் ஏற்பட்ட உள்ளக் கிளர்ச்சி பிரமாதமாகத் தோன்ருவிட்டாலும், மறந்துவிடக்கூடியதாக இல்லை. அந்த 'மனுஷரைப்பற்றி நினைத்தபொழுது ஆத்திரம் வருவது குறைந்ததே தவிர, அந்த 'இளையாளை எண்ணும்பொழுது அனுதாபம் வளர்வதாகவே இருந்தது. முதல்தாரமாக, அழகிய வாலிபருக்கு வாழ்க்கைப்பட்டிருப்பவள் நான். என் கணவர் எந்தப் பெண்ணையாவது புகழ்ந்தாலும், அல்லது சிறிது அபிமானங்காட்டினுலும், பொருமை ஏற்பட்டுவிடும் எனக்கு. இளையாளாக வாழ்பவர்கள் மனம், கணவனின் முதற் பந்தத்தை எண்ணி என்ன பாடுபடும், எப்படிப் பொறுக்கும் என்பன போன்ற ஆராய்ச்சிகளில், இறங்குவதுண்டு நான். "பாவம் மகா கஷ்டம்தான்! தவிர்க்கமுடியாத விதி ஒன்று உண்டே, அது அவர்கள் துடிப்பை லட்சியம் செய்கிறதா?" என்ற அனுதாபம் உண்டு.

இப்போது 'பிள்ளையார்' போன்ற இந்த அழகருக்கு, இரண்டாம் மனைவியாக வாய்த்துள்ள இளம் பெண்ணைப்பற்றி எப்படிக்கற்பனை செய்யாமலிருப்பேன்? ஏன் அவள் மனத்துயரை ஆராய்ச்சி செய்யமாட்டேன்? என் மனமார்ந்த அனுதாபங்களை ஏன் மானஸீகமாய்ச் செலுத்தமாட்டேன்?

பலமாதங்கள் பறந்தன. சென்னையிலிருந்து 'இந்தூர்' வந்துவிட்டோம் நாங்கள் தமிழ்நாட்டின் தனிப்பெரும் நகரமாகவும், கலைகளின் வளர்ச்சிக்கு இருப்பிடமாகவும் நான் போற்றிவந்த சென்னையை விட்டுவந்த ஒரு வேதனையால் நான் அடிக்கடி தமிழ்நாட்டுடன் தொடர்பு கொண்டேன். கடிதமூலம் பெற்ருேர்க்குப் புக்ககத்தாருக்கும் எழுதுவது தவிர, மற்ற உற்ருர் உறவினர்களுக்கும் எழுதி மகிழும் ஆர்வம் எழுந்தது.

சித்தி எழுதிய ஒரு கடிதம்மூலம் அந்த மனுஷர் பம்பாய்ப்பக்கம் போய்விட்டதாகவும், அவருடைய குடும்பமும் அவரும் இருப்பது எந்த ஊர் என்பது தெரியாது என்றும் அறிந்தேன்.

"இளையாள் நல்லவளாகத்தான் இருப்பாள் போலிருக்கு! அந்தக்குழந்தை பாலாவை இங்கிருந்த ஒன்றரை வருஷமும் நன்ருகப்பார்த்துக்கொண்

டிருந்ததாகக் கேள்விப்பட்டேன்!" என்று காணப்பட்ட குறிப்பு, ஒரு புதிர்போல முதலில் ஏனோ என்னைக் குழப்பியது. பிறகு நீண்ட ஆராய்ச்சி எதுவுமின்றி ஒரு முடிவு செய்தது.

"பாவம், நல்லவளாக, வாயும் கையுமில்லாமல்தானே இருப்பாள்! விதியை நம்பி, இரண்டாம் பெண்டாட்டியாக வாழ ஒப்பியவள், எல்லாவற்றுக்கும் வாயடைத்துத்தானே இருப்பாள்! என்று சொல்லிக் கொண்டேன்.

என் கோபமெல்லாம், முதற் பெண்டாட்டி போன ஒரு வருடத்திற்குள் வேறு மனையாளை ஏற்கத் துணிந்த அந்த ஆசை நிறைக்காத மனிதர் மீதுதானே!

நாட்கள் உருண்டு சென்று மாதங்களை உருட்டித் தள்ளின. நான் தமிழ்நாடு நோக்கி வந்து கொண்டிருந்தேன். எனக்குத் துணையாக எனக்குத் தெரிந்த வேறொரு தமிழ்க்குடும்பம் வந்து கொண்டிருந்தது. ஆனால் அப்புறம் பெட்டியில் தமிழகப் பெண்கள் பலபேர் துணை சேர்ந்தார்கள்.

தமிழ்ப்பத்திரிகையொன்றில் ஒரு கதை என்னை மனம் உருகச் செய்தது. இரண்டாம் மனையாளாக வாழ்க்கைப்பட்ட ஒரு பெண்ணின் மனக் கஷ்டங்களைப் பற்றி, கல்லும் கரையும்படி எடுத்துக் கூறப்பட்டிருந்தது.

என் பக்கத்தில் அமர்ந்திருந்த மாதிடம் "இதைப்படியுங்கள்," என்று கொடுத்தேன். நான் ரசித்ததுபோல பிறரும் ஒரு விஷயம் ரசிப்பதை விரும்பினேன், அதுவே காரணம்.

"எவ்வளவு உருக்கமாயிருக்கிறது! ஓரோர் இளையாளும் இப்படித்தான் எண்ணி அழுவாள்!" என்று சொல்லிக் கொண்டே கதையைப் படிக்கத் தூண்டினேன்.

அமைதியுடன் கதையைப் படித்த அந்தப் பெண்மணி, அமைதியுடனே திரும்பினாள் என் பக்கம்.

"நானும் ஒரு இளையாள்தான்! ஆனால் நான் இப்படி எண்ணுவதில்லை!" என்றாள்.

"என்ன?" என்று கேட்டேன் ஆச்சரியத்துடன் என் கேள்வித் துடிப்பு அடங்குமாறு. அப்புறம் அந்த மாது பதில் சொல்லி விட்டாள்.

"அந்த மனிதரின்" மனைவிதான் அந்த மாது. அவருடைய பெண்......அன்று சித்திவீட்டில் ஒருசில நிமிஷம் என்னைக்கவர்ந்து என் கண்களை நிலைநிறுத்திய பெண்.....இந்தமாதையும் கவர்ந்தாளாம். அவர் விரும்பாவிட்டாலும், அவரையே திருமணம் செய்துகொள்ளத் தான் விரும்பியதாகவும், அந்தப் பெண்ணுக்கு தாயாராகத் தான் ஸ்தானம் ஏற்க முன் சென்றதாயும் அந்த மாது கூறுகையிலே, அவளுடைய நல்லுணர்ச்சிகளை அபாரமாகப் பாராட்டியது என் மனது.

"அவரைப்போல புருஷர் இருக்கமாட்டார்!" என்று அந்தப் பெண் கூறிமுடித்தபோது, அந்த மனிதரையும் வெகுவாகப் பாராட்டிவிட்டது என்னுள்ளம்.

என்ன இருந்தாலும் இளையாள் என்பவளுக்குக் குறை என்பது இராதா? அப்படிக்குறை கொண்டிருப்பவள், புருஷனை இப்படி ஒரே அடியாகக்கொண்டாடினால் அந்தப்புருஷன் உண்மையிலேயே எவ்வளவு சிறந்த கணவனாக இருக்கவேண்டும்! ஆம், இப்படித்தான் அப்போதும் நான் எண்ணினேன். என்ன இருந்தாலும் இளையாள் என்பவளுக்கு மனக்குறை என்பது இருக்கும் என்பதுதான் என் உறுதியாக இருந்தது!

"வாழ்க்கை சம்பவங்கள்தான் கதையாகப் பரிமளிக்கும் என்பதைக் கண்டேன். கதைபோல வாழ்க்கையில் அதிசயமும் புதுமையும் நிகழ்வதுண்டு என்பதையும் காண்கிறேன்!" என்றேன்.

பிறகு மெல்ல, "புருஷன் முன்னர் ஒரு மனைவியுடன் கருத்தொத்து இல்லறம் நடத்தியிருக்கிறான் என்பதை ஒரு பெண்ணின் உள்ளம் எப்படி மனங்கோணாமல் ஏற்கும்?" என்று என் வியப்பை வெளியிட்டேன்.

"அன்பு மிகுதியினால்தானே அந்தப் பொறுமை! அந்த அன்பானது—அதைக் கொண்ட பெண் மனமானது—அவனைப் பேணவும் பேணும். அந்தப் பெண் மனமானது, தான் கொண்ட கணவன் என்ற ஒரு பாசத்துடன், அந்தக் கணவன்பால் தன் மனதையும், அன்பையும் நிலை நாட்டிவிடுகிறது!" என்று பதில் வந்தது மாதிடமிருந்து. தெய்வமோ அசரீரியோ பேசுவதுபோல பரவசப்பட்டேன். என் பரவசத்தன்மையை அவளிடமே சொல்லிவிட்டேன்.

அன்றிரவு ரயிலில் உறங்குவதற்கு முன்னும், பின்னும்கூட எனக்கு அந்தப் பெண்மணியைப் பற்றியும், அவளுடைய ஆதரிச புருஷரைப்பற்றியும்தான் நினைப்பு, யோசனை.

மறுநாள் சென்னையில் வண்டியிறங்கும் சமயம் எல்லோரும் ஒரு பரபரப்பு அடைந்திருந்தோம். அந்த மாது ஒரு கவரை என் கையில் திணித்து "இதைநினைவாக வைத்திரும்மா!" என்று சொல்லிவிட்டு, ஒரு



பெட்டி படுக்கை கொண்ட சிறு லக்கேஜுடன் இறங்கினுள். சென்னை சென்ட்ரலின் நீண்ட பிளாட்பாரத்திலே, கூட்டத்திலே கலந்து மறைந்தாள் அந்தப் பெண்மணி. "நான் தெய்வமுமல்ல, அசரீரியுமல்ல! பெண்ணுருவிலே பேயுள்ளம் படைத்தவள் என்றே சொல்லலாம்! நான் ஒரு விதவை!"

என் கண்கள் சுழன்றன—மேலே படிக்க முடியவில்லை...... கவரிலிருந்து எடுத்த கடிதம் வாடகை மோட்டாரின் ஓட்டத்துக்குச் சரியாகப் படபடத்தது.

"ஆகா!... கல்யாணமான இரண்டு வருடங்களுக்குள் விதவையாகிவிட்டாள்!.........என்னதான் இந்த மாது கல்யாணம் செய்து கொள்ள இணங்கியிருந்தாலும், அந்த மனுஷர் ஒப்புக்கொள்ளலாமா? இருபது வயதுப் பெண்ணுக்கு, இளம் பெண்ணுக்குத் தாலி கட்ட ஒப்பலாமா ஒரு அரைக் கிழவரின் மனம்! அது தவறுதானே!" என்று யோசித்துக்கொண்டே, 'விதவை' என்ற பட்டத்தின் கொடுமையைச் சிந்தித்தேன்.

ஏனே திடீரென்று சிந்தனை கலைந்தது.

நான் எதிர்பாராதது இந்த விஷயம்!...ஆம்...நான் கொஞ்சம் கூட எதிர்பார்க்கவில்லை, இந்தப் பெண் "விதவை" என்று! ஏன் எதிர்பார்க்கவில்லை ?

பெண்ணின் தோற்றம்— அப்படி ஒரு எண்ணத்தை...சந்தேகத்தைக்கூட புகுத்துவதாக இருக்கவில்லை!

ஆம், அதுதான் காரணம்.

எப்படியோ ஒரு அமைதி ஏற்பட்டது எனக்கு. ஒரு நொடியில் 'விதவை'க் கோலம் அந்தப்பெண்மணியைக் கொஞ்சமும் அண்டவில்லை என்ற ஆறுதலோ—என்ன காரணமோ........

கடிதத்திலே இன்னும் ஏதோ எழுதியிருக்கிறது என்ற நினைப்பு வந்தது. சரியாக நிமிர்த்திப் பிடித்தேன் கடிதத்தை.

"ஆனுல், உண்மை மறைத்தே பேசிவிட்டேன் உன்னிடம். நீ காட்டிய தனி பரிவைக் கண்டு உன்னிடம் உண்மையைக் மறைக்க இஷ்டப்படவில்லை...... ஆனுல் மற்றும் பலபேர் இருந்தமையால் உண்மை ஒளித்தேன். இதோ உன்னிடம் மாத்திரம் உண்மை கூற வழி...

என் கணவர் இப்போது இந்த மண்ணுலகிலே இல்லை. அவருடைய புதல்வியும் என் பாதுகாப்பிலே இல்லை. அனுதாசிரமம் ஒன்றில் வளர்கிருள்.

நான் அவருடைய இரண்டாம் மனைவிதான்.ஆனுல் அவர் என்னை மணந்ததால் நன்மையேசெய்தார். வாழ்விலே இன்பமோ, கையிலே பொருளோ காணவும் முடியாத நிலைமையில் நான் இருந்ததை அவர் அறிந்தே என்னை மனைவியாகக்கொண்டார். என் மேல் யாரும் அனுதாபங்கொள்ளும்படியாகவே, என்னைக்காட்டிக் கொடுக்காமல் இருந்தார், என்னை நடத்தினுர். இல்லற வாழ்க்கையைச் சிலகாலமே அவருடன் அனுபவித்தேன். ஆனுல் என் பிற்கால வாழ்க்கை அல்லற்படாமலிருக்க, வேண்டிய பொருள் வசதியும், வாழ்க்கை வசதியும் அளித்துப் போயிருக்கிருர். கையிலே ஒரு காசில்லாமல் அனுதையாக, விதவையாக இருந்த என்னை மணந்து, என் மானம் காத்தார்! இன்று நான் மீண்டும் விதவையானுலும், இடைக்காலத்தில் அவர் அளித்த மஞ்சட் குங்குமம், இன்று பொருளுருவில் என்னைக்காக்கிறது!

ஆம், அவருக்கு நான் இரண்டாம் மனைவியாயிருந்தேன்! ஆனுல் அவரும் எனக்கு இரண்டாம் கணவர்தாம். அந்த உண்மையை அவர்மட்டுமே அறிந்திருந்தார்—அறிந்துதான் பெருந்தன்மையுடன் என்னை ஏற்ருர்!"

இந்த முடிவு என்னை ஒரு உலுக்கு உலுக்கியது. என்னை ஏற்றிச் சென்று கொண்டிருந்த மோட்டார், நேர்த்தியான ரஸ்தாவிலே போய்க்கொண்டிருந்தாலும், ஏனே மலைமீதிருந்து உருளுவதுபோலத்தான் எனக்கு படபடப்பு, குழப்பம்.

அன்று உச்சிப்பிள்ளையாரைப் பார்த்துவிட்டு வரும் வழியில் என்னைக் கண்டதும் வெகு அக்கரையுடன், பரிவுடன் குசலம் விசாரித்த அந்த மாமாவின் தோற்றம் என் மனக்கண்முன் வந்து நின்றது.

அவருடைய தோற்றமும் கேள்வியும் அன்று அளித்த அங்கலாய்ப்பும், அந்தக் கண்களிலே அப்போது நான் கண்ட கனிவும், பேச்சிலே தொனித்த மனத்தாங்கலும் பரிதாபமும் புடமிட்ட பொன்போல புத்தொளி பெற்றன.

ஒருவரைப்பற்றி நாம் விதவித சமயங்களிலே விதவித அபிப்பிராயங்கள் கொண்டாலும், முதன் முதலிலே, முதற்பார்வையிலே ஏற்பாடும் அபிப்பிராயம் தான் நிலைக்கிறது.

நிலையற்ற பாதரசம் அழிவற்ற பொன்னையும் உருமாற்றிவிடுகிறது—ஆனுல் அதற்கும் மாற்று உண்டு அல்லவா? நிலையற்ற மனமும், அப்படித்தான் பொன்போலவே உறுதியும் உயர்வுமுள்ள என் எண்ணத்தை உருமாற்றியிருந்தது. முதன் முதலிலே ஒருநாள் என் நெற்றிக் காயத்தை ஆற்ற அவர் முன்வந்தபோது எனக்கு அவர்மீது ஏற்பட்ட சிறந்த அபிப்பிராயம் எத்தனையோ மாறுதல்களை அடைந்துவிட்டது. இறுதியில் காலம் கொடுத்தது மாற்று.

பொன்னைப் பறிகொடுக்க யாரே விரும்புவார்? நல்ல எண்ணங்கள் பறிபோவதை யாரே ஒப்புவர்? எனக்குக் கிடைத்தது மாற்று. நான் காப்பாற்றிக்கொண்டேன். பொன்னுன அபிப்பிராயம் நிலைத்தது !

இராமானுச நூற்றந்தாதி

காயகசிகாமணி-அரியக்குடி
ராமானுஜய்யங்கார்
ஸ்வரப்படுத்தியது

வைப்பாய வான்பொருள் என்று,
    நல்லன்பர் மனத்தகத்தே
எப்போதும் வைக்கும் இராமா-
    நுசனை, இருநிலத்தில்
ஒப்பாரிலாத உறுவினையேன்
    வஞ்சநெஞ்சில் வைத்து
முப்போதும் வாழ்த்துவன்,
    என்னும் இதுஅவன் மொய்ப்புகழ்க்கே? (23)

மொய்த்த வெந்தீவினை யால்பல்லுடல்
    தோறும்மூத்து, அதனால்
எய்த்தொழிந்தேன்முனை நாள்களெல்லாம்;
    இன்று கண் டுயர்ந்தேன்
பொய்த்தவம் போற்றும்
    புலைச்சமயங்கள் நிலத்தவியக்
கைத்தமெய்ஞ்ஞானத்து, இராமா-
    நுசனென்னும் கார்தன்னையே (24)

[வைப்பாய வான்பொருள்—'வைத்தமாநிதி' என்பதுபோல் ஆபத்து-ரட்சகமான பெரும் பொருள். இருநிலத்தில்—இப் பெரிய பூமியில். உறுவினையேன்—மிகுந்த தீவினையுள்ள நான். முப்போது—மூன்று காலங்களிலும். மொய்ப்புகழ்—சிறந்த புகழ்.]

கருத்து:—நல்லன்பர்கள் தங்கள் மனத்தகத்தே ராமானுஜரைச் சிறந்த சேமநிதியாக வைத்துக்கொள்கிறார்களாம், சிறந்த நிதிகளை உள்ளே வைத்துப் பாதுகாப்பவர்களைப்போல. இத்தகைய உலகில் 'இவனைப்போல் ஒரு பாவி இல்லை' என்னும்படியிருக்கும் நானும் என் வஞ்சநெஞ்சில் வைத்து வாழ்த்துகிறேனே! இது அவரது புகழுக்கு எப்படி விளையுமோ?

[மொய்த்த வெந்தீவினை-தேன் கூட்டை ஈ மொய்த்தாற்போல் ஆத்மாவை மொய்த்துக்கொண்டிருக்கும் தீவினைகள். மூத்து-நீண்ட காலம் வசித்து. எய்த்து ஒழிந்தேன்-களைத்துப் போனேன். முனை நாள்களெல்லாம்-முந்திய காலமெல்லாம். கைத்த-கடிந்த. கார்-மேகம்.]

கருத்து:—மொய்த்துக்கொண்ட தீவினைகளால் எத்தனையோ உடம்புகளில் உழன்று உழன்று ஓய்ந்து போனேன் எவ்வளவோ காலமாக. இன்று ராமானுஜரைக் கண்டு உயர்ந்தேன். இவர் புலைச் சமயங்கள் என்ற வெப்பம் அவிந்து நிலம் குளிர மெய்ஞ்ஞானம் பொழியும் மேகமாக விளங்குகிறார்.

ராகம் : தோடி   தாளம் : ஆதி (2-களைச்சவுக்கம்)

(பாட்டு 23—ம் 24—ம்)

; ஸா ரிகாரி ரிஸ ஸா ரிஸ ஸ்நிரிஸநித நி | ; தா கா கரிரீ | கம தப பம கரி ரிஸ ||
வை ப்பா . . ய . வான்பொருளென் . . . . று | . நல்லன் பர் . . | மனத்த . . . க . த்தே. ||

கரிரீ — ஸரி கா மா பா தப தம தப தா | , ம மதா நிரீ நிததா ம | கா பம கரி கரி கம ||
. . . — எப். போதும் வை க்கு . மி. ரா. மா | . . னு . ச . னே . . இ | ரு நி . . . ல . த்தில் ||

; — பதா நிஸா நித தபா, பா பநிதப மாதப பக | மா பாதப தாநிஸ் நித தா | , தநி ஸ்ாரிஸ் நீ ஸ்ா ஸ்ா ||
. — ஒ . ப்பா. ரி . . ல்லா த உ . று . வி . . னே. | யேன் வஞ்.. . . . ச. . | . நெஞ். சில்.. . வைத்து ||

; , — பத நிஸ்ரி க்ாரி ரிஸ் ஸ்ா ரிஸ் நிதா, பதநி ஸ்ரிஸ் | ஸ்ா ரி நீ நிரி ஸ்நி தமா | க க நித தா க்ரிரீ ம்க் ரிஸ் ||
. — மு ப்போ . . . . தும். வாழ்த்து.வன். என். று . . . | . . . . மி . து . வவன் | மொய் பு . . கழ் . . க்கே . . . ||

நிஸ் நித பம — பத நிஸ்ா நி த த பா தப பம மா ப பா | ; . த த த தா | பா பநி தப மக மா ||
. . . . . . — மொய் த்த. வெங். . . தி வி . . . னே யால் | . பல்லுடல்தோ | றும் மூ. . . த் ததனுல் ||

; , — க த ப ப ப மக பம கரி ரிஸ ஸா, ரி கா ரிஸ | ரி நி ஸரி கா மா | பா தப பம பத பத மப ||
. — எய். த் தொழிந் . . தேன்... முன நாள் . . கள் | . . எல்.லாம் இன் | று கண் . . . டு . யர்ந் தேன். ||

; , — பத நிஸ்ா நிதத பா பநி தபமப பா கமா, | ; பா தப தா நிஸ் நித தா | தநி ஸ்ா ரிஸ் நி ஸ்ா ஸ்ா ||
. . — பொய் . த்த . வம்.. போற்றும் . . . . பு . லேச் | . ச ம . யங் . . கள் . . | நிலத்த . . . . வி ய ||

; , — பத நிஸ் ரிகாரி ரிஸ் ரிஸ் நிதா, தநி ஸ்ா | ஸ்நி நிரி ஸ்நி த தநி தாமா | கா கம தநி ஸ்ா ரிஸ் நிதபம தம ||
. — கை. த்த . . . . மெய். ஞா. . . ன . த்தி | ரா. மா. னு . ச நென்.னும் | கார் த்த. . . னே. . . . . . . யே. ||

கரி ஸநி —
. , . . —
(வைப்பாயவான்)

19

தோல்வியே வெற்றி!

★

தற்கால அரசர்கள் பட்டங்கள் கொடுப்பதுபோல், பழைய தமிழரசர்களும் பட்டப் பெயர்கள் சூட்டி வந்தார்கள். அவற்றில் ஏனாதி என்று ஒரு பட்டம். ஏனாதியைத் தள வீரர்களுக்கு மேலதிகாரி என்பர். மந்திரி பதவிக்கு மேல் அரச பதவிக்கு அடுத்தது 'ஏனாதி' என்று சொல்வதும் உண்டு.

பட்டமா, பெயரா?

'ஸர்' 'திவான்பகதூர்' 'கான் பகதூர்' முதலான பட்டங்களைச் சென்ற ஆங்கில அரசாங்கம் தேச பக்தியில்லாத ஒருவருக்குச் சூட்டியபோது 'அடடா, அவருக்கு இனி என்ன குறை? நெற்றியிலே பட்டங்கட்டியாச்சு!' என்று மக்கள் பரிகசிப்பதுண்டு. ஏனாதிப் பட்டம் உண்மையில் அரசனால் தகுதியுள்ளவனுக்கு நெற்றியிலே கட்டப்பட்டதாகும். நெற்றியில் ஏனாதிப்பட்டம் கட்டிவிட்டு,ஏனாதி மோதிரம் என்று ஒரு மோதிரத்தையும் அரசன் பட்டம் பெற்றவனின் விரலில் அணிவதுண்டு. ஏனாதிப் பட்டத்தைச் 'செம்பொனால் செய்த பட்டம்' என்றும் சொல்வதுண்டு. ஏனாதிப்பட்டம் பெற்றவனை 'ஏனாதி இன்னார்' என்று இயற்பெயரையும் பட்டத்துடன் இணைத்துக் கூறுவது வழக்கம்.

ஆனால் பெரிய புராணத்தில் வரும் ஏனாதி நாத நாயனார் யார்? இவர் பெயரை ஏனாதிப் பட்டம் பற்றி வந்த குடிப் பெயர் போலும் என்பர் டாக்டர் சாமிநாதையர். அப்படியானால் இவருடைய இயற்பெயர் என்ன? இன்னதென்று தெரியவில்லை என்பதாக ஒப்புக்கொள்ள வேண்டியது தான்.

தொழிலும், தொண்டும்

சேக்கிழார் சுவாமி இந்த நாயனாரை,

> ஈழக் குலச்சான்றார்
> ஏனாதி நாதனார்

என்று குறிப்பிடுகிறார். அரச குலத்தினருக்கு வாள் வித்தை பயிற்றுதல இவருக்கு உத்தியோகம். இத்தொழிலில் சிறந்து விளங்கிய இவருக்கு தளவீரர்களின் மேலதிகாரிக்குரிய ஏனாதிப் பட்டத்தை ஓர் அரசன் அளித்திருக்கவும் கூடும். இந்த ஏனாதி நாதர் தமது உத்தியோகத்தில் கிடைத்து வந்த பொருளையெல்லாம் அடியார்களுக்கு அள்ளி வழங்கினார். அது தொழில்; இது தொண்டு.

பொருமையும், பூசலும்

ஏனாதிநாதர் காலத்திலே அதிசூரன் என்னும் வேறொரு வாள் வீரனும் இருந்தான். அவன் தொழிலும் வாள்வித்தை கற்பித்தலே. ஏனாதிநாதரின் தொழிற் சிறப்பினால் இவருக்கு வருவாய் வளர்ந்தது. அவனுக்கோ ஊதியம் நாள்தோறும் குறைந்துவந்தது. அவன் பொருமையால் புழுங்கினான். இறுமாப்பினால் இவரிடம் பகை கொண்டான்.

ஒரு நாள் அதிசூரன் ஏனாதிநாதரோடு போர் செய்யவும் துணிந்து தன்னைச் சார்ந்த வீரர் கூட்டத்துடன் இவர் வீட்டுக்குப் போய்த் தலைவாசலில் நின்று இவரைப் போருக்கு அழைத்தான்.

புலியும், நரியும்

புலி கிடந்த குகைக்குப்போய் ஒரு குள்ளநரி அக்குகை வாசலில் நின்று, 'புலியே! வா வா சண்டைக்கு, வந்துபார்!' என்று அழைத்தது போலத்தான் இருந்ததாம், அதிசூரன் ஏனாதியைப் போருக்கு அழைத்ததும்.

> **வெங்கண் புலிகிடந்த**
> **வெம்முழையில் சென்றழைக்[கும்**
> **பைங்கண் குறுநரியே**
> **போல்வான்**

[வெங்கண்—தீக்கண். வெம்முழையில்—கடிய குகையில் பைங்கண்—குறுகிய பார்வை; கள்ளப் பார்வை.]

என்று ஏனாதி நாதரின் தலைவாசலில் நிற்கும் அதிசூரனைச் சுட்டிக் காட்டுகிறார் சேக்கிழார். புலியின் தீக்கண்-பார்வையையும், குள்ளநரியின் கள்ளப்பார்வையையும், 'வெங்கண்' என்றும் 'பைங்கண்' என்றும் முரண்பட எதுகையில் தொடுத்திருக்கும் நயம் பாராட்டத்தக்கது.

முதலாவது போர்

ஏனாதிநாதர் யுத்தசன்னத்தரானார். குள்ள நரியின் கள்ளப் பார்வைக்கு முதலில் புலிபோலத் தோன்றியவர், சிங்கம்போல் கர்ச்சித்து எழுந்து, காலில் வீரக்கழல் கட்டி வாளும் கேடகமுமாய்ப் புறப்பட்டு வந்தார். அது கேள்வியுற்ற மாணாக்கர்களும், போர்த்தொழிலில் சமர்த்தர்களான உறவினர்களும் ஆயுதபாணிகளாக விரைந்து வந்து, ஏனாதிநாதரைச் சூழ்ந்து தொடர்ந்து வந்தார்கள்.

அதிசூரன் ஏனாதியை நோக்கி, 'நாம் இருவரும் இதற்குச் சமீபமாகிய வெளியிலே, நம்மவர்களைச் சேனைகளாக அணிவகுத்துக் கொண்டு போர்புரிவோம். போரில் வெற்றியடைவோரே வாள்வித்தை கற்பிக்கும் முழு உரிமையும் பெறவேண்டும்' என்றான். ஏனாதியும் உடன்பட்டார்.

தோற்றவன் தந்திரம்

அந்தப்போரில் அதிசூரன் ஏனாதிநாதருக்குத் தோற்றுப் புறங்காட்டி ஓடினான். தோற்றவனுக்கு அன்றிரவு உறக்கமே பிடிக்கவில்லை. படுக்கையும் வெறுத்து மண்ணிலே புரண்டவனாய் எப்படியாவது ஏனாதிநாதரை வெல்லவேண்டும்' என்று அதற்கு ஓர் உபாயத்தை ஆலோசித்தான் முடிவில்,

'ஈனமிகு வஞ்சனையால்
வெல்வன்'என எண்ணினான்

வீரத்தால், சூரத்தனத்தால் வெல்லவே முடியாது; வஞ்சனையால் வெல்வேன்!' என்று துணிந்தான்.

பொழுது புலர்ந்ததும், அதிசூரன் ஓர் ஒற்றனை ஏனாதிநாதரிடம் ஏவி, 'இனி நமக்கு உதவியாக நம்முடைய ஊரவர்களையும் அழைத்துக் கொல்லவேண்டியதில்லை. நாம் இருவர்மட்டும் வேறோரிடத்தில் தன்னந்தனியராய்ப் போர்புரிவோம்' என்று செய்தி அனுப்பினான். ஏனாதிநாதர் அதற்கும் உடன்பட்டு, வாளும், கேடகமும் எடுத்துக் கொண்டு தனியே புறப்பட்டுப் போய், எதிரியின் வரவை எதிர்பார்த்து நின்றார்.

பகைவன் பக்தனான விசித்திரம்

அதிசூரனும் வந்து சேர்ந்தான் வாளுங் கேடகமும் தரித்தவனாய். சிங்க ஏறுபோல் உலாவிக் கொண்டிருந்த ஏனாதிநாதரை நெருங்கிச் சென்றான். அவரைப் பார்க்க லஜ்ஜைப் பட்டவன்போல் முகத்தைக் கேடகத்தால் மறைத்துக் கொண்டு அவருக்கு முன்னே முடுகி நடந்தான். பளிச்சென்று அவன் மேல் பாய அடி பெயர்த்தார் ஏனாதி: பாய்ந்து அப்படியே பகைவனைக் கொன்று தீர்த்துவிட எண்ணினார். அப்போது திடீரென்று தன் கேடகத்தை விலக்கி முகம் காட்டினான் அதிசூரன். என்ன துணிவு! என்ன அதிசயம்!

அம்முகத்தைக்கண்டதும் ஏனாதி திடுக்கிட்டார். தன் மதுவாளையும்,கேடகத்தையும்எறிந்து விட்டுத் தோல்விக்கும், அவனால் கொலை செய்யப்படுவதற்கும் கூடச்சித்தமாகி விட்டார்!

ஏன் இப்படி? இந்த அதிசய மாறுதலுக்குக் காரணம் என்ன? அதற்கு முன் என்றுமே திருநீறு கண்டிராத அந்த நெற்றியில் பளிச்சென்று வெண்ணீறு கண்டு விட்டார். ஏனாதிநாதர்! அப்படிப் பாழும் நெற்றியில் புண்ணிய வெண்ணீறு பொலிவானேன்? பாழ்பட்ட நெஞ்சம் பண்பட்டதா? அதிசூரன் என்ற கோழை நாஸ்திகனும் திருந்தி விட்டானா? திருந்தியிருந்தால் இந்தப் பக்த மணியிடம் சண்டைக்கு வருவானேன்?

சேக்கிழாரிடம் கேட்டுத் தெரிந்து கொள்வோம்.

வெண்ணீறு நெற்றி
விரவப் புறம்பூசி,
உள் நெஞ்சில் வஞ்சக்
கறுப்பும் உடன்கொண்டு

வந்தானும் அதிசூரன்.

இவனும்,

மைப்பொதி விளக்கே என்ன
மனத்தினுள் கறுப்பு வைத்து

மெய்ப்பொருள் நாயனாரிடம் வந்து சேர்ந்த முத்தநாதனைப் போலவே வந்து சேர்ந்தானும்.

பக்தரின்
அதி விசித்திர மனப்பான்மை

மெய்ப்பொருள் நாயனார் போலவே ஏனாதிநாதரும் நடந்துகொள்கிறார். 'முன்பு இவர்மீது காணாத திருநீற்றின் பொலிவினை இன்று காணப்பெறுகின்றேன். இவரும் அடியவர் ஆகிவிட்டார். ஆதலால் இவருடைய உள்ளக்குறிப்பின் வழி நிற்பேன்' என்று எண்ணமிட்டவராய், இவரை எதிர்க்கும் எண்ணமே இருக்கக்கூடாதென்று துணிந்து தம்முடைய வாளையும், கேடகத்தையும் எறிந்துவிட வேண்டுமென்றுகூடத் தீர்மானிக்கிறார்.

ஆனால் இந்தத் தீர்மானத்தை ஏனாதி நிறைவேற்றவில்லையாம். ஏன்? சேக்கிழார் வாக்கு மூலமாகவே தெரிந்துகொள்வோம்:

> **கைவாள் உடன்பலகை**
> **நீக்கக் கருதி, அது**
> **செய்யார், 'நிராயுதரைக்**
> **கொன்றார் எனும் தீமை**
> **எய்தாமை வேண்டும்**
> **இவற்கென்(று)' இரும்**
> **பலகை]**
> **மெய்வாள் உடன் அடர்த்து**
> **நேர்வார்போல் நேர் நின்**
> **றார்.]**

[பலகை—கேடகம். எய்தாமை வேண்டும்—அடையாமலிருக்க வேண்டும். இரும்பலகை — தன் பெரிய கேடகம். மெய்வாள்— எண்ணெய் பூசிய வாள். அடர்த்து —நெருங்கி எதிர்த்து. நேர்வார் போல்—நேராக நின்று போர் செய்கிறவர்போல்.]



'நான் இப்போது இவருக்கு வெற்றி சுலபமாக வேண்டுமென்று வாளையும் கேடகத்தையும் எறிந்துவிடலாம். ஆனால் "நிராயுத பாணியைக் கொன்றுவிட்டாரே" என்றும் பழி வந்து சேருமே!' என்று அஞ்சுகிறாராம். ஆகவே, வாளையும், கேடகத்தையும்போட்டுவிடாமல், எதிர்ப்பவர்போல் நேர் நின்று போரிடுவார்போல் நடிக்கிறார்.

வெற்றி யாருக்கு?

இனி என்ன நேரிடப் போகிறது?

> **அந்நின்ற தொண்டர்**
> **திருவுள்ளம் ஆரறிவார்?**
> **முன்நின்ற பாதகனும்**
> **தன்கருத்தே முற்றுவித்தான்**

[அந்நின்ற—அங்கு அப்படி நின்ற.]

என்று பாடுகிறார் சேக்கிழார். அதிசூரன் என்ற பெயருக்குச் சிறிதும் தகுதியில்லாத அந்தக் குள்ளநரி—வேஷதாரி ஏனாதிநாதரைக் கொன்றுவிடுகிறான். இதை வாய்விட்டுச் சொல்லவும் கூசுகிறது சேக்கிழாரின் பக்தியுள்ளம். ஆகவேதான்,

> **முன்நின்ற பாதகனும்**
> **தன் கருத்தே முற்றுவித்**
> **தான்.]**

என்கிறார். அதிசூரன் வஞ்சனையால் வெற்றி பெற்றானா? தன் நோக்கத்தை நிறைவேற்றிக்கொண்டான். ஆனால் அது வெற்றிதானா?

இத்தொண்டரின் திருவுள்ளம் அறிபவர் ஆண்டவராகிய சிவபெருமான் தான் என்று கதையை முடிக்கிறார் சேக்கிழார். இத்தொண்டரை ஏனாதிநாதநாயனார் என்று சைவ உலகம் போற்றுகிறது. எந்த ஏனாதிப்பட்டம் தான் இவர் பெருமையை உள்ளபடி விளக்கக்கூடும்? இவர் செயலே அப்பட்டத்திற்கும் ஒரு விசேஷ ஒளி அளித்துவிட்டதுபோலத் தோன்றுகிறது.

கட்டுரையாளருக்கு

★

"சுதேசமித்திரன்" வாரப் பதிப்பில் கட்டுரைகள், கதைகள், ஹாஸ்ய கதைகள், கவிதைகள் முதலியவற்றை எழுதும் நண்பர்கள், தங்களுடைய கதா பாத்திரங்களையும் கற்பனையாகவே அமைக்க வேண்டுகிறோம். குறிப்பாகச் சுட்டிக்காட்டும் வண்ணம் ஊரையோ, பேரையோ குறிப்பிடாமலிருக்க வேண்டும்.

—ஆசிரியர்.

மாதர் மகா சபை

'குங்குமம்'

'அதோ சரோஜா வந்துவிட்டாள். அவளைக் கேட்டால் எல்லாம் தெரிந்துவிடுகிறது' என்றாள் அங்கு வந்த சரோஜாவைப் பார்த்து ருக்குவின் மாமியார்.

'பரவாயில்லை. சரோஜாவை வர வர சேஷிப் பாட்டி கோஷ்டியில் சேர்த்துவிட்டீர்கள்போலிருக்கிறது' என்றாள் சிரித்துக்கொண்டே சரோஜா.

'இல்லையடி பக்கத்தகத்துக் காரியாயிற்றே. உனக்கு நன்றாகத் தெரிந்திருக்குமே என்று சொன்னேன்' என்றாள் ருக்குவின் மாமியார்.

'ஹம்ஸா ஸமாசாரந்தானே! தெரியும் எனக்கு நீங்கள் எப்படியும் கேட்பீர்களென்று' என்றாள் சரோஜா.

'அப்படியானால் ஏதோ நடந்திருக்கிறதென்றுதான் தெரிகிறது' என்றாள் ருக்கு.

'இல்லாமல்கூட விஷயம் வெளியில் வருமா? ஏதோ கொஞ்சமாவது நடந்திருக்கும்' என்றாள் சாந்தா.

'ஏதோ கோபத்தில் கிணற்றங்கரை வரையில் ஓடியிருக்கும். அதைக் கிணற்றில் குதித்துவிட்டது என்று கொஞ்சம்கூடச் சேர்த்து சொல்லிவிட்டிருப்பார்கள்' என்றாள் விமலா.

'கூடச் சேர்க்கவுமில்லை ஒன்றுமில்லை. கிணற்றில் குதித்தேதான் விட்டது' என்றாள் சரோஜா.

'அகமுடையான் கோபித்துக்கொண்டான் என்பதற்காகவா? நல்ல ரோஷக்காரிதான்' என்றாள் ருக்குவின் மாமியார்.

'ஹம்ஸா ரொம்ப நல்ல பெண் மாமி. அவ்வளவு சாதாரணமாக நினைத்துவிடாதீர்கள்' என்றாள் சரோஜா.

'உலகத்திலே அகமுடையான் என்றால் ஒருவேளை இல்லாவிட்டால் ஒருவேளை கோபித்துக்கொள்ளத்தான் கோபித்துக்கொள்வான். அதை சகித்துக்கொள்ளப் பொறுமையில்லையென்றால் அதெல்லாம் ஒரு நாளும் குடும்பத்துக்கு லாயக்குப்படாதுகள். எங்கள் பெரிய மாமியாராக இருந்தால் இப்படிப் பட்டதுகளுக்கெல்லாம் மேலே ஒரு கல்லையும் தூக்கிப் போட்டுவிட்டுப் பேசாமல் வந்துவிடுவார். எப்பொழுது பெண் ஜன்மம் எடுத்துவிட்டோமோ கொஞ்சம் சகிப்புத் தன்மை இருந்துதான் ஆக வேண்டும்' என்றாள் ருக்குவின் மாமியார்.

'ஹம்ஸாவைவிடவா பொறுமைசாலிகள் இந்த உலகத்தில் இருக்கப் போகிறார்கள்?' என்றாள் சரோஜா.

'அப்படியிருந்தால் எதற்காகக் கிணற்றில் விழுந்து பிராணனை மாய்த்துக்கொள்ளப் பார்த்தது?'

'அந்தப் பொறுமைக்கும் ஒரு எல்லை இல்லையா மாமி! அதையும் மீறிவிட்டால் யார்தான் என்ன செய்யமுடியும்?'

'என்ன அப்படிப் பொறுமையைச் சோதிக்கும்படியான காரியத்தைச் செய்துவிட்டான்? ஏதோ ஒரு தட்டு தட்டி இருப்பான். என்ன பிரமாதம்! குடும்பத்தில் சகஜந்தானே இதெல்லாம்?'

'ஒரு தட்டா? அதைவிட மகா பிரளயங்களெல்லாம் நடந்திருக்கிறது. இன்னொருவராக இருந்தால் என்றைக்கோ தூக்குப்போட்டுக்கொண்டிருப்பார்கள், ஹம்ஸா பாவம் மிகவும் பொறுமைசாலியாக இருக்கவே இத்தனை காலம் பொறுத்து வந்தது.

'என்ன தகராறும் அதுகளுக்குள்ளே?'



''............ஐயாவும் இன்னும் ரெண்டுபேரும் குடித்துவிட்டு............''

'ஹம்ஸாவினுடைய அகமுடையான் இருக்கிறதே, மகாநாடோடி. குடும்பப் பொறுப்பே கிடையாது. ஒரு கம்பெனியிலே எண்பதோ, தொண்ணூறோ சம்பளம். ஒரு சில்க் ஜிப்பாவைப் போட்டுக்கொண்டு, சிகரெட் புகையை 'பப்பப்' என்று விட்டுக்கொண்டு நாலு பேருடன் அது தெருவில் சவடால் அடித்துக்கொண்டு போகும் போது பார்த்தால் சாதாரண ஒரு ஸம்ஸாரிபோலவே தெரியாது. 'ஆகாயம் அரைவிரற்கடை' என்பார்களே அந்த மாதிரி தோரணையில் தான் இருக்கும்' என்றாள் சரோஜா.

'கொஞ்சம் குஷிப் பேர்வழி போலிருக்கிறது' என்றாள் ருக்குவின் மாமியார்.

'என்ன குஷி மாமி வேண்டியிருக்கிறது! வீட்டில் ஒன்றுலொன்று கிடையாது. நாலு பேருடன் போய்க்கொண்டிருக்கிறதா? திடீரென்று அவர்களை அழைத்துக்கொண்டு ஒரு ஹோட்டலினுள் நுழையும். ஐந்து ஸ்வீட், ஐந்து மிக்சர், ஐந்து காப்பி என்று ஆர்டர் கொடுத்துச்சாப்பிட்டு விட்டு இரண்டரை ரூபாயைக் கொடுத்துவிட்டு வெளியேவந்து நாலுபேருக்கும் நாலு சிகரெட்டைக்கொடுத்துவிட்டுத்தானும் ஒன்றைப்பற்றவைத்து பழைய படி 'பப் பப்' என்று புகையை விட்டுக்கொண்டேபோய்க் கொண்டிருக்கும். அத்துடன் மாத்திரமில்லை. ராத்திரி எட்டு மணிக்குமேல் திடீரென்று வீட்டுக்கு இரண்டு பேரை அழைத்துக்கொண்டுவரும். 'பரவாயில்லை வீட்டுக்குப்போய்வருவதென்றால் நேரமாய்விடும். மணி எட்டரையாகிவிட்டது. இங்கேயே சாப்பிட்டுவிட்டுப்போகலாம். இன்று எப்படியும்...... ...ஆட்டத்துக்குப் போய்தான் ஆகவேண்டும்..........என்ன யோசிக்கிறீர்கள்! திடீரென்று வந்தால் உள்ளே ரெடியாய் இருக்குமோ இராதோ என்றா? அந்த சந்தேகமே வேண்டாம். இங்கே எப்பொழுதும் இரண்டு பேருக்கு அதிகமாகவே செய்து வைத்திருப்பார்கள்' என்று சொல்லிவிட்டு 'சீக்கிரம் இலை போடு' என்று அகமுடையாளுக்கு உத்தரவிட்டுவிட்டு அவர்களை வலுக்கட்டாயப் படுத்தி உள்ளே அழைத்துக் கொண்டுவந்து சாப்பிடுவதற்கு உட்கார்ந்துவிடும். இந்த ரேஷன் காலத்திலே அவனவன் வயிற்றுக்கு அகப்பட்டுச்சாப்பிடுவதே பெரும் பிரயத்தனமாக இருக்கிறது. இப்படிப் பட்ட சந்தர்ப்பத்தில்கூட இரண்டுபேரையும் அழைத்துக் கொண்டுவந்துவிட்டதானால் அந்தப் பெண் என்ன செய்யும் பாவம்? அதுவும் வாரக்கடைசி. மறுபடியும் அரிசியைக் களைந்து வைத்துவிடுவோமென்றால் உள்ளே மணி அரிசி இராது பிளாக்மார்க்கெட்டில் வாங்குவோமென்றால் ரேஷன் அரிசியை. வாங்குவதற்கே சரியாகப் பணத்தைக் கொடுக்காது. ஹம்ஸா பாவம் பக்கத்து வீட்டில், எதிர் வீட்டில் கடன்வாங்கி ரேஷன் அரிசியை வாங்கும். 'சரி! அசடு, அழைத்துக்கொண்டு வந்துவிட்டது. நாம் பட்டினி இருந்தாவது நமது பங்கைப்போட்டுத்தொலைப்போம்' என்று போட்டதானால், என்ன சமையல் இது? ஏன், காய்கறிக்கடைக்குப் போய் வர ஒழியவில்லையா ?அதைவிட என்ன வேலையாம்' என்று ஒரு அதட்டு அதட்டிவிட்டு, 'இந்தப்பெண்டுகளே சுத்தசோம்பேறிகள். அடேயப்பா! எல்லாவற்றையும் நாம் வந்து வாங்கிவைத்தால் உண்டு. பொறுப்பு என்பதே கொஞ்சம்கூடக் கிடையாது என்று சொல்லிச் சாப்பிட்டு விட்டு 'சரியாக ராத்திரி ஒரு மணிக்குத் தெருக்கதவைத் திறக்கவேண்டும்' என்று சொல்லிக்கொண்டே சினிமாவுக்குப் போய்க்கொண்டிருக்கும். இப்படியேதான் டிபன் வேளையிலும் நாலுபேரை அழைத்துக்கொண்டு வந்துவிடும். லீவு நாட்கள் வந்துவிட்டால் வீட்டில் சீட்டுக் கச்சேரி அமர்க்களப்படும். 'ஹம்ஸா! சுடச்சுட ஸ்ட்ராங்காக ஒரு கூஜாவில் காப்பி கொண்டுவைத்துவிடு' என்று உத்தரவுபோட்டுவிடும். கொண்டுவைக்காவிட்டாலோ அவர்கள் போன பிறகு வீட்டில் பெரிய ரகளை தான். 'நாம் வாங்கிப் போடா

மல் வீட்டில் எப்படி சாமான்கள் இருக்கும்! தடிதடியாக சிநேகிதர்களை அழைத்துக் கொண்டு வந்து அதிகாரம் பண்ணினால் அது என்ன செய்யும்?' என்பதுபோன்ற போசனைக்குக் கொஞ்சம்கூட இடந் தராது. எத்தனையோ நாள் ஹம்ஸா சொல்லிக் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறது. ராத்திரி திடீரென்று இரண்டு, மூன்று பேரைச் சாப்பாட்டிற்கு அழைத்துக்கொண்டு வந்துவிடுமாம். குழம்பு, ரஸமெல்லாம் கொஞ்சம் கொஞ்சம்தான் இருக்குமாம். அதற்காக அதில் பாதியை எடுத்து வைத்துவிட்டு மீதி பாதியில் நிறைய ஜலத்தைக் கொட்டி வந்தவர்களுக்குப் பரிமாறிவிடுமாம். முதலில் எடுத்து வைத்த பாதியை அகமுடையானுக்குப் பரிமாறுமாம்' என்றாள் சரோஜா.

'சே பந்தி வஞ்சனை செய்யக் கூடாது' என்றாள் சாந்தா.

'வாஸ்தவந்தான். ஹம்ஸாவுக்கும் இது தெரியாத விஷயமில்லை. ரஸிகனாக இருந்தால் பரவாயில்லை. அந்த 'அசட்டுப் பைத்தியம்' (அகமுடையான்) அதற்கு ஒரு 'சதிர்' வைக்க ஆரம்பித்துவிடும் ஏன் நன்றாக இல்லை என்று. அதற்காகவே இந்த உபாயம். அவ்வளவென்ன?' அகத்தில் நெய்யே இல்லை. திடீரென்று விருந்தாளிகளை அழைத்துக் கொண்டு வந்துவிட்டார்கள். ராத் தி ரி வேளையில் யாரைப் போய்க் கேட்பது மாமி. நெய் போடவில்லையென்றாலோ, கையில் பணத்தைக் கொடுத்து வைத்திருக்கிற மாதிரி 'ஏன், சாயங்காலமே பார்த்து வைக்க துரைசானியம்மாள் அவர்களுக்கு ஒழியவில்லைபோலிருக்கிறது! தூங்குவதற்கும் வம்பு அளப்பதற்கும்தானே சரியாக இருக்கிறது! இதற்கெல்லாம் எங்கே ஒழியப் போகிறது?' என்று பெரிய கூச்சல்போட ஆரம்பித்துவிடும். அதற்காக காலி நெய்க்கிண்ணத்தைக் கையிலெடுத்துக் கொண்டு நெய் போடுகிற பாவனையாக வெறும் கரண்டியை ஒவ்வொரு இலைக்கு நேராகவும் கவிழ்த்துக்கொண்டேபோனேன். என்ன செய்கிறது மாமி! இல்லாவிட்டால் மானம்போகிறதே' என்று கண்களில் நீர் தத்தளிக்க ஒருநாள் தன் குறையை ஹம்ஸா சொல்லிற்று பாவம். ஹம்ஸாவுக்குக் கலியாணம் ஆகி எட்டு வருஷங்களாகிறது. இதுவரையில் அந்த அகமுடையான் ஒரு புடவையோ, ரவிக்கையோ வாங்கிக்கொடுத்ததுகிடையாது. எல்லாம் பிறந்தகத்திலிருந்துதான். ஹம்ஸாவின் பெரிய சகோதரன் டில்லியில் ஏதோ நல்ல வேலையில் இருக்கிறானும். அவன் ஹம்ஸாவின் கஷ்டத்தைத் தெரிந்துகொண்டு மாதம் இருபதோ, இருபத்தைந்தோ பணம் அனுப்புவானும். அதை வைத்துக்கொண்டு ஏதோ தானும் நாலுபேருக்கு நடுவில் எதையும் அம்பலமாக்காமல் ஜீவனம் செய்துகொண்டு வந்தது. மகா பொறுமைசாலி பாவம்! மீதி பேராக இருந்தால் அகமுடையான் படுத்துகிற பாட்டிற்குத் தெருவை இரண்டு கூட்டிவிடுவார்கள். ஹம்ஸா பாவம்! நமக்குத் தானே அவமானம் என்று அவ்வளவையும் இரண்டாம் பேருக்குத் தெரியாமல் சகித்துக்கொண்டு வந்தது' என்று சரோஜா சொல்லிக் கொண்டிருக்கையில் 'சே! சே! ரொம்பக் கஷ்டம் பாவம்! கேட்பதற்கே கஷ்டமாக இருக்கிறது,' என்றாள் ருக்குவின் மாமியார்.

"..............அவர்களை வலுக்கட்டாயப்படுத்தி................"

'எத்தனை நாளைக்குத்தான் பொறுக்கும் பாவம்! அதற்கும் தாளமுடியாமல்தான் கிணற்றில் குதித்துவிட்டது' என்றாள் ருக்கு.

'இதையெல்லாம்கூட அது அவ்வளவாகப் பொருள் படுத்தவில்லை. ஏதோ விதி தொலைத்தாகவேண்டுமென்று மனதைத்திடப்படுத்திக் கொண்டிருந்து விட்டது. அன்று ராத்திரி

நடைபெற்ற சம்பவம் தான் அதன் மனதை முறியச் செய்து விட்டது. ராத்திரி சமையல் செய்துவிட்டு அகமுடையான் வருகைக்காக ரொம்ப நாழி எதிர் பார்த்துக் கொண்டிருந்தது தெருவில் ஒரு ரிக்ஷா வந்து நின்றது. 'அம்மா' என்று கூப்பிட்டான் ரிக்ஷாக்காரன். ஹம்ஸா தெருப் பக்கம் வந்ததாம். 'ஐயா ரொம்ப போதையில் இருக்கிருர். ஐயாவும் இன்னும் இரண்டு மூன்று பேரும் குடித்துவிட்டு ரோடில் விழுந்து கிடந்தார்கள். இவருக்குத் தெரிந்த ஒருவர் இவரை ரிக்ஷாவில் ஏற்றி இங்கே அனுப்பிஞர்' என்று சொல்லிவிட்டு ரிக்ஷாக்காரன், ரிக்ஷாவில் ஏற்றி வந்த ஹம்ஸாவின் அகமுடையானை மெதுவாக இறக்கி உள்ளே தூக்கிக்கொண்டு போய்விட்டானும். இதைக் கேட்டதுதான், 'ஐயோ!' என்று கண்களைக் கையால் பொத்திக்கொண்டு ஹம்ஸா குடுகுடு வென்று ஓடிக் கிணற்றில் குதித்துவிட்டதாம்' என்ருள் சரோஜா.

,இல்லாமலென்ன? எதற்கு இனிமேல் அந்த ஜன்மம்? என்ருள் ருக்கு. 'ஏழைக் குடும்பத்தில் வாழ்க்கைப்பட்டு, அகமுடையானும் நாடோடியாக இருந்து விட்டால் வேறு நரகமே வேண்டியதில்லை' என்ருள் ருக்குவின் மாமியார்.

'இந்த மாதிரி குடும்பப்பொறுப்பு இல்லாத அசட்டு அகமுடையானுக்கு' வாழ்க்கைப் பட்டு' எத்தனை பெண்கள் கஷ்டப்படுகிறதுகள் தெரியுமா? கொஞ்சம் மானியாய் இருப்பதற்கெல்லாம் ஒருநாள் இல்லாவிட்டாலும் ஒரு நாள் இதே கதி தான் என்ருள் பானு.

'மணி ஐந்தாகிவிட்டது. சபா ஞாபகமே இல்லையா?' என்ருள் விமலா.

'பேச்சு சுவாரஸ்யத்தில் மறந்தே போய்விட்டது' என்று சொல்லிக்கொண்டே எல்லோரும் சபாவுக்குக் கிளம்பினர்கள்.



வாடிக்கைக்காரர்:—என்னப்பா இது? ஒரு வாரமா பால், ஆஸ்பத்திரி மருந்து வாசனை அடிக்கிறதே!

பால்காரன்:—அதுக்கு நான் என்னங்க செய்றது? 'குளா'யிலே வர.........!!

—ஆர். ஜி. சாரி, சென்னை.

"சுதேசமித்திரன்" வாரப்பதிப்பு

சந்தா விவரம்

★

(சந்தாவை முன்னதாகக் கட்டவேண்டும்)

	இந்தியா சிலோன்	வெளி நாடு
1-வருஷம்	13 0	18 0
6-மாதம்	7 0	9 8
3-மாதம்	3 12	5 0

தனிப்பிரதி அணு 4

3 மாதத்திற்கு குறைந்து சந்தா ஒப்புக்கொள்ளப்படமாட்டாது.

மானேஜர்: ''சுதேசமித்திரன்'' ஆபீஸ், மவுண்ட்ரோட், மதராஸ்.

ஞாபகப்படுத்துகிருேம்

★

" சுதேசமித்திரன் " வாரப்பதிப்பில் வெளிவரும் கதைகள், கட்டுரைகள், கவிதைகள் இவற்றில் வரும் பெயர்கள், சம்பவங்கள் முதலியன எவரையும் குறிப்பிடுவன அல்ல. அவை முற்றிலும் கற்பனையே.

—ஆசிரியர்.

அட்டைப்படம்

நாரைவிடு தூது

★

தலைவனின் பிரிவாற்றாமையினால் தாமரை இலைத் தண்ணீரேபோல் தவியாய்த் தவிக்கிறாள் தலைவி. தான் வரித்த மணாளன், தன்னுடைய உள்ளப் பாங்கை உணராமல் இருப்பதற்காக வருந்தி மனம் புழுங்குகிறாள் மற்றொரு லட்சிய மங்கை. இத்தகைய சந்தர்ப்பங்களிலே சேடியர் சேவை மிக முக்கியமாக விளங்கும். தலைவியின் மனப்பாரத்தைக் குறைத்து அவளுக்கு ஆறுதல்கள் சொல்லித் தேற்றிப் பின்னர் தலைவனிடம் தூது போக இசைவர் அத்தோழிமார்கள். உணவோ உறக்கமோகொள்ளாமல், பெற்ற தாயைக் கண்டாலும் சலிப்புத்தட்டிப்போய் எங்கேயாவது ஏகாந்தமாகப் போக விரும்பி தோட்டத்துக்குச் செல்வோமென்றாலோ, அங்கும் தலைவனின் நினைப்புத்தான் மனதில் அதிகமாகிறது தலைவிக்கு. வண்டுகளின் ரீங்காரம் ஒருபுறம்; குயில்களின் இன்னிசை இன்னொரு புறம்; பளிங்கு மேடையில் மயில்களும், தெளிந்த நீருள்ள தடாகத்தில் அன்னங்களும் அற்புதமாக கடந்து நீந்தி உல்லாஸமாகவிருக்கும் காட்சி கண் முன்னாலே தென்படுகின்றன; மருண்ட கண்களுடன் மனதைக் கொள்ளைகொள்ளும் வகையில் நிற்கும் மான்களின் கூட்டம். இவற்றையெல்லாம் கண்ணுறும் தலைவிக்கு துயர் தணிவதற்குப் பதிலாக அதிகரிக்கிறது. மானையோ, மயிலையோ, வண்டையோ, அன்னத்தையோ, அல்லது குயிலையோ தலைவனிடம் தூதுபோய் தன் நிலைமையை உணர்த்திவர இறைஞ்சுகிறாள் தலைவி. குயில் விடுதூது, மயில்விடுதூது, கிள்ளை விடுதூது என்பதுபோன்று புள்ளினங்களின் தூதுபற்றி கவிதைகள் புனைந்திருக்கின்றனர். இந்தப் புள்ளினத் தூதில் ''நாரைவிடு தூது'' என்றும் ஒன்றிருக்கிறது.

காதல் கவியொன்றில் நாரையைத் தூது போகும்படி ஒரு பெண் இறைஞ்சுவதாக பிரஸ்தாபமிருக்கிறது. அக்கவி வெறும், காதல் உணர்ச்சியை மட்டும் சொல்லவில்லை. சோழ நாட்டில் ஒரு ஊர். உறையூருக்கு வடக்கேயுள்ளது அங்கு ஒரு பெண் காவிரியில் வந்து குளித்துப் போவாள். ஆற்றில் ஏராளமான மீன்கள். அவை துள்ளிக் கரைமீது ஏறி, கிடைத்த ஆகாரத்தை எடுத்துக்கொண்டு மீண்டும் நீரில் துள்ளிப் பாய்ந்துவிடும். அவ்வூருக்கு வந்துள்ள பெண், இந்த ஊரின் வளத்தை ஊகித்து அறிந்து கொண்டவள். தினசரி இந்த நாட்டின் வளம் கண்டு மனம் பூரிக்கும் அவள், ஒரு நாள் தான் நீராடப் போகையில் சோழமன்னன் அங்கு நீராட வந்ததைக் கண்டாள். பார்த்த மாத்திரத்தில் மங்கையின் மனம் மன்னனிடம் லயித்துவிட்டது. இம் முதற் சந்திப்புக்குப் பின் அப் பெண்ணின் மனதில் மன்னனின் உரு பூர்ணமாகப் பதிந்து போகிறது. அதே நினைப்புடன் தன் சொந்த ஊருக்குப் போய்விட்டாள்.

ஒருநாள் தன்னுடைய ஊரில் உள்ள குளத்துக்குக் குளிக்கச்சென்றாள். அங்கு ஓர் நாரை வடக்கேயிருந்து குளத்துக்கு வந்திறங்கியது. அது மேற்கொண்டு பிரயாணத்தைத் துவக்கலாமென்று எண்ணி, தான் முன்பு காவிரியில் நீராடப்போன இடத்துக்கே போய்ச் சேருமென்று கற்பனைபண்ணி தன் மனம் படும்பாட்டைச் சோழமன்னனுக்குத் தெரிவிக்கும்படி நாரையிடம் வேண்டிக்கொள்கிறாள். காதல் ததும்பும் அக்கருத்தைக்கொண்ட பாடல் வருமாறு:—

செங்கால் மடநாராய்!
தென் உறந்தை சேறியேல்,
நின்கால்மேல் வைப்பன் என்
கையிரண்டும், வன்பால்
கரை உரிஞ்சி மீன்பிறழும்
காவிரிநீர் நாடற்(கு)
உரையாயோ நான் உற்றநோய்.

—முத்தொள்ளாயிரம்.

இவ்விதழின் அட்டையில் தோன்றும் சித்திரம் இக்காட்சியை வர்ணிப்பதாகும்.



ஸ்ரீமதியின் ஆவி

ஜி. எஸ். மணி

அவளுடைய துர்மரணம் யௌவனம் மாறாத ஸ்ரீகாந்தனின் உள்ளத்திலே ஆழமான புண்ணாகப்பாய்ந்துவிட்டது. அன்பும், ஆசையுமாகப் பொங்கிப் பெருகும் உணர்ச்சிகளை உறையச் செய்துவிட்டது. நெஞ்சில் நிமிர்ந்து நின்ற காதல் செடியை நெருப்பைக் கொட்டிக் கருக்கிவிட்டது.

"வழக்கம்போல் ஆற்றுக்கு குளிக்கப்போன ஸ்ரீமதி, வயிறும் பிள்ளையுமாக வெள்ளத்தோடு போய்விட்டாள்; தவறி விழுந்த தங்கம் ஆற்றோடு போய்விட்டாள்'' என்று கிராமத்திலிருந்து வந்த சாவோலை அவன் வாழ்க்கையின் வேரைக் கெல்லியெறியும் வஜ்ராயுதமாக வந்தது.

இடி விழுந்ததுபோலே ஸ்ரீகாந்தன் நின்றுவிட்டான்.

எட்டுமாத கர்ப்பிணியாக ஸ்ரீமதி பிறந்தகம் போனாள்; பெற்றுப் பிழைத்து குழந்தையுடன் மீண்டு வருவதாக அசைக்கமுடியாத நம்பிக்கையுடனே தான் போனாள்: கொஞ்சிக்குலாவி, அவனுக்குத் தேறுதல் மொழிகள் எவ்வளவோ சொல்லிச் சென்றாள். "கட்டாயம் திரும்பி வந்து உங்களுக்கு இன்னும் மகிழ்ச்சிகொடுப்பேன்'' என்று பிரியா விடை பெற்றுப்போனாள்.

ஒருத்தியாகப்போய் இருவராகத் திரும்பி வந்து மறுபடியும் அவனுக்கு இன்பமளிப்பாள் என்ற நினைவுடனே அவனும் அவளை அனுப்பிவைத்தான்.

போன இடத்தில் அகால மிருத்யு அவளை அழைக்கவந்தானா? பெற்றுப் புனர் ஜன்மம் எடுத்துவரும் ஆசையுடன்போனவள் பெறுவதற்கு முன்னரே அவன் அழைப்பை எப்படித்தான் ஏற்றுக்கொண்டாளோ! சாகுமுன் என்னென்ன எண்ணினாளோ! எப்படி ஏங்கினாளோ! தாய் வேறு, குழந்தை வேறாகப் பிரியுமுன்னரேகூட கூற்றுவனிடமிருந்து ஏனப்படி அவசர அழைப்போ ?

முழுமனசோடு அவள் போயிருக்க மாட்டாளென்றே அவன் நம்பினான். அவள் சுமந்த குழந்தையைப்பார்க்க ஆசைப்பட்டிருக்கமாட்டாளா ? 'திரும்பி வருவேன்' என்று அவனுக்குக் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றப் பிரியப்படமாட்டாளா ?

பலவந்தமாக சாவு அவளைப் பிய்த்துக்கொண்டு போயிருக்கிறது.

ஐயோ! அழகொழுகும் அவள் முகம் சாவின் பயங்கரத்தை எப்படித்தான் சமாளித்ததோ? எவ்விதம் சகித்தாளோ? அதனிடம் அவள் என்ன மன்றாடினாளோ? அதன் கோரப் பிடியிலிருந்து நழுவ முடியாமல் நொறுங்கிய அவள் நெஞ்சு என்ன நினைத்து ஏங்கியதோ?

அவனைப்போலவே அவளும் நிம்மதியின்றி, அலைவாள் என்றே எண்ணினான். ரத்தமும், சதையும்கொண்ட மனித உருவிலேயே அவன் அவளை இன்னமும் கண்டுவந்தான். 'அவள் சாகவில்லை—சாகவில்லை' யென்றே அவன் நெஞ்சு எப்போதும் அலறியது. அன்பையும், ஆசையையும் கொட்டி அவள் அவனுக்குக் கடைசியாக எழுதியிருந்த கடிதம் அவன் நம்பிக்கையை மேலும் உறுதிப்படுத்தியது. அந்தக் கடிதத்தை அவன் மீண்டும் ஒரு முறை படித்துப் பார்த்தான்.

அவள் சொன்னாள்:—

"என் ஆசைத்துரைக்கு,''

இன்று வரையிலும் ஸௌக்யமாகவே இருக்கிறேன். என் உடல்தான் இங்கே இருக்கிறது; உள்ளமெல்லாம் உங்களைச் சுற்றியே வட்டமிட்டுக் கொண்டிருக்கிறது. நீங்கள் என்னிடம் பேசியது, கொஞ்சியது, நடந்துகொண்டது—எல்லாம் என் நினைவில் எழுந்து நின்றுகொண்டேயிருக்கிறது. நான் பிறந்தகம் போகவேண்டுமென்று தெரிந்து, நான்கு நாட்கள் ஆகுமுன்னரே நீங்கள் துரும்பாய் இளைத்து விட்டீர்களே! இப்போது எப்படியிருப்பீர்களென்பதை நினைத்துப் பார்க்கவே ரொம்பவும் வேதனையாய் இருக்கிறது. நான் புறப்படுவதற்குச் சற்று முன்னர்கூட நீங்கள் என்னிடம் வந்து, 'ஸ்ரீமதி! போகத்தான் வேண்டுமா?' என்று என் கையைப் பிடித்து அழுத்தியபடியே குழைந்து நின்றீர்களே! அதற்காகவேயாவது உங்களிடமே இருந்துவிட்டால் தேவலையென்றுகூடத் தோன்றியது! அப்போது நான் என்ன சொன்னேன் நினைவிருக்கிறதா? 'உடல் எங்கேயிருந்தால் என்ன? உயிர் உங்களிடம்தான்! என்று சொன்னேனே! கூடிய சீக்கிரமே குழந்தையுடன் திரும்பிவந்து உங்களுக்கு இன்பமூட்டுவேன்: உங்களுக்குப் பரிசுடன் திரும்பிவரப் போகிறவளுக்கு நீங்கள் பதில் பரிசு என்ன கொடுப்பீர்கள்? புதிதாக ஏதேனும் உண்டா, கிடையாதா?

—உங்கள் ஸ்ரீமதி.''

சாகப்போகிறவளின் ஆசைக் கடிதமா அது? திரும்பி வருவதைப்பற்றி எத்தனை முறை பிரஸ்தாபித்திருக்கிறாள்! ஆனால்—இனிமேல் திரும்பி வருவாளா?

2

ஸ்ரீகாந்தன், உன்மத்தம் கொண்டவன்போல் உட்கார்ந்திருந்தான்.

அந்தி மயங்கி இருளில் கலந்து சாவின் சாயைபோன்ற மங்கிய ஒளியை எங்கும் படர வைத்தது.

அறையில் கவிந்து கொண்டு வந்த கறுமையையும் காணாதவனாய், தன்னையும், சூழ்நிலையையும் அறவே மறந்திருந்த ஸ்ரீகாந்தன் எதிரே இருந்த மேஜையின் மீது குப்புறக் கவிழ்ந்து கொண்டான்.

கல்லறையின் அமைதி அங்கே குடிகொண்டிருந்தது. திடீரென்று மலர்ந்த மல்லிகையின் சுகந்தம் அந்த அறையெங்கும் கமழ்ந்தது.

அதையுணர்ந்த ஸ்ரீகாந்தன் திடுக்கிட்டுத் தலை தூக்கினான். இங்குமங்கும் பார்த்தான்: மீண்டும் மீண்டும் முகர்ந்து மலைத்தான்—அறையில் இருள் மூடிக் கிடந்தது. யாரும் வந்ததாகத் தெரியவில்லை.

மல்லிகையின் மணம்மட்டும் வீசியபடியே இருந்தது. அந்த வாசனை எங்கிருந்து வருகிறது?

காற்றின் சலனமேயின்றி இறுக்கத்துடன் புழுங்கும் அவ்வறையில் அந்த வாசனைக்கு இடமேது? ஒருகால் தெருப்பக்கமிருந்து வருவதாயிருக்குமோ?... யாராவது பூக்காரி...அல்லது பெண்கள் யாராவது...?......

ஜன்னலருகே சென்று பார்த்தான்; ஆள் நடமாட்டமேயில்லாமல் தெருவும் 'கிச்' சென்றுதான் கிடந்தது. வெளிப்பக்கமும் காற்றின் ஓட்டமில்லை, வாசற்புறமாக மூக்கை நீட்டிக்கொண்டு நீண்ட மூச்சாக உள்ளிழுத்துப் பார்த்தான்; சாக்கடை நாற்றம்தான் குடலைக் குமட்டியது......

மறுபடி உள் பக்கம் திரும்பினான்; ஒன்றுமில்லை. அறை நடுவே வந்து நின்றான்.

மீண்டும் குபு-குபுவென்று மல்லிகையின் மணம் மிதந்தது. வரவர, வெகு வேகத்துடன் வந்தது.

ஸ்ரீ காந்தன் நன்றாக நிதானித்துக்கொண்டான்; நிச்சயமாகப் பிரமையில்லை: வாசனை வருவது வாஸ்தவமே.

திடீரென்று, "யார்?" என்று கேட்டான் நடுங்கிய குரலிலே.

சுற்றிலும் நிலவிய நிசப்தத்திலே அவனது சிலிர்த்த குரலொலி தான் சுழன்றுகொண்டேயிருந்தது.

திரும்பவும் தன்னிருப்பிடத்திலே போயமர்ந்துகொண்டான். தூக்கிவாரிப்போட்டது.

அவனருகிலே யாரோ நடமாடுவதுபோன்ற உணர்வு. காலடியோசை...........

புதுப் புடவையின் சலசலப்பு—இல்லை—அது புதுப் புடவையா? அல்லது ஈரப் புடவையா? ஈரப் புடவையின் சலசலப்பையும் ஒத்திருந்தது; புதுப் புடவையின் மொரமொரப்பாகவும் ஒலித்தது.

அவனுக்கு வெகு சமீபத்திலே—அவன் உள்ளத்தோடு உராய்ந்தபடியே—நிற்பது யார்? அவன் முகத்திலே குளுமையாகப் படுவது நிஜமாகவே மனித உருவின் மூச்சுக்காற்றுதானா.........அல்லது?............

இதெல்லாம் கட்டு மீறிப் போன மனத்தின் பேய்க் கற்பனையா? அல்லது நிஜமாக நடப்பதுதானா...........

ஜிலீரென்று அவன் முகத்திலே ஒரு உணர்ச்சி; மலர்க் கரங்களால் யாரோ தடவுவதுபோன்ற பிரமை; அவன் காதருகே கைவளைகள் குலுங்கும் கிலுகிலுப்பு............

"ஸ்ரீமதி!" என்று அலறிக்கொண்டே பந்து துள்ளுவதுபோல் துள்ளி அப்பால் போய் விழுந்தான் ஸ்ரீகாந்தன்.

ஸர்வ நிச்சயமாய் அந்த அறையில் யாரோ உலாவுகிறாள்! அவன் பக்கத்திலே வருகிறாள்: குரலும் கேட்பதுபோலத்தானிருக்கிறது! என்ன கேட்கிறாள்?.........நிஜமாகவே 'அவள்' தானா?

விளக்கேற்றிப் பார்க்கவேண்டுமென்று அவன் உள்ளத்திலே

பேராவல் துள்ளி எழுந்தது; ஆனால் விளக்குப் போட கை மட்டும் ஏனோ முன்வர மறுத்தது!

மறுபடியும் ஈரப்புடவையின் சலசலப்பு—அல்லது புதுப் புடவையின் மொர மொரப்பு—கை வளைகளின் கிலுகிலு ஒலி.........

தன் முழுபலத்தையும்சேர்த்துக் கொண்டு, "ஸ்ரீமதி!" என்றுகூவியழைத்தான் ஸ்ரீகாந்தன்.

பதில் ஒன்றும் வந்ததாகத் தெரியவில்லை.

'ஸ்ரீமதி!" என்ற அவன் கூக்கூரல் அலை அலையாக அந்த அறையெங்கும் எதிரொலித்தது.

பழைய நிசப்தம் நிலவியது.

மல்லிகையின் மணம், புடவையின் ஓசை. வளையல் ஒலி—எல்லாம் திடீரென்று மறைந்துவிட்டதுபோலிருந்தது. பழய கல்லறை அமைதி திரும்பிவிட்டது.

நடுங்கும் கரத்துடனே விளக்கைப் போட்டான் ஸ்ரீகாந்தன்; மின்சார ஒளி அறையில் பாய்ந்து பரவியது.

அறையில் அவனைத்தவிர யாருமில்லை!

வெளியே மழை பெரிய அளவில் தூறிக்கொண்டிருந்தது;காற்றோடு வந்த சாரல் ஜன்னல் வழியே உள்ளே புகுந்து அறையில் பாதியை ஈரமாக்கிவிட்டிருந்தது.

ஸ்ரீகாந்தன் உள்ளத்திலே ஒரே கேள்வி: ஸ்ரீமதி வந்தது நிஜம் தானோ?

3

அவள் மறுபடியும் வருவாளோ வென்ற நினைப்புடனே ஸ்ரீகாந்தன், தூக்கமின்றி, படுக்கையில் புரண்டு கொண்டிருந்தான்.

ஒரு பக்கம் பயமாகவும் இருந்தது: ஒரு பக்கம் ஆவலும் தோன்றியது. அன்றுமாலை நேரத்தின் மங்கிய ஒளியிலே அவன் அடைந்த அனுபவம் உள்ளத்திலே புரியாத ஒரு கிளர்ச்சியைக் கிளப்பிவிட்டிருந்தது; மனது பயங்கரக் கற்பனைகளில் ஈடுபட்டிருந்தது.

அதன் பலனாகத்தானோ அல்லது அர்த்தமற்ற கனவுகளின் விளைவோ—அவன் அடிக்கடி திடுக்கிட்டான். அமைதியின்றிப் படுக்கையில் புரண்டுகொண்டேயிருந்தான்.

பதினோருமணி அடித்து; பனிரெண்டு அடித்ததையும் எண்ணினான் ஒருமணியும் அடித்து ஓய்ந்தது.

ஸ்ரீகாந்தன் எதையோ எதிர் பார்த்துக் கொண்டிருந்தான். கண்கள் தாமாகவே மூடி மூடித் திறந்தன.........

நிசப்தம், நிசப்தம், நிசப்தம்!

கிழிக்க முடியாத அந்த நிசப்தத்தைத் துளைத்துக்கொண்டு, எங்கோ, வெகுதூரத்திலிருந்து, குழந்தையின் அழுகுரல் மிதந்து வந்தது.

அந்த அழுகுரல் வரவர ஸமீபித்துக் கொண்டே வந்தது. அவன் இருக்கும் இடத்திற்கு வெகு அருகிலேயே ஒலித்தது; இருள் சூழ்ந்த அந்த அறையிலிருந்தே சின்னஞ்சிறு குழந்தையின் அழுகுரல் வெளிப்பட்டது.

ஸ்ரீகாந்தனின் நெஞ்சுத் துடிப்பு நின்றுவிட்டது போலவே தோன்றியது.

அவன் இருக்கும் அறையில் குழந்தை அழுகுரல்!

நன்றாகக் கவனித்துக் கேட்டான்: குவா—குவா—குவா என்று சப்தம் வெகுத் தெளிவாக கேட்டது; சிறிது நேரத்திற்கொரு முறை, விட்டு, விட்டு வெளிப்பட்டது. அங்கே குழந்தை ஏது? அழும் விதத்தைப்பார்த்தால் அப்போதுதான் பிறந்த குழந்தையின் அழுகுரலாகத்தெரிகிறது!...

அவள் தான் குழந்தையுடன் வந்து விட்டாளோ?..................

ஆனால் மல்லிகையின் மணத்தைக் காணோம், புடவையின் ஓசையில்லை; கைவளைகள் குலுங்கும் ஒலியும் கேட்கவில்லை.........

குழந்தையின் அழுகை அவன் படுக்கையிலிருந்தே வந்தது! அவன் பக்கத்திலிருந்தே புறப்பட்டது!

படுத்திருந்த ஸ்ரீகாந்தன் துள்ளியெழுந்தான்; கை கால்கள் வெட வெட வென்று நடுங்க—விவரிக்க முடியாத பதட்டத்துடனே படுக்கையைத் தடவிப் பார்த்தான்; அவன் கையிலே மெத்தென்று ஏதோ தட்டுப்பட்டது! அது என்ன?

அவன் மயிர்க்கால்கள் குத்திட்டு நின்றன: அலறியடித்துக்

கொண்டு அவன் அப்பால் ஓடினான்.

தடுமாற்றத்துடன் அவன் போய் விளக்கை ஏற்றுவதற்குள் குழந்தையின் அழுகுரல் ஜன்னலுக்கு அருகில் கேட்டது!

விளக்கொளியிலே அவன் அங்கு கண்டதென்ன? ஜன்னல் குறட்டிலே பூனைக்குட்டியொன்று உட்கார்ந்து ஓலமிட்டுக்கொண்டிருந்தது!

பூனைக்குட்டியின் ஓலத்திற்கும், குழந்தையின் அழுகுரலுக்கும் உள்ள நெருங்கிய தொடர்பை எண்ணி வியந்துகொண்டே ஸ்ரீகாந்தன் பூனைக்குட்டியை விரட்டினான்.

மீண்டும் விளக்கை அணைத்து விட்டுப் படுத்தான்.

சுடுகாட்டு அமைதி எங்கும் சூழ்ந்துகொண்டுவிட்டது.

அப்புறம் வெகு நேரமாக ஒன்றுமே நிகழவில்லை; அந்தப் பூனைக்குட்டி திரும்பவும் வருமோ என்று எதிர் பார்த்தான்; அது வரவில்லை...............

பயந்து பயந்து பதுங்கிய மனத்தைக் கட்டிக் கொடுத்துக்கொண்டே அவன் நெடுநேரம் கண்விழித்துக் காத்திருந்தான்.

அந்த நீள் இரவு சீக்கிரம் தொலைந்து பொழுது புலராதா என்று அவன் நெஞ்சம் ஏங்கியது.

கண்கள் கனத்து எரிந்தன; இமைகள் தாமே மூடிக்கொண்டன.

இதென்ன! மீண்டும் மலர்ந்த மல்லிகையின் மணம் மிதந்து வருகிறதே!

அவன் முகர்ந்து முகர்ந்துபார்த்தான்—ஸந்தேகம் தெளிவுறச் செய்துகொள்வதற்காக.

ஸந்தேகமில்லை; ஸ்ரீமதி தான் வந்துவிட்டாள்!

ஸ்ரீகாந்தன் கண்ணைத் திறந்து மையிருட்டிலே கூர்ந்து கவனித்தான்.

இதோ—அவன் படுக்கைக்குப் பக்கத்திலே புடவை பேசுகிறது! கைவளைகள் குலுங்குகின்றன......



அவன் இன்னும் உன்னிப்பாய் உற்று நோக்கினான்.

இதோ — அவளே! ஸாக்ஷாத் ஸ்ரீமதியே நிற்கிறாள்! அவளை ஆசையோடு பார்க்கிறாள்!

'ஸ்ரீமதி!' என்று அனுமானுஷ்யமான அலறல் ஸ்ரீகாந்தனிடமிருந்து வெளிப்பட்டது.

அப்படியே தாவி 'அவளை' இறுகச்சேர்த்து அணைத்துக்கொண்டான்.

அவளது தேகமாத்யந்தம் ஜிலீரென்று குளிர்ந்த தண்ணீர்பட்டதுபோல் உணர்ந்தான்; திடுக்கிட்டுப் பின்வாங்கினான்.

"ஐயோ, ஸ்ரீமதி! ஈரம் சொட்டச்சொட்ட இப்படி வந்து நிற்கிறாயே! அகாலத்திலா ஆற்றில் குளிக்கப்போனாய்?" என்று அழுது புலம்பினான் ஸ்ரீகாந்தன்.

ஸ்ரீமதியின் சிரிப்பொலி கேட்டது.

"ஸ்ரீமதி! ஏனிப்படி பிரேதம் மாதிரி சிரிக்கிறாய்? ஐயோ— ஏன் போகிறாய்? போகாதே! என்னைத்தனியே தவிக்கவிட்டுப் போகாதே, ஸ்ரீமதி! ஸ்ரீமதி!! ஸ்ரீமதி!"

ஸ்ரீகாந்தனின் குரல் படிப்படியாக உயர்ந்துகொண்டேபோய், கடைசியில் பிரேதத்தை நேரில் பார்த்துப்பேசியவனுடைய அமானுஷ்யக் குரலிலே பயங்கரமாக ஓலமிட்டது.

போகும் அவளைப் பின்தொடர்ந்து அவனும் ஓடினான். அறைக் கதவிலே 'தடா'ரென்று மோதிக்கொண்டு விழுந்தான்.

சுய உணர்வுபெற்றதும் ஸ்ரீகாந்தன் சுற்றிலும் சூழ்ந்திருந்த அமைதியை உணர்ந்தான்.

படுக்கையின்மீது படுத்திருந்தவன் எப்படிக் கதவடியில் வந்து கிடந்தானென்பது அவனுக்கே ஆச்சர்யமாய் இருந்தது. அவன் அணிந்திருந்த சட்டை பூராவும் ஒரே தெப்பமாக நனைந்திருந்தது. மெதுவாக சமாளித்துக்கொண்டு விளக்கை ஏற்றினான்.

விரித்திருந்த படுக்கை அலங்கோலமாகக்கிடந்தது. அதிலும் இங்குமங்குமாக ஈரம் காணப்பட்டது.

உண்மையில் அவன் வியர்வை வெள்ளத்திலேதான் மிதந்து கிடந்தானா? அல்லது ஆற்றுக்கு குளிக்கப்போய் வந்த அவள் ஈரம்தானா?

அதற்கப்புறம் அவன் விடியும் வரையில் விளக்கை அணைக்காமல் விழித்துக்கொண்டே உட்கார்ந்திருந்தான்.

4

அந்த அறையில் இருக்கவே பிடிக்கவில்லை ஸ்ரீகாந்தனுக்கு, அதுவும் அஸ்தமன சமயம் நெருங்க நெருங்க அவன் மனம் அமைதியிழந்து தத்தளிக்கத் தொடங்கியது.

ஆகவே, ஸ்ரீகாந்தன் அறைக் கதவைப் பூட்டிக்கொண்டு, நிம்மதியை நாடி, ஊரை அடுத்து ஓடிய காவேரி ஆற்றங்கரையை அடைந்தான்.

ஆற்றிலே புது வெள்ளம் பெருகிக் கொண்டிருந்தது. இரு கரைகளையும் தழுவியபடி கம்பீரமாக ஓடிக்கொண்டிருந்தது.

கரையில் அமர்ந்தபடி ஸ்ரீகாந்தன் ஆற்றின் அழகையும், சுற்றுப்புற எழிலையும் ஆனந்தமாகப் பருகிக்கொண்டிருந்தான்.

இருகரையிலும் ஓங்கி வளர்ந்திருந்த விருட்சங்களிலே காக்கைகள் உள்பட, பலஜாதி பட்சிகளும் வீடடைந்த ஆனந்தத்திலே பல குரல்களில், உற்சாகமாகக் கீச்சிட்டுக் கூவின.

"வேடனின் கற்பனை"— என்று பெயர் கொடுக்கும்வண்ணம் பிரபல ஜப்பானிய சைத்திரிகர் ரையூஷி காவாபட்டா என்பவர் ஒருசித்திரத்தைத் தற்போது திட்டியிருக்கிறார். பலவிதமான ஆயுதங்கள் தாங்கிய வேடனின் தோற்றத்தில் ஒரு ஸ்திரீ மாதிரியும், குதிரையின் உருவம் ஒரு புறத்திலும், குள்ளநரி, வனப்பிரதேசம், போன்ற இதர தோற்றங்களையும் அவர் தமது சித்திரத்தில் வரைந்து காட்டியுள்ளார்,

---

ஆற்றின் மேலைக் கோடியிலே மூழ்கும் மாலைக் கதிரவனின் கடைசிக் கதிரும் மறைந்து வெகு நேரமாகிவிட்டது; கூடடைந்த புள்ளினங்களின் கோஷமும் ஓய்ந்துவிட்டது. குமிழியிட்டுக் குதித்தோடும் காவேரியின் மெல்லிய சிரிப்பொலிமட்டும் இடையிடையே அமைதியைக் கலைத்து நின்றது.

ஸ்ரீகாந்தன் தன்னை மறந்து அந்த அழகிலே ஆழ்ந்திருந்தான்.

திடீரென்று, சற்று தூரத்திலே தண்ணீரிலே ஏற்பட்ட ஒரு சிறு சப்தம் அவனைத் தலை நிமிர்ந்து பார்க்கத் தூண்டியது.

இருட்டும் வேளையில், நிர்மானுஷ்யமான அந்த இடத்தில், ஆற்றுக்கு குளிக்க வந்திருக்கும் அந்தப் பெண் யார்?

எதற்காக அவன் இருக்கும் பக்கம் அடிக்கடி திரும்பிப் பார்த்து புன்னகை செய்கிறாள்?

அவனைப் பார்த்தபடியே ஆற்றில் இறங்குகிறாள்; முழங்கால் அளவு ஜலம்; இடுப்பளவு ஜலம்—

துணிவுடன் இன்னும் ஆழத்தில் இறங்குகிறாளே! நீந்தவும் தெரியுமோ?

மார்பளவுக்குத் தண்ணீர் வந்துவிட்டது; கழுத்தளவுக்கும் ஏறிவிட்டதே!...........

ஐயோ! மூழ்கிவிட்டாள்!

நீந்தத்தெரியவில்லை; தத்தளிக்கிறாள்; வெள்ளத்தோடு போகிறாளே! ஐயய்யோ!.........

யார் அது?...............

"ஐயோ! ஸ்ரீமதி! நீதானா!" என்ற அலறல் ஆற்றின் இரு சிறகிலும் பேயாய்ப் புகுந்தோடி எதிரொலித்தது...........

கரைமீது வெறிபிடித்தவனைப் போலே ஓடிவந்த ஸ்ரீகாந்தன் தொபீரென்று நட்டாற்றில் குதித்து விட்டான்!

'குபு-குபு-குபு'வென்று சிறிது நேரம் நீர் குமிழியிட்டது: அதிர்ச்சி பொறுக்கமுடியாமல் ஆறு அலை வீசியது.

பின்னர் அதுவும் அடங்கிவிட்டது.

ஒ.ன்றும் அறியாததுபோலே ஆறு அமைதியுடன் ஓடலாயிற்று.

நாலாபுறமும் மரண அமைதி கவிந்துகொண்டது.

சிசுமுகன்

சு. சுந்தரலிங்கம்

(1)

'சிசமுகன்' என்ற சிங்கராஜா
'சுசுலி' என்னும் காட்டினிலே
வசதியாக வாழ்ந்திட்டார்
வந்தார் பவனி ஒரு நாளே

(2)

காட்டினில் கண்டார் காட்சிகளை
கருதி மனமும் விட்டிருந்தார்
நாட்டில் வாழும் நல் ஒருவன்
நெடிது வளர்ந்த மகளவளாம்

(3)

அவள் பெயர் நல்ல சுந்தரியாம்
அவளும் அங்கே சுற்றி வந்தாள்
கவனம் இட்ட சிங்கராஜன்
கவலை கொண்டார் மணந்திடவே

(4)

மணந்திட அவரும் கேட்டிட்டார்
மனமும் இசையவிலை சுந்தரியே
நாணமும் மிகுதியால் சென்றிட்டாள்
நானும் மணந்திடேன் என்றிட்டு

(5)

சென்றார் சிசமுகன் தகப்பனிடம்
சொல்லிக் கேட்டார் அவன் மகளை
'கொன்று விடுவாய் என் பெண்ணை
கொடேன்' என்று கூறினரே

(6)

'இராச்சியம் பாதித்தந்திடுவேன்
இரத்தினம்பலவும் கொடுத்திடுவேன்
பாராமல் உன் பெண் கொடுத்திடுவாய்
பரிவுடன் நானும் காத்திடுவேன்

(7)

இன்புற நானும் கூறுகிறேன்'
என்று சொன்னார் சிங்கராஜா
'நன்றாய் என் சொல் கேட்டிடுவாய்
நினைத்து மனம்போல் செய்திடுவாய்

(8)

கொடிய உந்தன் கூர் நகமும்
கடித்திடும் நல்ல பற்களுமே
அடித்திடச் செய்திடும் எந்தனையே
என்று அழுகிறாள் என் மகளே

(9)

ஆதலால் உந்தன் நகங்களையும்
அகற்றிடு கொடிய பற்களையும்
இதயம் உருகப் பெண் கொடுப்பேன்'
என்று அவள் அப்பன் கூறிட்டார்

(10)

'செய்திடு' என்று சிங்கராஜா
சாய்ந்து கொடுத்தார் சில நேரம்
பிய்த்தார் கொடிய நகங்களையும்
பிடுங்கினார் எல்லா பற்களையும்

(11)

வலியோ சிறிதும் தாங்காமல்
வளைந்தார் அவரும் ஐயய்யோ
சலிப்பாய்க் கதறினார் சிங்கராஜா
சகலமும் அவள் அப்பன்
[பிடுங்கிட்டார்

(12)

சோர்ந்திடா வலியால் அலறிட்டு
சிசமுகன் சென்றார் எமலோகம்
நர்த்தனம் ஆடினான் சுந்தரியும்
நினைத்து அப்பன் செய்கைகளை.

இதுவரையில்...

[எட்டாம் நூற்றூண்டிலே ராஜஸிம்ம பாண்டியன் ஒரு சக்கரவர்த்தியாக ஆட்சி செலுத்தி வந்தான். இவன் கங்கராஜனை வென்று அவனுடைய மகளான பூசுந்தரியை மணந்து பட்ட மகிஷியாக்கிக்கொண்டிருந்தான். தெற்கே சேரனையும் வென்று தயாள குணத்துடன் அவனுக்கு வேண்டிய உதவிகளும் செய்திருந்தான். எனினும், சேரன் பாண்டிய சக்கரவர்த்திக்கு விரோதமாய்க் கலகம் செய்து கன்னியாகுமரியை ஒட்டியிருக்கும் நாஞ்சில் நாட்டைத் தனதாக்கிக் கொண்டான். பாண்டியன் மீண்டும் படையெடுத்துப் போய் சேரனை அடக்கி, அவனிடம் மறுபடியும் தயாளமாக நடந்துகொள்ள வேண்டுமென்று தீர்மானித்து அவனைத் தனக்கு ஒரு சேனுபதியாகவும், மந்திரியாகவும் ஆக்கிக் கொண்டான். சேரனே கெட்ட எண்ணத்தை விட்டுவிடவில்லை. ஒரு பௌத்த பிட்சுவுடன் சூழ்ச்சி செய்து, பாண்டிய வீர மன்னனுக்கு அஹிம்ஸா தர்மப் பிரசாரம் செய்யும் வியாஜத்தால், பாண்டி நாட்டில் குழப்பம் உண்டாக்கவும், பாண்டியனுள்ளத்தைக் கெடுக்கவும் முயல்கிறுன். இந்நிலையில் இராஜ புரோகிதரான செல்வநம்பி ஒரு பண்டித சபை கூட்டி, மன்னனுக்கு ஆறுதல் அளிக்க எத்தனிக்கிருர். இச் சபைக்கு எப்படியாவது ஸ்ரீவில்லிபுத்தூரிலிருந்து விஷ்ணுசித்தரை அழைத்து வரவேண்டுமென்று அரசனும், அரசியும், ஒருவருக்கொருவர் தெரியாத நிலையில் மாறுவேடம் பூண்டு போய்க் காரியசித்தி பெறுகிருர்கள். இது பௌத்த பிட்சு முதலானவர்களுக்குப் பொருமையுண்டாக்குகிறது.]

23
விசாரணையும் தீர்ப்பும்

ராஜஸிம்மன் என்ற நெடுமாறவர்மன் இரத்தினங்கள் இழைத்த பொற்சிங்காதனத்தில், சந்திர வட்டக் குடையின்கீழ், தலையிலே சூரியன்போல் தகதகவென்று ஒளிவீசும் வைரக் கிரீடமும், கழுத்திலே நட்சத்திரமாலைபோன்ற முத்துமாலையும் அணிந்து கொலுவீற்றிருக்கிருன். அருகே மகாராணி பூசுந்தரிதேவி சிறந்த ஆடையாபரணங்களைத் தேர்ந்தெடுத்து அணிந்துகொண்டவளாய், ஆபரணங்களுக்கெல்லாம் ஆபரணமாக வசீகர ஒளிக்கதிர்கள் அலைவீசும் இனிய முகமும் சுடர்விடும் கண்களுமாய், அமர்ந்து நாலுபக்கமும் பார்த்துக் கொண்டிருக்கிருள்.

ராணியின் முகத்தில் இன்று அழகைக் காட்டிலும் அதிக அளவில் உறுதியும் நிலையான வெற்றியும் பிரதிபலித்த ஒரு மாட்சிமை கொலுவிருப்பதுபோலத் தோன்றுகிறது—அன்பே உருக்கொண்ட பரமரஸிகையாக இருந்தவளின் உள்ளத்தில் இப்போது பக்தி நிறைந்திருந்ததால், மகாராணியின் மாட்சிமையில் சாந்தம்கொஞ்சுகிறது; அன்பு ததும்புகிறது, அபூர்வ சோபை பொலிகிறது.

மன்னனுடைய சிங்காதனத்திற்கு அருகே செல்வநம்பி பக்திச் செல்வமே உருவெடுத்து வந்ததுபோல் வீற்றிருக்கிருர். அவரை அடுத்து மந்திரிமாறங்காரி ஆலோசனையில் ஆழ்ந்தவராய் தீவிர ஒளிநிறைந்த நெற்றியில் கவலைக்கோடுகள் தோன்ற வீற்றிருக்கிருர். அவருக்குப்பக்கத்தில் தளபதி வில்லி வீரத்தோடு சோகம் போராடும் முகத்தினனுய் அமர்ந்திருக்கிருன். இருபுறத்தும் பரிவார வீரர்கள் வாள், ஈட்டி முதலான ஆயுதங்களுடன் வரிசையாக நின்றுகொண்டிருக்கிருர்கள்.

ராஜஸிம்மன்:— 'கைதிகளெல்லாரையும் கொண்டு வந்திருக்கிறீர்களா?'

வில்லி:— 'கலகக்காரர்களில் முக்கியமானவர்களெல்லாம் இங்கே விசாரணைக்குச் சித்தமாயிருக்கிருர்கள்.'

சாதாரணக் கலகக்காரர்களையெல்லாம் விசாரிக்க ஒரு நீதிமன்றம் அமைத்துவிட்டால்போதுமல்லவா?' என்று அரசன் செல்வநம்பியை வினவினன். அதற்கு அவர் 'அதுதான் சரியான காரியம்; இல்லையா?' என்று சொல்லிக்கொண்டே அமைச்சரை நோக்கினர். அமைச்சரும் ஒப்புக்கொள்ளவே, மாறங்காரியும் செல்வநம்பியும் தம்முள் கலந்து ஆலோசித்து, 'ஐந்து அறிஞர்கள் அடங்கிய ஒரு நீதிமன்றத்தை அமைத்து விடலாம் என்று தீர்மானித்தார்கள்.

பிறகு இரண்டு முக்கியஸ்தர்களைமட்டும் இன்றைய தர்பாரில் விசாரித்தால்போதும் என்று அரசனும் செல்வநம்பியும் அமைச்சரும் தம்முள் கலந்து தீர்மானம் செய்துகொண்டார்கள். அவர்கள் யார் என்று சொல்லவும் வேண்டுமா? சேரலாதனும் ஆனந்ததீர்த்தரும்தான் —வாசகர்கள் எளிதில் ஊகித்துக்கொண்டிருக்க முடியும்.

முதலில் சேரலாதனை ஆஜர் செய்யும்படி ராஜஸிம்மன் கட்டளையிட்டான். ஆயுதபாணிகளான போர் வீரர்கள் விரைவில், முதுகோடு சேர்த்துப் பூட்டிய கை விலங்குடன் சேரனைக் கொண்டு வந்து சபைமுன் நிறுத்தினர்கள். அப்போதும் ராஜசின்னங்களான அணிகள் அவன்மீது காணப்பட்டன. அவற்றை எடுத்துவிடவேண்டாமென்று பாண்டியன் முன் கூட்டியே கட்டளையிட்டிருந்தான். சேரன் சபைமுன் அணிகளுடனும் விலங்குடனும் வந்து நின்றதும், கைவிலங்கை கழற்றிவிடும்படி மகாராணி அரசனிடம் வேண்டிக்கொள்ள, அவனும் அப்படியே உத்தரவு செய்தான்.

தன் காலம் நெருங்கிவிட்டதென்றே சேரன் நினைத்தான். சில தினங்களிலேயே, பல ஆண்டுகள் கழிந்து அதிக வயதாகிவிட்டவன்போல் காணப்பட்டான். 'நான் இதுவரையில் சேர மன்னர்களின் வீரபரம்பரைக்குத் தகுந்த ரீதியில் நடந்துகொண்டேனில்லை. இனி இந்த அந்திய காலத்திலாவது ஒரு வீர மன்னனாக நடந்து கொள்வேன்' என்று சேரன் தனக்குள் தானே சொல்லிக்கொண்டான்.

அப்போது ராஜஸிம்மனும், மகாராணியும் ஏதோ இரகசியமாகப் பேசிக்கொண்டிருந்தார்கள். சில நிமிஷங்களில் அந்தப்பேச்சு முடிந்ததும், அரசன் செல்வ நம்பியுடனும் அமைச்சருடனும் தளபதியுடனும் சிறிது பேசிவிட்டு, ஒரு ராஜ சேவகனை நோக்கி, 'சேர அரசனுக்கு ஓர் ஆசனம் கொண்டுவந்து போடு' என்று கட்டளையிட்டான். அது சபையில் இருந்த படை வீரர்களுக்கும் பிறருக்கும் அதிசயமாயிருந்தது. ஆசனம் அளித்ததைக்காட்டிலும் தன்னை 'அரசன்' என்று பாண்டியன் குறிப்பிட்டது சேரனுக்கு அதிக ஆச்சரியத்தை விளைவித்தது.

சேரன் ஆசனத்தில் அமர்ந்ததும் பாண்டியன் அவனை நோக்கி, 'நான் இப்போது ஒன்று கேட்க விரும்புகிறேன். அதற்கு நீங்கள் உண்மையாக விடையளிக்க இயலுமா?' என்று கேட்டான். அதற்குச்சேரன், 'மலை நாட்டு வீரமன்னர்களுக்குப் பொய் சொல்லத் தெரியாது' என்று பதில் சொன்னன்.

பாண்டியன்:—'அது அந்தக் காலத்திலே, இமயவரம்பன், செங்குட்டுவன், பெருஞ்சேரலாதன் முதலான பெரியோர்கள், வாய்மையே வீரத்திற்கு அழகு என்ற கொள்கையுடன் வாழ்ந்தார்கள். தாங்கள் அப்படி நடந்துகொண்டதாக நெஞ்சிலே கைவைத்துச்சொல்லமுடியுமா?'

சேரன்:—'இப்போது அந்தப் பரம்பரைக்குத் தகுந்த விதமாகவே நான் நடந்துகொள்வதாக உறுதிகொண்டிருக்கிறேன்'

பாண்டியன்:—'அதை எப்படி இப்போது நம்ப முடியும்? இதற்குமுன் நான் தங்களை நம்பி நம்பி ஏமாறிப்போகவில்லையா? தமிழரசர்களின் கௌரவத்தைக் காப்பாற்றவேண்டுமென்று வடநாட்டிலே படையெடுத்துச் சென்றுன், தங்கள் முன்னேனாகிய செங்குட்டுவன். அந்த மரபில் வந்த தாங்களோ வாக்குத் தவறி, 'தமிழரசர்கள் வாய்மைக்குப் பேர் போனவர்கள்' என்ற பேரையும் புகழையும் கெடுத்துவிட்டீர்கள். இப்படி நான் சொல்வது உண்மை இல்லையென்று தாங்கள் மறுக்க முடியுமா?'

சேரன்:—'அந்த நிலைக்கு என்னைக்கொண்டு வந்துவிட்டது தாங்களே. தமிழரசர்களை இகழ்ந்து பேசிய வடநாட்டு மன்னர்களான கனக விஜயர்களைத் தண்டிப்பதற்காகப் படை கொண்டுபோனுன் செங்குட்டுவன். தாங்களோ அத்தகைய சேரவம்சத்தையும் அடிமைப்படுத்தி விட்டீர்கள். அடிமைக்கு வீரம் ஏது, வாய்மை ஏது?'

இந்தப் பதிலைக் கேட்டதும் பாண்டியன் சிறிது நேரம் சும்மா இருந்தான். அப்போது மந்திரி மாறங்காரி, 'சேரநாடு சுதந்திரம் இழந்ததற்குத் தங்கள் பலவீனம் காரணமில்லையோ?' என்று கேட்டார். அதற்குச் சேரன், 'பராக்கிரமசாலியான பாண்டியரும் செங்குட்டுவனைப்போல் மற்றத் தமிழரசர்களின் பலவீனத்தைச் சுயநலமாகப் பயன்படுத்திக்கொள்ளாமல், தமிழர்களின் பொது நலத்திற்குப் பயன்படுத்திக்கொண்டிருந்தால், என்னைப் போன்றவர்கள் இத்தகைய நிலையை அடைந்திருக்கமுடியுமா?' என்று ஒரு பதில் கேள்வி கேட்டான்.

அதற்கு அமைச்சர் பதில் சொல்வதற்குள் மகாராணி, 'அது இருக்கட்டும். பாண்டிய மன்

னர் செய்த உதவிகளைத் தாங்கள் மறந்துவிட்டீர்களே; இல்லையா?' என்று கேட்டாள்.

'அதற்காக, எங்கள் பரம்பரைக்கு உரிய வீர சுதந்திர விருப்பத்தை என்னால் மறக்கமுடியவில்லையே!' என்று பதில் சொன்னான் சேரன்.

அப்போது பாண்டியன் சேரனை நோக்கி, 'நான் உங்களை அடிமையாக்கவில்லையே. தோழராகத்தானே நடத்தினேன்' என்றான்.

'எஜமானருக்கும் அடிமைக்கும் என்ன தோழமை இருக்கமுடியும்?' என்றான் சேரன்.

பிறகு பாண்டியன், அது போகட்டும். எங்கள் ஏகாதிபத்தியத்திலிருந்து பூர்ண சுதந்திரம் பெறுவதற்குத் தாங்கள் உரிமையில்லாதவர்கள் என்று நான் சொல்லவில்லை. தாங்கள் பாண்டிய மகாராஜ்யத்தின் தென்கோடியிலும் படையெடுத்து வந்த செந்தமிழ்நாட்டின் முக்கியமான பகுதியான கன்னியாகுமரி, கோட்டாறு முதலான பகுதிகளையும் வசப்படுத்திக்கொண்டீர்களே! அப்படியிருந்தும் நான் மன்னித்துவிடவில்லையா?' என்று கேட்டான்.

அதற்குச் சேரன் சொன்னான்; பாண்டிநாடுதான் தமிழ்நாடு என்பதுபோல நீங்கள் பேசுகிறீர்கள். சேரநாடும் தமிழ்நாடுதான் என்பதை எங்கள் நாட்டிலுள்ள கல்வெட்டு, செப்பேடு, ஓலைப்பிரமாணம் முதலியவை இனிது புலப்படுத்துமே! மேலும் நீங்கள் குறிப்பிடும் நாட்டுப்பகுதிக்கு நாஞ்சில்நாடு என்று பெயர். நாஞ்சில் வள்ளுவன் ஆண்ட நஞ்சைவளம் மிகுந்த அந்த நாட்டுப்பகுதியை "மாமதில்போல் மலை ஆளும் நாடு" என்று கூறுவதுண்டல்லவா? மலை ஆளும் நாடு மலையாளநாடு தானே? அதை எப்படிப் பாண்டியநாடு என்று பாத்தியதை கொண்டாடுகிறீர்கள்?'

அப்போது மாறங்காரி சேரனைநோக்கி, 'பூசல்களிலும் சூழ்ச்சிகளிலும் பொழுது போக்கிய தங்களுக்கு இலக்கிய, சரித்திர உண்மைகளைத் தெரிந்துகொள்வதற்கு அவகாசம்தான் ஏது? தெரிந்துமறந்திருந்தால் ஞாபகப்படுத்துகிறேன். தெரியாதென்றால் இப்போதாவது தெரிந்துகொள்ளுங்கள். சங்க இலக்கியங்களில் பஃறுளி என்று சொல்லப்படும். ஆற்றைக் குறித்துக் கேட்டிருக்கிறீர்களா?' என்று கேட்டார்.

'அந்த வார்த்தையைத்தான் அவரால் சரியாக உச்சரிக்க முடியுமா?' என்று கேட்டான் வில்லி.

என்னை இப்போது குற்றவாளியாக விசாரிக்கிறீர்களா? பள்ளிப்பிள்ளையாக்கிப் பரீட்சை செய்கிறீர்களா?' என்று சேரன் எதிர்க்கேள்வி கேட்டான்.

மாறங்காரி அக்கேள்வியை லட்சியம் செய்யாமலே, 'பஃறுளி' என்ற அந்த ஆற்றின் முதல் அணை கட்டியது பாண்டியன் என்பதை அறியாதார் யார்? அந்த அணையைப் "பாண்டியன் அணை" என்று தானே ஜனங்கள் இன்றும் சொல்லுகிறார்கள்? ஆற்றின் பெயரைக் "கோட்டாறு" என்றும், "தந்த நதி" என்றும் மாற்றி ஒரு புராண கதையும் புனைந்து விட்டார்கள். கோடையிலும் பல்துளி நிறைந்து நீர்வளம் சுரப்பதால் பஃறுளி என்று பேர்பெற்ற அந்த ஆறே நாஞ்சில் நாட்டின் செழுமைக்குக் காரணமான பழைய ஆறு. இப்படி எத்தனையோ சான்றுகள் சொல்லிக்கொண்டே போகலாம் நாஞ்சில் நாட்டைப் பாண்டிநாட்டின்பகுதிதான் என்று ருசுப்படுத்துவதற்கு. ஆனால் குற்ற விசாரணை செய்யும்போது இந்தச் சரித்திர விசாரமெல்லாம் எதற்காக?' என்றார்.

'குற்றம் சாட்டுகிறவர்களே நீதிபதிகளாகவும் இருக்கும்போது, வேறு எந்த விசாரம்தான் வேண்டியிருக்கிறது? குமரியம்மனாகிய பகவதியே சேரர்களின் தெய்வமல்லவா? ஆனால் அதைக் குறித்து என்ன கவலை?' என்றான் சேரன்.

ராஜஸிம்மன் சேரனை நோக்கி, பாண்டியர் பட்டங்களில் "குமரிச் சேர்ப்பன்" என்றும் ஒரு பட்டம் இருப்பது தங்களுக்குத் தெரியாதா? மேலும் குமரித் தெய்வமாகிய பகவதி பாண்டியர் குலதெய்வம் என்பதற்கு எங்களிடம் சாஸனம் இருக்கிறது. இப்படியெல்லாம் இருக்கும்போதும், நாஞ்சில் நாட்டுப்பகுதி எங்கள் அனுபவத்தில் இருந்து வரும்போதும், அந்நாட்டைக் கவர்ந்துகொண்டது ஒரு பெருங் குற்றம். ஏதோ பழைய சான்றுகள் இருப்பதாகக் கற்பனை செய்து அந்தக் குற்றத்தை இப்போது மறைக்கமுடியாது. எனினும் அந்தக் குற்றத்திற்காக நான் முன்னமே தங்களுக்கு மன்னிப்பு அளித்துவிட்டேன். அதற்காக நீங்கள் எனக்குத் தளபதியாய்த் தொண்டாற்றுவதாகவும் வாக்களித்தீர்கள். அப்படியானால்தான் தங்களுக்கு நல்ல புத்தி வரும் என்று கண்ணீர் துளிக்க ஒப்புக்கொண்டீர்கள். நான் தங்களை ஒரு மந்திரியாகவும் கௌரவிக்க வேண்டுமென்று எண்ணியிருந்தேன். தங்களுக்கோ நல்ல புத்தி ஏற்படுவதற்குப் பதில் வஞ்சக புத்திதான் ஏற்பட்டது. என் இராஜ்யத்திலேயே சூழ்ச்சிகளும் சதியாலோசனைகளும் செய்து போராடி என் சிங்காதனத்தையும் கவர்ந்துகொள்ள விரும்பினீர்கள். வீர சுதந்திர விருப்பம் குற்றமல்ல; அந்த விருப்பம் நிறைவேறப் போர் புரிவதும் குற்றமில்லை

யென்பதே என் கருத்து. ஆனால் இந்தத் துரோகச் செயல்களுக்கும், அராஜகக் குழப்பங்களை விளைவிக்க முயன்ற சதியாலோசனைகளுக்கும் தண்டனை வேண்டுமல்லவா?' என்று ஒரு குட்டிப் பிரசங்கம் செய்வதுபோலப் பேசிவிட்டான்.

சேரன் பதில் சொல்லாமல் மௌனமாயிருந்தான். அப்போது செல்வநம்பி, 'திருட்டுக்களே இல்லாமலிருந்த இந்தத் தர்ம ராஜ்யத்திலே எத்தனை சதியாலோசனைகள், குழப்பங்கள்! விஷ்ணுசித்தருக்கு ஊர்வலம் நடைபெறும்போதே மகாராஜாவைக் கொலை செய்துவிட வேண்டும் என்றுகூடச் சதி செய்தீர்களே, அந்தப் புனிதத் திருநாளிலே! அரசருடைய ஒப்பற்ற பெருந்தன்மையினால் அவர் அதை ஒரு குற்றச்சாட்டாகக் கொள்ளக்கூடாதென்று கண்டிப்பாய்ச் சொல்லிவிட்டார். எனினும் இந்தத் தர்ம ராஜ்யத்தை நிலைகுலையச் செய்து பொது ஜனங்களைக் கொள்ளையடித்தும் கொலை செய்தும் பல்வேறு கொடுமைகள் இழைத்ததற்காகத் தங்களுக்குக் கடுமையான தண்டனை கொடுப்பதுதான் நியாயமாகும்' என்றார்.

உடனே மாறங்காரி, 'அந்தப் பெருங் குற்றத்தோடு, பொதுஜனங்களை ஏமாற்றி அன்னிய மதத்தில் சேர்த்துவிடச் சதியாலோசனை செய்த குற்றத்தையும் சேர்த்துக்கொள்ள வேண்டுமல்லவா?' என்று கேட்டார்.

பிறகு குற்றங்களைத் தொகுத்து எழுதிச் சேரனுக்கு வாசித்துக் காட்டிவிட்டு, அவற்றை ருசுப்படுத்தக்கூடிய சாட்சிகளை விசாரிக்க வேண்டுமென்று தீர்மானித்தார்கள். அரசனும், அரசியும் அமைச்சரும் புரோகிதரும் தளபதியும் ஆகிய ஐவரும் நீதிபதிகளாக இருந்து குற்ற விசாரணை தொடங்கினார்கள். இக்குற்றங்களில் பெரும்பாலும் ஆனந்ததீர்த்தரும் தொடர் புள்ளவரென்று ருசுவாகிவிட்டதால், அவரும் தர்பாரில் ஆஜர் செய்யப்பட்டார்.

விசாரணை பல தினங்களாக நடைபெற்றது. முடிவில் இருவரும் குற்றவாளிகள் என்று தீர்மானமாயிற்று. அப்பால் எத்தகைய தண்டனை கொடுக்கலாமென்று அக்காலத்து நீதி சாஸ்திரிகளைக் கலந்து ஆலோசித்தார்கள். இத்தகைய பெரிய ராஜ்யத்துரோகங்களுக்கு யானைக்கா

லால் நசுக்கப்படுவதே அக்காலத்துக் கொடுந் தண்டனை. கலகஞ் செய்த அரசனுக்கு அத்தகைய தண்டனை கொடுக்கப்படவேண்டுமென்று தீர்மானித்தபின், வயது முதிர்ந்தவரும் அஹிம்ஸாதர்மத் துறவிவேஷத்தில் இருப்பவருமான ஆனந்ததீர்த்தரை என்ன செய்யலாம் என்று மறுபடியும் ஆலோசனை செய்தார்கள். இந்தப் பிரச்னையை எளிதில் தீர்க்கமுடியவில்லை.

ஒரு நியாய சாஸ்திரி சொன்னார்: 'கொடியவர்களான சன்னியாசிகளை மரத்தால் செய்த கூண்டுகளில் அடைத்து, பொதுஜனங்கள் கூடும் இடங்களில் அந்தக் கூண்டுகளை வைத்துவிடுவது ஒரு பழைய முறை. காற்றோட்டத்திற்கும் வெளிச்சத்திற்கும் வசதிகளுடனும், அதிக வெப்பத்தையும் மழையையும் தடுக்கக்கூடிய சாதனங்களுடனும், கூண்டுகள் அமைக்கப்படவேண்டும். வேளை தவறாமல் உணவு கொடுக்கவேண்டியதுதான். வந்தவர்கள் போனவர்களெல்லாம் பரிகாசம் செய்து இந்தத் துராத்மாக்களின் செருக்கைக் குலைப்பதுதான் இந்தத் தண்டனை முறையின் பிரதான நோக்கம். இதுவே அந்தக் கொடிய சன்னியாசிகளுக்கு ஏற்ற தவமுமாகும்' இந்த அபிப்பிராயத்தை ஒப்புக்கொண்ட ஐவரும் ஆனந்ததீர்த்தருக்கு இதே தண்டனையை அளித்தார்கள்.

* * * *

விசாரணை முடிந்தபின் நரஸிம்மனைக் குறித்த கவலை அரசனுக்கும் அரசிக்கும் அதிகமாயிருந்தது. செல்வநம்பியும் கவலைப்பட்டார். ஆனால் வில்லியும் மாறங்காரியும், அரச தம்பதிகளையும் செல்வநம்பியையும் நோக்கி, 'அவனைக் குறித்து நீங்கள் கவலைப்பட வேண்டிய அவசியமே இல்லை. எப்படியாவது உரிய சமயத்தில் வந்து சேருவான்' என்று உறுதி கூறினார்கள். மாறங்காரிக்கு 'நரஸிம்மன் தகுந்த ராஜ காரியத்தை முன்னிட்டுத்தான் தலைமறைவாய் இருக்கிறான்' என்ற நிச்சயமும் உள்ளத்தில் இடம்பெற்றிருந்தது. ஆனால் இந்த அபிப்பிராயத்தை அவர் வாய்விட்டுச் சொல்லவில்லை.

செல்வநம்பி, திருக்கோஷ்டியூருக்குப் புறப்பட வேண்டுமென்றும், மதுரைக்கு வந்து நாளாகிவிட்டதென்றும், மகாராஜா அவசரப்பட்டு அரசு துறப்பது சரியல்லவென்றும், அரச தம்பதிகளிடம் அறிவித்தார். அதற்கு அரசன், 'தாங்கள் போய் வாருங்கள். கடைசியாகக் குறிப்பிட்ட விஷயத்தை முடிவு செய்யும் பொறுப்பைக் கருணைகூர்ந்து எனக்கே விட்டுவிடுங்கள்' என்று வெகு வினயமாய் வேண்டிக்கொண்டான்.

அப்போது அங்கே வந்து சேர்ந்த மாறங்காரி அரசனுடைய முகத்தைக் கூர்ந்து நோக்கிவிட்டுச் செல்வநம்பியிடம், 'தாங்கள் இவ்வளவு அவசரமாய்ப் போக விரும்புகிறீர்களா? அரசர்பிரானின் உள்ளம் சிறிதும் அமைதி பெறாமல் துடித்துக்கொண்டிருக்கிறதே!' என்றார். அப்போதுதான் செல்வநம்பியும் முகத்தைக் கூர்ந்து பார்த்து அந்த உண்மையை உணர்ந்துகொண்டார்.

உடனே அரசி செல்வநம்பியை நோக்கி, 'சேரலாதன் எப்பேர்ப்பட்ட துரோகியாக இருந்தாலும் யானையின் காலடியில் மிதிபட்டு நசுக்குண்டு மாளவேணுமா? அதைத் தடுக்க வழியில்லையா? என்ற கவலைதான் அரசரைப் பெரிதும் ஹிம்ஸிக்கிறது' என்றாள்.

மறுபடியும் ஐவர்கூடி ஆலோசித்தார்கள். 'அது மிலேச்சத்தனமான தண்டனைதான்' என்றார் செல்வநம்பி. ஐவரும் பிரசித்திபெற்ற நீதி சாஸ்திரிகளைக் கலந்து மீண்டும் ஆலோசித்தார்கள். 'குற்றவாளிகளையும் மன்னித்துவிட்டுவிடுவது பாகவத தர்மமாக இருக்கலாம், பக்ததர்மமாக இருக்கலாம்; ஆனால் அது ராஜ தர்மம் அன்று, நீதி தர்மமன்று' என்று நீதி நிபுணர்கள் விவகரித்தார்கள்.

'அப்படியானால் தண்டனையை வேறுவிதமாக மாற்ற முடியாதா?' என்று கேட்டார் மாறங்காரி. தர்ம சாஸ்திரங்களிலும் நீதி சாஸ்திரங்களிலும் நிபுணர்களான பண்டிதர்கள், சாஸ்திர பரிசீலனைகளோடு பழக்க வழக்கங்களைக் குறித்தும் ஆலோசனை செய்து பார்த்து, 'யானைக்காலால் மிதியுண்டு சாகும் தண்டனையை மாற்றி ஆயுள் முழுதும் சிறைவாசத் தண்டனையாகச் செய்யக்கூடிய உரிமை சக்கிரவர்த்திகளுக்கு உண்டு' என்றார்கள். 'இத்தகைய ஆயுள் தண்டனை அளிக்கவும் இஷ்டமில்லையென்றால் என் செய்வது?' என்று அரசி கேட்டாள்.

பண்டிதர் பலரும் மௌனமாகிவிட்டார்கள். எனினும் சிலர் மறுபடியும் பழக்கவழக்கங்களையும் நீதிசாஸ்திர விதிகளையும் ஆராய்ந்து பார்த்து, 'துரோகியான சிற்றரசன் சக்கிரவர்த்தியின் பாதங்களைக் கழுவ வேண்டும்; பகிரங்கமாக ராஜ தர்பாரில் இப்படிச் செய்ய வேண்டும். இவ்வாறு பாதங் கழுவப்பெற்ற சக்கிரவர்த்தி துரோகியை மன்னித்து ஆட்சியையும் திருப்பிக் கொடுக்கலாம்' என்றார்கள்.

அது கேட்ட ராஜஸிம்மன், 'துரோகியாகவா பாதம் கழுவுவது? சிற்றரசனாக அல்லவா சக்கிரவர்த்தியின் பாதங்களைக் கழுவ வேண்டும்? கவனித்துச் சொல்லுங்கள்' என்றான். அப்போது வயது முதிர்ந்த பண்டிதர் ஒருவர் 'கைதியாகிய அரசர் சக்கிரவர்த்தியின் பாதங்களைக் கழுவுவார் என்ற நிச்சயம் ஏற்பட்டால், அவரைச் சிற்றரசராக ஒப்புக்கொண்டு இராஜ்யத்

தையும் கொடுத்துவிடலாம்' என்று பதில் சொன்னார்.

'ஆனால் அதில் எனக்கு ஒரு சந்தேகம். சேரன் அப்படிச் செய்ய இசைவானா?' என்று கேட்டான் வில்லி. 'இசையாவிட்டால் யானைக்காலில் மிதிபட்டு நொறுங்க வேண்டியதுதான்; அல்லது ஆயுள் தண்டனை அனுபவிக்க வேண்டியது தான்' என்றார்கள் சட்ட நிபுணர்கள்.

பாண்டியனோ அது குறித்துக் கவலைப்படவில்லை. மறுபடியும் தர்பார் கூட்டினான். 'நான் சொன்னபடி சேர மன்னர் செய்ய இசைவார் என்ற நிச்சயம் எனக்கு இருக்கிறது. ஆகவே இவரை இவருடைய ராஜ்யத்திற்கு மன்னராக ஒப்புக்கொள்கிறேன்' என்றான். சேரன் திகைத்தான்.

பாண்டியன் பேசி முடிந்ததும், ஓர் அதிகாரி தங்கப் பாத்திரத்தில் தண்ணீர் கொண்டு வந்து, 'சேர அரசே! சக்கிரவர்த்தியின் பாதங்களைக் கழுவ வேண்டும்' என்றான். சேரன் பிரமித்தான், கோபம் கொண்டான்.

பாண்டியன் உடனே அவனைத் தடுத்து, 'இப்போது நான் சக்கிரவர்த்தி இல்லை. முடி துறந்தேன். சிறுவனாகிய என் மகனுக்காக மந்திரி மாறங்காரி ஆட்சி செலுத்துவார்' என்று சொன்னான். சபை திகிலடைந்து போயிற்று.

இப்போது சேரனுக்கு விஷயம் புரிந்துவிட்டது. அவன் பாண்டியனை வணங்கி, 'இந்தத் துரோகிக்காகத் தாங்கள் முடி துறக்கவும் வேண்டுமா?' என்று கண்ணீர் பெருக்கினான்.

அதற்குப் பாண்டியன், 'என்னுடைய நன்மைக்காகவே நான் முடி துறக்கிறேன்' என்று பதில் சொல்லிவிட்டு, 'என் அருமைத் தளபதியான வில்லியின் எந்த வேண்டுகோளையும் நிறைவேற்றி விடுவதாக முடி துறப்பதற்கு முன்பே சங்கற்பம் செய்துகொண்டிருக்கிறேன். அவருடைய உதவியில்லாமல் நான் இந்த மகா ராஜ்யத்தை ஸ்தாபித்திருக்க முடியாது; சமீபத்தில் நடந்த கலகங்களையும் அடக்கியிருக்க முடியாது' என்று சபையை நோக்கிப் பேசினான்.

உடனே வில்லி எழுந்து நின்று கண்ணீர் பெருக அரசனை நோக்கி, 'மகத்தான தியாகத்தைச் செய்துவிட்டீர்கள். பல்லாண்டுகளாக நிர்மாணம் செய்துவந்த ஏகாதிபத்தியத்தை இவ்வளவு அநாயாசமாகத் துறந்துவிட்ட தங்கள் துறவுக்கு எந்தத் துறவியின் துறவுதான் எதிர் நிற்கமுடியும்? இந்தத் தியாகத்துடன் வேறொரு தியாகமும் செய்யுங்கள். என்னுடைய தமயனாரைக் கூண்டில் அடைத்து வைக்கும் தண்டனையையும் நிறுத்தி அவரையும் விடுதலை செய்யவேண்டும். இதுவே எனது வேண்டுகோள்' என்றான்.

பாண்டியன் உள்ளிட்ட அனைவரும், ஆனந்த தீர்த்தரை வில்லி 'தமையனார்' என்று குறிப்பிட்டது பற்றி ஆச்சரியத்தில் முழுகிப்போனார்கள்.

பாண்டியன் ஒருவாறு தன் ஆச்சரியத்தை அடக்கிக்கொண்டு, 'உம்முடைய வேண்டுகோள் நிறைவேறிவிட்டது. ஆனந்த தீர்த்தர் விடுதலை பெற்றுவிட்டார். ஆனால் அந்த உறவு விளங்கவில்லை. பின்னர் விளக்கினால் போதும். இப்போது அவசரமில்லை. இதோ தர்பாரைக் கலைத்துவிடுகிறேன்' என்றான்.

(தொடரும்)



19-வயதுள்ள ரமோனா ஹஸ்ஸி பாகிஸ்தானிலிருந்து லாஸ் எஞ்சல் (யு. எஸ்.) வந்தார். ரிச்சர்ட்கார்ட்வெல் என்பவர் ராணுவத்தில் சேவை செய்துவந்த போது இவ்விருவரும் சந்தித்தனர். மிஸ் ரமோனா, கார்ட்வெல், பெற்றோர்கள் செலவில் யு. எஸ். போயிருக்கிறார். அங்கு 6-மாதம் தங்குவார். மேற்படி இருவரும் பரஸ்பரம் காதலித்தால் கல்யாணம் நடக்கும்.

சென்னை ஷாவாலஸ் கம்பெனியில் அஸிஸ்டெண்டாக விருக்கும் ஸ்ரீ வி. பார்த்தசாரதியின் புத்திரி சௌ. கௌஸல்யாவுக்கும், சென்னை எலக்டிரிக் கம்பெனி அஸிஸ்டெண்டு இன்ஜினியர் சிர. பி. வி. தேவநாதனுக்கும் சமீபத்தில் திருவல்லிக்கேணி வாசுதேவபுரத்தில் விவாகம் நடந்தது.



சிவராமன் அன்று பின் ரயிலில் சியாமளாம்பாபுரம் வந்தார். சீதாராமன் விஷயத்தில் தன் அத்திம்பேர் கொண்டிருக்கும் குருட்டு நம்பிக்கையைத்தகர்த்துவிட வேண்டுமென்ற சங்கல்பம் அவருக்கு திடமாயிருந்ததால், வந்ததும் வராததுமாகத் துப்பறியும் வேலையில் இறங்கினார். சீதாராமன் தன் பெற்றோரிடமாவது, மாமாவிடமாவது வந்து சரணமடைந்திருக்கிறானா என்று தெரிந்துகொள்வதற்கு உபாயத்தைத் தேடினார். தன் வண்டிக்காரனை அனுப்பி துப்பறியச்சொன்னார். தன் கண்ணில் பட்டவர்களை ஜாடையாக விசாரித்துப்பார்த்தார். ஒரு தகவலும் அவருக்குக் கிடைக்கவில்லை. தனக்குப் போலீஸ் உதவியிருந்தால் வீட்டைப்போய் முற்றுகை போடலாமென்று நினைத்தார். அதற்கு அத்திம்பேர் இடம் கொடுக்காததுபற்றி வருந்தினார். "இருந்தாலும் அந்தப்பயல் எங்கேபோய்விடமுடியும்? தகப்பனிடம்தான் வந்திருப்பான். மாமா குடும்பத்திற்கும், இவர்களுக்கும் அதிக ஒட்டுதல் இல்லாததாலும், செல்லத்தையோ, காந்திமதியையோ காதலிக்கும் இவனுக்குத்தன் மாமா பெண்ணிடம் விருப்பமில்லாததாலும் மாமா வீட்டிற்குப்போய் இருக்கமாட்டான். இவனுக்கு வேறு ஒளிய இடமேது? ஆனால் தகப்பனாரிடம் தன் குற்றத்தைச் சொல்லாமல், ஏதோ சாதாரணமாய் ஊருக்கு வந்ததாய் சொல்லிக்கொண்டிருக்கலாம். எல்லாவற்றிற்கும் சேஷு சாஸ்திரிகளைக் கண்டால் ரகசியத்தை வெளிப்படுத்திவிடலாம். அப்படி அந்தப் பயல் இங்கு வராவிட்டாலும் வேறு எங்கேயாவதுபோய் ஒளிந்து கொண்டிருந்தாலும் அவன் யோக்யதையை தண்டோராப்போட்டு ஊர்சிரிக்க அடித்துவிடுகிறேன். வேங்கடசுப்பய்யர் ரூபாய் ஆயிரம் போனால் போகிறது என்று உதாசினமாயிருந்தாலும், இந்தப்பயல் செல்லத்திற்குக் காதல் கடிதம் எழுதிய அயோக்யத்தனத்திற்கு இவனைச் சந்தியில் இழுத்து நாலுபேர் காரித்துப்பும்படி செய்யாவிட்டால் எனக்கு மன நிம்மதி ஏற்படாது............"

சிவராமன் மனநிம்மதி இல்லாத நிலைமையில் வீட்டில் ஸ்னானத்திற்கு வெந்நீர் போடச் சொல்லியிருந்ததை மறந்து காவேரிக்கு ஸ்னானத்திற்குக்கிளம்பினார். காலைவேளையில் காவேரிக்கரை மடத்தில் ஊர் வைதிகர்கள் கூடியிருப்பார்களல்லவா? சிலர் 9, 10 மணி வரையில் ஜபதபங்கள் செய்துகொண்டு அவ்விடத்தில் தாமதிப்பார்கள். சிவராமனுக்கு யாரையாவது பார்த்து எதையாவது சொல்லவேண்டும்போல் துருதுருவென்று வந்தது.

மடத்தில் சீனு வாத்தியாரும், அவருடன் அய்யாப்பயலும் தான் தென்பட்டார்கள். சீனுவாத்தியார் ஜபதபங்களை முடித்துக்கொண்டு தர்பாஸனத்தைச் சுருட்டி எடுத்துக்கொண்டு எழுந்திருந்துவிட்டார். அவருடன் அய்யாப்பயலும் புறப்பட ஸன்னத்தமாயிருந்தான். சிவராமனைப் பார்த்ததும் சீனு வாத்தியார் க்ஷேமம் விசாரித்தார்.

"கொஞ்ச நாளாக ஊரில் இல்லைபோலிருக்கிறது"

"ஆமாம். பட்டணம் போயிருந்தேன்"

"அப்படித்தான் கேள்விப்பட்டேன். குழந்தை கல்யாண விஷயமாய் போயிருப்பதாய்ச் சொல்லிக்கொண்டார்கள். பட்டணத்தில் அக்கா, அத்திம்பேர் எல்லாரும் சௌக்யந்தானே? கல்யாணப் பிரஸ்தாபம் ஏதாவது உண்டோ?"

"இல்லாமலா — மருமாளுக்கும் நடக்கணும்—என் பெண்ணுக்கும் நடக்கவேணும்."

"உங்கள்வரந்தான்கையிலேயே இருக்கு. மருமாளுக்குத்தான் வெளியே போகவேணும்—அதுகூட ஏதோ பிரஸ்தாபம் சேஷு சாஸ்திரிகள் பிள்ளைக்கே—அங்கேயே இருக்கானே, இல்லையோ? —சீதாராமன்"

"என்ன பிரஸ்தாபம்! குடியைக் கெடுக்கிற பிரஸ்தாபம்!" என்றார் சிவராமன் கடுகடுப்புடன்.

"நானும் இது அசம்பாவிதம் என்றுதான் நினைத்தேன். இந்தப் பிராம்மணன் ஏதோ அரைகுறையாக உளறியிருக்கிறார். அதை வைத்துக்கொண்டு ஊர் புரளியாய் போய்விட்டது."

"ஊர் புரளி இதோடா நிற்கப் போகிறது! இன்னும் எவ்வளவோ கூடிய சீக்கிரத்தில் வெளியாகப்போகிறது—"

"ஏன்? என்ன?" என்றார் சந்தேகத்துடனும் பரபரப்புடனும் சீனு வாத்தியார்.

"நான் என்னத்தைச் சொல்லுகிறது? அந்தப் பயல் இங்கே வந்துட்டானோ, இல்லையோ?"

"எந்தப்பயல்? சீதாராமனா?—ஆனால் அவன் அங்கே இல்லையோ?"

"நேற்று நான் புறப்படும் முன் ஆள் கம்பி நீட்டிவிட்டான்—அவனைத் தேடிக்கொண்டு இருக்கிறார்கள்."

"ஐயய்யோ!—எங்கேயாவது ஆற்றிலே குளத்திலே...என்ன அப்படி அவனுக்கு வந்துவிட்டது... பரீட்சை தேறவில்லையோ?"

"ஆறாவது, குளமாவது—அவ்வளவு மானியானால் இந்தக் காரியங்கள் செய்யத் துணிவானா? பரீட்சையாவது, படிப்பாவது! அவனுக்கு எதற்கு படிப்பு? வெறும் கொட்டாப்புளித்தடியன். அவனை வீட்டில் கொண்டு வந்து விட்டுக்கொண்டது தப்பு. அவனுக்குச் சலுகையும் ரொம்பக் கொடுத்து விட்டார்கள். உடம்பு சும்மாயிருக்க முடியுமோ?-ஏதோ அசடு வழிந்திருக்கிறான் வெளியாகி விட்டால் என்ன செய்வது என்று கிலி பிடித்து விட்டது. வீட்டைவிட்டு ஓடத்தான் போகிறோம்—வெறுமனே போவானேன், ஏதாவது போகிற போக்கில் ஆதாயத்துடன் போகலாமென்று யோசனை செய்து போர்ஜரி செக்கின் பேரில் ஆயிரம் ரூபாய் பணத்தை அமுக்கிக்கொண்டு நழுவி விட்டான். இங்கேதான் வந்து ஒளிந்துகொண்டிருப்பான் என்று நினைத்தேன்"

"இங்கே வந்ததாகத் தெரியவில்லையே—சேஷு காலையிலே ஸ்நானத்திற்கு வந்திருந்தார். அப்படி ஏதாவது இருந்தாலும் ஜாடை இங்கிதம் தெரியுமோ, இல்லையோ? சாதாரணமாகத்தான் பேசிக்கொண்டிருந்தார். பிள்ளையைப்பற்றி எப்போதும் போலே ஒரு அத்தியாயம்ஸ்தோத்திரம் செய்துகொண்டார்—இங்கு வந்திருப்பதாய் தெரியவில்லையே. சேஷுவுக்கு ஒளிக்கத் தெரியாது. 'வெகுளி' எதுவானாலும் பத்துப் பேரிடம் சொல்லிவிடுவாரே ஒழிய கபடம் சொல்லிக் கொடுத்தாலும் வராதே அவருக்கு. ஒரு வேளை மாமாவாத்தில் போய் ஒளிந்துகொண்டிருக்கிறானோ என்னமோ"

"ஹூம். ஹூம். அங்கேபோனால் அவனுக்கு செருப்படிதான் விழும். மாமா இவனுக்குப் பெண்ணைக் கொடுக்க வேண்டுமென்று முதலில் கேட்டுக்கொண்டிருந்தார். அந்தப் பேச்சு எல்லாம் மறைந்து போய்விட்டது. இவன் பெரிய இடத்தில் போய் தட்டுக்கெட்ட மாதிரியாக நடந்துகொண்டுவிட்டு மாமாவிடம் போனால், மணி ரோஸக்காரன், படியேற விடமாட்டான்"

"ஆமாம். பெரிய இடத்து சமாசாரம் கேட்பதுகூட உசிதமில்லை. இந்தப் பயல் என்னமாதிரியாக அங்கே—?"

"குப்பை மேட்டிலிருக்கும் நாயைக் குளிப்பாட்டி சிம்மாஸனத்தில் உட்கார வைத்ததும் தலைகால் புரியவில்லை. ஆசையைப் பெரிதாய் வளர்ந்து, அதன் தூண்டுதலால்கொஞ்சம் அசடும் வழிந்து விட்டான். அது தெரிந்துவிடு முன் அந்த இடத்தைவிட்டு வெளியேற வேண்டியது அவசியமாகி விட்டது. ஒரு க்ஷணமும் அதற்கு மேல் அங்கிருந்தால் ஆபத்து நேர்ந்துவிடும் என்று நிச்சயப்படுத்திக் கொண்டான். அந்த மட்டில் பயல் புத்திசாலிதான்."

"சரிதான்—நகுஷன் ஸ்வர்க்கத்துக்குப்போனதும் இந்திராணிக்கு ஆசைப்பட்ட கதைதான் போலிருக்கிறது. நகுஷனைப்போல் அதல பாதாளத்திலும் விழுந்து விட்டான்—அப்படித்தானே வரும்—."



"போகிறதுதான் போகிறோம், வெறும் கையோடு போக வேண்டாம் என்று போர்ஜரியும் செய்து பணத்தைப் பெற்றுக்கொண்டு மறைந்துவிட்டான் — பழியை ஐயர்வாள் பிள்ளையின் பேரில் சுமத்தி விட்டான். ஏனென்றால் இப்போது அவன் தானே ஜவாப்பு சொல்லவேண்டி இருக்கிறது."

"கிருதக்னன், கிருதகனன். "கிருதக்னே நாஸ்தி நிஷ்கிருதி" அவனை ஸ்மரித்தாலும் பாபம். பஞ்சமகா பாதகத்திற்குபிராயச்

சித்தம் உண்டு. கிருதக்னனுக்குக் கிடையாது. எங்கே கிடந்தபயலை எந்த ஸ்தானத்தில் கொண்டு போய் வைத்தான் அந்த ராமநாதன்! அவனுக்கு இப்படியாப் பிரதிசெய்வது? ராமநாதன் தங்கமானபையன் — வெளுத்ததெல்லாம் பால்!—இந்த வஞ்சகனை நம்பி மோசம் போனுன். சிவ, சிவ, மஹாதேவ — இந்தப் பாபியின் வார்த்தையைப் பேசியதற்காக இன்று அகமர்ஷண ஜபம் பண்ணவேணும் ஒருநாள் மௌனம் இருக்கவேணும்—க்ருச்ரமாவது அனுஷ்டிக்கவேணும். போதும் போதும். நீங்கள் ஸ்னானத்திற்கு வந்தீர்களாக்கும். சரி நாழியாகிறது. நான்வறேன். இந்த விருத்தாந்தம் சேஷுவுக்குத் தெரியாது போலிருக்கிறது. தானே தெரியட்டும். நாமொன்றும் சொல்லவேண்டாம். என்ன அவமானம்! என்ன கஷ்டம்—பேராசை பெருநஷ்டம்! எப்போதும் நமக்குத்தகுந்ததுதான் நாம் ஆசைப்படவேண்டும். விரலுக்குத் தகுந்த வீக்கம்தானே? சேஷு பாவம் வெகுளி. பையன் ஏதோ உயர்ந்த ஸ்திதிக்கு வந்து விடப் போகிருன் என்று மனக்கோட்டை கட்டிவிட்டார். கடைசியில் இப்படியா ஆச்சு! சிவ, சிவ, ஹர ஹரா — நமக்கேன் இந்த வம்பு. அய்யாப் பயலே, கிருதக்னனின் வார்த்தையைப் பேசினுல் நமக்கு அதில் பாதி பாபம் வந்து சேரும். வா வா ஆத்துக்குப் போவோம்.—ஐயர்வாள் ஸ்நானம் பண்ணுங்கோ, நாழி ரொம்ப ஆகிவிட்டது. அய்யாப் பயலே! ஒருவரிடமும் இந்த விருத்தாந்தங்களைப்பற்றி மூச்சுப் பரியாதே! இந்தக் காதில் விழுந்ததை அந்தக் காதால் விட்டுவிடு.

* * * *

சீனு வாத்யார் வீட்டிற்குச் சென்றதும் தன் சம்சாரத்தினிடம் மட்டும் மேற்படி விருத்தாந்தத்தைச் சொல்லாமலிருக்க முடியவில்லை. அவர் சம்சாரம் பக்கத்து வீட்டிற்குத்தான் வெகு நாளாய்க் கொடுக்க வேண்டிய ஒரு முட்டை நெய்யை எடுத்துக்கொண்டு உடனே சென்று மேற்படி விருத்தாந்தத்தை அங்குவிதரணையாய்ப் பரிமாறிவிட்டு வந்தாள். அன்று மத்தியானம்அந்தஊரில் பல ஸ்திரீகள் காரியம் ஒழிந்து பொழுது போக்கிற்காக ஒருவரை ஒருவர் சந்திக்க நேர்ந்தது விந்தையிலும் விந்தை. சீதாராமன் பெயர் சந்தியில் இழுக்கப்பட்டது. அவனிடம் அசூயை கொண்டிருந்தவர்களெல்லாம் ஜய பேரிகை கொட்டினுர்கள். அவனுக்கும் காந்திமதிக்கும் ஏற்பட்ட காதல் கதைகள் விதம் விதமாய் வெளிக் கிளம்பின. அவரவர்கள் பாடாந்தரங்களை எல்லோருமே இருமுகமாய் அறிந்ததுபோல் சாதித்தார்கள். சிலர் செல்லத்தையே கதாநாயகியாக்கினுர்கள். மொத்தத்தில் சீதாராமன்தான் வசித்து வந்த வீட்டில் ஒரு உயர்குலப் பெண்ணைக் கையைப் பிடித்து இழுத்தான் என்ற அம்சம் எல்லோராலும் ஒப்புக்கொள்ளப் பட்டது. ஒவ்வொரு நாரீமணியும் சிவராமனுவது, வெங்கிடசுப்பைய ராவனுதுன்னை முதலிலேயே ஆலோசனை கேட்டிருந்தால் இந்த மானக்கேடு வராமல் இருக்க வழியை உபதேசித்திருக்கக்கூடும் என்ற தீர்மானத்தைத் தனித்தனியே நிறைவேற்றிக்கொண்டாள்.

(தொடரும்)

சத்வைத்யசாலை நஞ்சன்கூடு
"நஞ்சன்கூடு பல்பொடி"
பாக்டெரியின் சிறந்த மருந்துகள்
I.D.L.
குழந்தைகளுக்கு: 12 காஸ்மாஸ் கஸ்தூரி மாத்திரை; 18 கர்ஜன் கோரோஜனை மாத்திரை; 15 பாலக்ஸ் பேதியாக மாத்திரை
குடும்ப அவசியங்கள்: 99 ஜ்வரேக் எல்லா ஜ்வரங்களுக்கும்; 77 காலரெக்ஸ் அஜீர்ண பேதிக்கும், விஷபேதிக்கும் (காலரா); 23 பெயினே (பெயின பாம) தலைவலி, வாயுபிடிப்பு .....
தினஉதவிகள்: 61 நஞ்சன்கூடு பல்பொடி நீ 61. பல் உபாதைகளையும் கண்டிக்க; 78 கூலெக்ஸ் உஷ்ண சமன தைலம்; 55 ஜிஞ்சிப் அஜீரண, பித்த சமனி {மற்ற மருந்து ஜாபிதாவிற்கு எழுதவும்}
ஸோல் ஏஜென்ஸிகள்: யுனைடெட் கன்ஸர்ன், 54, பந்தர் வீதி, மதறஸ்

காலரா, அஜீர்ண பேதிக்கு, I. D. L. நெ. 77. காலரெக்ஸ் சிறந்த மருந்து ரூ. 1-8-0 தபாலில் அனுப்ப ரூ. 2-6-0 அனுப்பவும்.

காஷ்மீர்-குஸூம் என்ற மலர் மூலிகையை கூந்தல் வளர்ச்சிக்கு எண்ணெயில் கலக்கவும்
M.P. & Co.'s ஸான்டலக்ஸ் நறுமண சந்தனக் களிம்பு தீப்புண், வெட்டு, சொறி, பரு, புண்களுக்கு (கூடிவர உதவி)
M R ஜெட்டப்பா அவர்களின் பிரேமலீலா மைசூர் ஊதுவத்திகள் எமார்ஜஸ், அகர், அம்பர்
ஏஜென்ட்கள்: யுனைடெட் கன்ஸர்ன், 54, பந்தர் வீதி, மதறஸ்.

நம்பிக்கை பெற்ற நஞ்சன்கூடு மருந்துகளை உபயோகிக்கவும்.

டிப்போக்கள்: மதுரை, கோயமுத்தூர், கும்பகோணம், பம்பாய்.

தொண்டைப் புண்,
ஜலதோஷம்
இன்புளுயன்ஸாவுக்கு

சமனமூட்டி வியாதி பரவுதலை தடுக்கும்
பெப்ஸ் உமக்கு தேவையாகவிருக்கும்



நல்ல ருசியுள்ள பெப்ஸ் வில்லையில் மருந்து சத்துக்கள் இருப்பதால் உமது தொண்டைக்கும் சுவாசப்பைக்கும் சமனமூட்டும். பெப்ஸின் சமனமூட்டும், குணமாக்கும் கிருமிநாச ஆவிகள் தொண்டை, மார்பு, சுவாசப்பை இவற்றுக்கு சுவாசத்துடன் கலந்து பலனளிக்கக்கூடியவை. புண், கமைச்சல் வீக்கம் இவற்றை குணமாக்கி, கிருமிகளை நாசம் செய்து அடைப்பை நீக்கும்.

ஏஜண்டுகள்:— மெஸர்ஸ். தாதா & கம்பெனி. பி. டி. மதராஸ்.

பெப்ஸ் மருந்து சத்துக்கள் ஒவ்வொரு சுவாச உறுப்புக்கும் போவதைக் குறிக்கும் படம்.



PEPS

கிருமி நாச

தொண்டை & மார்பு வில்லைகள்

தொண்டை, மார்பு, சுவாசப்பை தகராறுகளுக்கு சிறந்த பலனளிக்கவல்ல நிவாரணி.

எல்லோரும் எங்கள்
பீ. எஸ். வஸ்துக்களை
உபயோகியுங்கள்

மணத்திலும், சுவையிலும் ஆரோக்கியமானது

P.S.

பெருங்காயம் – பாதம் எண்ணெய் – அம்லா ஹேர் ஆயில் – வாசனை தேங்காய் எண்ணை - கஸ்தூரி குங்குமப்பூ - கோரோஜனம் – ஊருகாய் (பஞ்சாபி) ரோஸ் பஞ்சாபிகுல்கந்து–பஞ்சாப்தேன் - முத்து பன்னீர்–ஓமவாடர் - முறப்பா, நெல்லிக்காய் – இஞ்சி, மாங்காய்.

தயாரிப்பவர்கள்:—

மதருஸ் புட்பிராடக்ட்ஸ்,
45, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு,
ஜி. டி. மதருஸ்.

ஆனந்த குஸுமாகர லேகியம்

துர்ப்பழக்கத்தால் சரீரம் மெலிந்து அங்கங்கள் உலர்ந்து, கைகால்கள் அயர்ந்து கண் பார்வை குன்றி கஷ்டப்படும் அன்பர்களே!

இந்த லேகியத்தை முறையே ஒரு மண்டலம் சாப்பிட்டு வருவீர்களாயின் மூத்திர சம்பந்தமான சகல வியாதிகளும் நீரில் சர்க்கரை இருத்தல் உஷ்ண சம்பந்தமான சகல வியாதிகளும், நரம்புத்தளர்ச்சி, பசியில்லாதிருத்தல், மலச்சிக்கல், ஞாபககுறைவு, பித்தம், காசம், க்ஷயம் போன்ற எல்லா வியாதிகளையும் கண்டித்து சரீர புஷ்டியும் உற்சாகமும் தரக்கூடிய சிறந்த ஔஷதம். பெண்களும் அருந்தக் கூடியது. பத்தியமில்லை. 20 நாட்கள் உபயோகிக்கும் டின் விலை ரூ. 2—8—0

வி. பி. பார்சலில் தேவையுள்ளோர் தபால் சிலவு அணா 14 முன் பணம் அனுப்பி பெற்றுக்கொள்ளலாம். விபரமான காட்லாக் இனாம்.

மலையாள மெடிகல் ஹால்

H. O. TRIVANDRUM
189 வக்கீல் புதுதெரு - P. B. No 27, மதுரை.

கிளை ஸ்தாபனங்கள்:— 207 நாகேஸ்வரர் வடக்கு வீதி, கும்பகோணம் 20 கோவிந்தப்பநாயக்கன் தெரு, சென்னை. G. T. 58 E தர்மராஜா கோவில் தெரு, பெங்களூர். 179 SEA ST., COLOMBO.

முக்கிய அறிவிப்பு
மந்தார விடு இலை,
தையல் இலை

சகாயமான விலைக்கு மொத்தமாகவும், சில்லரையாகவும் எங்களிடம் கிடைக்கும்.

S. மாணிக்கம்செட்டி கோ.,
6—7, ஆதியப்ப நாயக்கன் தெரு
மதராஸ் 1.

ஏஜண்டு இல்லாத இடங்களுக்கு ஏஜண்டுகள் தேவை.

கூடிய சீக்கிரம் எதிர்பாருங்கள்

மாணிக்கபஸ்பம் சிவபுரிபுகையிலை
மீனம்பாளையம் ரோஸ் புகையிலை
வாசனை பட்டை புகையிலை

வெளிவந்து விட்டது!

வாசனை பாக்குத்தூள் காலணாவுக்கு இரண்டு.

சென்னைக்கு சில்லரை விற்பனையாளர் தேவை.
வெளியூர்களுக்கு ஏஜண்டு தேவை,

தயாரிப்பவர்:

மாணிக்க விலாஸ்
11 பீட், மதராஸ் 1.

சிறந்த கூந்தல் உணவு

உங்கள் சரீரத்திற்கு நல்ல உணவு அவசியமானதுபோல் கூந்தலுக்கும் நல்ல உணவு அவசியமாகும். உங்கள் கூந்தலின் வசீகரம் நீங்கள் உபயோகிக்கும் கூந்தல் தைலத்தைப் பொறுத்ததே.

காமினியா ஆயில் (ரெஜிஸ்டர்ட்)

மூளைக்குக் குளிர்ச்சியூட்டி கூந்தல் வளர அவசியமான பலவித சத்துக்கள் சேர்ந்தது. மயிர்க்கால்களுக்கு அவசியமான போஷாக்கு அளிக்கையில் ஆரோக்யமாக வளரவும் உதவுகின்றது. பொடுவன்களைப் போக்கி, கூந்தல் உதிர்வதை நிறுத்தும்.

ஆயிரக்கணக்கானவர்கள் காமினியா ஆயில் உபயோகித்துப் புகழ்ந்துள்ளனர்.

இன்றே பரீக்ஷித்து திருப்தி அடையுங்கள்.
எல்லா ஸ்டோர்களிலும் விற்கப்படுவது.
எப்பொழுதும் உபயோகியுங்கள்.

ஆடோ டில்பஹார் (ரெஜிஸ்டர்ட்)

இணையற்ற வாசனையுள்ளது. நீடித்த நறுமணம் உள்ளது. தபால் முதலிய சார்ஜிற்கு 4 அணு ஸ்டாம்பு அனுப்பி சாம்பிள் வாங்கிப் பாருங்கள்.

Sole Agent:—ANGLO INDIAN DRUG & CHEMICAL CO.
285, Jumma Musjid, P.O. Box 2085, Bombay 2.

கப ரோக நிவாரணி

இருமல், ஈளை இருமல், வரட்சி, இளைப்பு, சுவாசம் எரைப்பு, மூச்சடைப்பு, புகைச்சல் இருமல், சாதாரண இருமல், மார்ச்சளி, அஸ்தி ஜுரம் கபத்தில் ரத்தம் வருதல், தொண்டை ரணம், ஈரல் ரணம், குலை ரணம் இவைகள் போன்ற இன்னும் எந்தவிதமான தீராத கபரோக வியாதியையும் தீர்த்து கபக் கிருமிகளைக் கொன்று கபத்தை தண்ணீராய் கரைத்து இருமலை அறவே ஒழித்து நல்ல நித்திரையைக் கொடுக்கும் — இது ஓர் நிகரற்ற சஞ்சீவி. இதற்கு பத்தியம் இடையாது—குழந்தைகளும் உபயோகப்படுத்தலாம். 1 அவுன்ஸ் புட்டி ரூ. 2. பாக்கிங் வி. பி. செலவு தனி. முன்பணமாக 50% அனுப்பவேண்டும்.

தயாரிப்பவர்கள் :

சதர்ன் இந்தியா மெடிகல் ஹவுஸ்,
மைலாப்பூர், : : மதராஸ்.

Sole Selling Agents:

என் ஸீ ஏஜன்ஸீஸ்,
2/36, Luz Church Road, MYLAPORE, MADRAS

Consult: **Dr. V. ராஜரத்னம்,**

For Nervous Debility. Diabetes, T. B., etc., at the above address.

இந்தியாவின் புகழ்

லோத்ரா

கர்பாசய ரோக நிவாரணி

கேஸரி குடீரம் லிட்., மதராஸ்

EASTERNS.394

மலபார், கொச்சி, திருவாங்கூர்
தென் கன்னடத்துக்கு
ஏஜண்டுகள் :
கொச்சி மெடிகல் ஸ்டோர்ஸ்,
மட்டஞ்சேரி (கொச்சி)

தந்தி விலாசம்: "கோகுல்" ஸ்தாபிதம் 1909. டெலிபோன் நெ. 57.

டி. எஸ். ஆர். & கோ.,

கும்பகோணம்.

(பிராஞ்சு: மன்னார்குடி)

சந்தனாதித் தைலம் - அரைக்கீரை விதைத் தைலம்

கோகுல் கூந்தல் தைலம்

கூந்தலுக்கு வளர்ச்சியையும், குளிர்ச்சியையும் கொடுப்பதில் நிகரற்றவை.

வத்திகளுள் சிறந்தது "கோகுல்" வத்திகள்

பல காய்கறி ஊறுகாய், கோகுல் வாசனைப் பாக்கு முதலிய இதர வாசனை சாமான்களும் கிடைக்கும்.

சோல் ஏஜெண்டுகள்:—
புஷ்பவனம் ஸ்டோர்ஸ்,
பைகிராப்ட்ஸ் ரோட்,
திருவல்லிக்கேணி, மதராஸ்.

(கோவை & பாலக்காடு ஏஜெண்டு)
B. Balapattabi Chettiyar,
246, Vysyal St.,
COIMBATORE.

உங்கள் எதிர்காலம்

பணமில்லைமை, தொழிலில் மாறுதல், காதல், கலியாணம், குடும்பம் பிரயாணம், எதிர்பாராத லாபநஷ்டம், படிப்பு, ஆரோக்கியம், அதிருஷ்டநாள், எண், நிறம் மற்றும் எதிர்காலத்தில் உங்களுக்கு ஏற்படக்கூடிய பலன்கள் எழுதி அனுப்பப்படும். ஜாதக நகல் அல்லது முழுப்பெயர், சுமார் வயது, செய்யும் தொழில் கடிதம் எழுதும் நேரம் குறிப்பிடவும். ஒன்று முதல் 5 கேள்விகளுக்கு பதிலளிக்க ரூ. 2. மேல் ஒவ்வொரு கேள்விக்கும் அணா 8. ஒரு வருஷத்திற்கு மாதவாரி பலன் எழுத ரூ 6. வாரப் பலனுக்கு ரூ 20. ஜாதகக் குறிப்பும் சுருக்கமான பொதுப்பலனும் எழுதி அனுப்ப ரூ 5. தபால் செலவு தனி.

வி. கே. கிருஷ்ணமாச்சாரியார்,
Astrologer & Journalist. MADRAS 5.

மெஸ்மெரிஸம்

ஆங்கிலத்தில் ஹிப்னட்டிஸம், மெஸ்மெரிஸம் என்று கூறப்படும் வசிய சக்திகளைப்பெற உங்களுக்கு விருப்பமுண்டானால், இவ்வுலக வாழ்க்கையில் வியாபாரத்தில், இல்வாழ்க்கையில் வெற்றியும், சந்தோஷமும் லாபமும்பெற இச்சையுண்டானால் இன்றே,

'ஜீவவசிய பரம ரஹஸ்யம்'

என்னும் அரிய பெரிய தமிழ் நூலைப்படித்து அதன்படி நடந்து வெற்றியையும், லாபத்தையும் பெற்று மகிழ்வீர்களாக. தமிழில் இந்தச் சாஸ்திர சம்மந்தமான நூல்கள் மிகவும் அபூர்வமாகத்தான் வெளியாகின்றன. இந்தச் சாஸ்திரத்தை நன்கு பயின்று பிறகு அப்யசித்து வெற்றிபெற்ற ஒரு மகானால் இது வரையப்பட்ட அனுபவ நூலாகும். இன்றே வாங்கிப்படித்து பயன்பெறுங்கள்.

விலை ரூ. 4—8—0.
வி. பி. செலவு அணா 9.

ஷாஜஹான் புக் டெப்போ,
30, சாந்தோம், சென்னை 4.

ஏஜண்டுகள் தேவை

★

P. M. A. முத்துக்கருப்பன் முதலியார்

புரொப்ரைட்டர்:

குமரன் மார்க் சுருட்டு கம்பெனி,

மேட்டுப்பாளையம் போஸ்ட், திருச்சி ஜில்லா.

Printed and Published by S. Chakrapani Iyengar at the "Swadesamitran" Press, Victory House, Mount Road, Madras. Editor: C. R. Srinivasan B. A.

Regd. No. 2514.

உடனடியான சேவை!

K. V. ஈஸ்வர ஐயர்,
அஸிஸ்டண்ட் அக்கவுன்ட்ஸ் ஆபீஸர்,
மத்திய மாகாணம் & பீரார்.
நாகபுரி.

நகைகள் சரியாக சமயத்திற்கு கொடுக்கப்பட்டதுமல்லாமல் நாகரீக முறையில் உன்னதமாக தயாரிக்கப்பட்டுள்ளன. தாங்கள் அனுப்பிவைத்த மூன்று நகைகளைக்கண்டு அது சம்பந்தப்பட்டவர்கள் மிகவும் திருப்தியடைந்துள்ளார்கள். தங்களது திறமைவாய்ந்த நிபுணர்களால் தயாரிக்கப்பட்டு திருப்திகரமாக நிறைவேறிய வியாபாரத்தைக்கண்டு நான் சந்தோஷப்படுகிறேன். இதற்குமேல் எதைத் தான் கடைக்காரர் அல்லது வாடிக்கைக்காரர் விரும்பமுடியும்?

(ஒப்) *K. V.* ஈஸ்வர ஐயர்.

கண்யமான வியாபாரம்!

ஸுராஜ்மல்ஸ்

நம்பிக்கையான வியாபாரிகள்
1895ஸு முதல்

313, நேதாஜி ரோட்,
மதராஸ்.